பக்கங்கள் : பதினெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 கார்த்திகை 05 வியாழக்கிழமை (20.11.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 356

# ஐந்து மாகாண சபைகளுக்கு வருடம் பிறந்ததும் தேர்தல்

## பொதுத்தேர்தல் இப்போதைக்கு இல்லையாம்!



கொழும்பு, நவம்பர் 20

வடக்கு தவிர்ந்த ஏனைய ஐந்து மாகாண சபைகளுக்கான தேர்தலை அடுத்த வருடம் பிறந்ததும் நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அரசு நேற்று அறிவித்தது.

தற்போது நாடாளுமன்றில் விவாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் 2009ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் அடுத்தமாதம் எட்டாம் திகதி நிறைவேறிய கையோடு மேற்படி தேர்தலுக்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படும் என்றும் தற்போதைக்கு நாடாளுமன்றத் தேர்தல் ஒன்றுக்குச் செல்லும் திட்டம் அரசிடம் இல்லை என்றும் அரசின் சார்பாக ஊடகத் துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேயவர்த்தன தெரிவித்தார். (18 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் இளைஞர் கடத்தல்

மன்னார், நவ. 20

மன்னார், மூர் வீதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை 12.30 மணியளவில் இனந் தெரியாத நபர்களால் இளைஞர் ஒருவர் (18 ஆம் பக்கம் பார்க்க)

**கல்விச் சுடரில்**

க.பொ.த.ப(சா) பரீட்சை

இன்று - ★ கணிதம் 1

★ தரம் 5 புலமைப் பரிசில் வழிகாட்டி

நாளை - ★ தமிழ்

## கொழும்பில் நேற்று 5 இளைஞர்கள் கைது

கொழும்பு, நவ.20

வெள்ளவத்தை, தெஹிவளை ஆகிய பகுதிகளில் நேற்றுப் புதன்கிழமை காலை இடம் பெற்ற தேடுதலில் ஐந்து இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனத் தெரி விக்கப்பட்டுள்ளது.

## பூநகரியில் பொலிஸ் நிலையம் அமைக்க அரசு துரித ஏற்பாடு

கொழும்பு, நவ.20

புலிகளின் பிடியில் இருந்து அண்மையில் விடுவிக்கப்பட்டுள்ள பூநகரிப் பிரதேசத்தில் சிவில் நிர்வாக நடவடிக்கைகளை முன்னெடுக்கும் முகமாக பொலிஸ் நிலையம் அமைக்கப்பட இருக்கின்றது எனப் (18 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு இராணுவ உதவி வழங்கும் விடயத்தில்

# இந்தியாவின் மௌனத்தால் உலகத் தமிழர்கள் கவலை!

### புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பேட்டி



இந்திய அரசு தமக்கு இராணுவ உதவிகளை வழங்குவதாக இலங்கை அரசும் இராணுவ அதிகாரிகளும் தெரிவித்து வரும் நிலையில், இந்தியா இது குறித்து மௌனம் காப்பது உலகம் முழுவதிலுமுள்ள தமிழர்களுக்கு கவலையளித்துள்ளதாக விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் 'தவீக்' சஞ்சிகைக்கு மின்னஞ்சல் மூலம் வழங்கியுள்ள பேட்டி யிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையுடனான இராணுவ உறவுகளை இந்தியா நிறுத்த வேண்டும், விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ள நடேசன், இந்தியாவின் உண்மையான நண்பர்கள் தமிழ் மக்களும், விடுதலைப் புலிகளுமே எனத் தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவத் தளபதியின் சமீபத்தைய கருத்துகள் தமிழ் மக்கள் மீது அவர் கொண்டுள்ள வெறுப்பையும் அவரது முதிர்ச்சியற்ற தன்மையையும் காட்டுகின்றன என்று தெரிவித்தார் பா. நடேசன். அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கை அரசு உள்ளூர், வெளிநாட்டு (17 ஆம் பக்கம் பார்க்க)

# முகமாலை, மாங்குளம் மோதல்களில் 3 நாள்களில் 200 படையினர் பலியாம்

### பாதுகாப்பு கண்காணிப்பகம் தகவல்

கொழும்பு, நவ.20

வன்னி மற்றும் முகமாலைக் களமுனைகளில் கடந்த மூன்று தினங்களாக இடம்பெற்ற மோதல்களில் படைத் தரப்பைச் சேர்ந்த 200 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 300க்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர்-

- இவ்வாறு செய்தி ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்கள் வருமாறு:-

முகமாலை, மாங்குளம் மற்றும் கிளிநொச்சிக்கு தென்புறமாகவுள்ள பகுதிகளில் கடந்த மூன்று தினங்களாகக் கடும் மோதல்கள் இடம்பெற்று வருகின்றன. முன்நகரும் படையினருக்கு எதிராக விடுதலைப் புலிகள் கடுமையான எதிர்த்தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனர். படைத்தரப்பில் பல நூறு பேர் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளனர். இதில் முகமாலை மற்றும் மாங்குளம் களமுனைகளில் படைத்தரப்புக்கு நேற்றுமுன் தினம் கடும் இழப்புகள் ஏற்பட்டுள்ளன.

அரச தரப்பு இத்தகவல்களை வெளியிடுவதற்கு மறுத்து வருகின்றது. எனினும், எண்ணிக்கையான படையினர் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

வழமைக்கு மாறாக (18 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி அகதிகளுக்கான தமிழக நிவாரணம் இன்று செஞ்சிலுவைக் குழுவிடம் கையளிப்பு

### இந்தியத் தூதரகம் கொழும்பில் வைத்து வழங்கும்

கொழும்பு, நவ. 20

வன்னியில் இடம்பெயர்ந்த மக்களுக் காகத் தமிழகத்திலிருந்து அனுப்பிவைக்கப்பட்ட நிவாரணப் பொருள்கள் இலங் கைக்கான இந்திய தூதரகத்தினால் செஞ் சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் இன்று கையளிக்கப்படவுள்ளன என்று செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் இலங்கைக்கான பேச்சாளர் சரசி விஜயரத்ன தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை சென்னைத் துறைமுகத்தில் இருந்து சுமார் ஆயிரத்து 700 மெற்றிக்தொன் நிவாரணப் பொருள்களுடன் சென்னையிலிருந்து கப்பல் ஒன்று கொழும்பை வந்தடைந்தது. (18 ஆம் பக்கம் பார்க்க)

## குற்றப்புலனாய்வுத்துறை பொலிஸார் கஜேந்திரன் எம்.பியிடமும் விசாரணை

கொழும்பு, நவ. 20

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரனிடம் நேற்றுக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீண்டநேரம் விசாரணை நடத்தியிருக்கின்றனர்.

கொழும்பிலுள்ள குற்றப்புலனாய்வுப் பிரிவின் தலைமையகத்தில் உள்ள 4 ஆம் மாடியில் நேற்றுக் காலை 10.30 முதல் மாலை 6.30வரை இந்த விசாரணை நடைபெற்றது என கஜேந்திரன் எம்.பி. நேற்றிரவு 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மாலை, குற்றப்புலனாய்வுப் பொலிஸார் தொலைபேசி மூலம் தம்மிடம் தொடர்புகொண்டு, மறுநாள் (நேற்றுக்)காலை (18 ஆம் பக்கம் பார்க்க)

# வன்னி மக்களுக்கான நிவாரணத்தை தடுப்பதை இலங்கை அரசு உடனடியாகக் கைவிட வேண்டும்

### சர்வதேச மன்னிப்புச்சபை வலியுறுத்து

வடக்கே விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் வன்னிப்பிரதேசத்தில் தற்போது இடம்பெறும் மோதல்களால் இடம்பெயர்ந்துள்ள சுமார் 3 லட்சம் மக்களுக்கு மனித நேய நிவாரண உதவி கிடைக்காமல் தடுக்கும் கொள்கையை இலங்கை அரசு உடனடியாகக் கைவிட வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச்சபை (அம்னெஸ்டி இன்ரர்நஷனல்) வலியுறுத்தியிருக்கிறது.

இது குறித்து அந்த அமைப்பு மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

பருவ மழை தொடங்கும் நிலையில், குறைந்தது 20 ஆயிரம் குடும்பங்கள் மழையிலிருந்து பாதுகாத்துக் கொள்ள உறைவிடம் இன்றி இருக்கின்றன.

வன்னிப்பகுதியில் மூன்றில் இரண்டு பங்கு பொது மக்கள் தங்களது வீடுகளிலிருந்து இடம்பெயர்ந்து, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில் உள்ள முகாம்களில் தற்போது (18 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வல்வையில் உள்ளூராட்சிவார இறுதிநாள் நிகழ்வு நாளை

மந்திகை, நவ.20

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் உள்ளூராட்சி வார இறுதிவிழா நாளை வெள்ளிக்கிழமை நகராட்சி மன்றச் செயலாளர் கே.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சோ.தண்டபாணிகதேசிகர், வல்வெட்டித்துறை சென். செபஸ்தியார் ஆலய அருட் தந்தை எம்.பத்திநாதர் அடிகளார் ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.


வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கே.மயிலேறும்பெருமாள், வல்வெடடித்துறை தபால் அதிபர் எஸ்.செல்வராஜா, வல்வெட்டித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் பி.கிருஸ்ணானந்தன், நெல்லியடி இலங்கை வங்கி முகாமையாளர் கே.சகாதேவன், பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் எம்.பரமானந்தம், பருத்தித்துறை நகராட்சிமன்றச் செயலாளர் ஏ.ஏ.நடராஜா, கரவெட்டி பிரதேச சபைச் செயலாளர் வி.குலநாயகம், பருத்தித்துறை பிரதேச சபை செயலாளர் எஸ்.சந்திரயோகன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் வல்வெட்டித்துறையின் வல்வை ஒன்றியத் தலைவர் எம்.தங்கவேல் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர்.

இந்த விழாவிலே வல்வை நகராட்சிமன்றத்தின் முன்னாள் தலைவர்களின் திருவுருவப்படங்கள் திரை நீக்கமும், நகராட்சி மன்றத்தில் கடமையாற்றி அண்மையில் இளைப்பாறிய உத்தியோகத்தர்கள் கௌரவிப்பும் இடம்பெறும்.

உள்ளூராட்சி வாரத்தை ஒட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கல், முகாமைத்துவ போட்டியில் வெற்றியீட்டிய சனசமூக நிலையங்களுக்கான பரிசில்கள் வழங்கள், மென்பந்துப் போட்டியில் வெற்றியீட்டிய விளையாட்டுக் கழகங்களுக்கான பரிசில்கள் வழங்கல், கரப்பந்து, கயிறு இழுத்தல் ஆகிய போட்டிகளில் வெற்றியீட்டிய உள்ளூராட்சி மன்றங்களுக்கான பரிசில்கள் வழங்கல் என்பனவும் இடம்பெறவுள்ளன.

முன்பள்ளிச் சிறார்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், நகராட்சிமன்ற உத்தியோகத்தர்கள் ஆகியோரின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (1-218)

## கண்ணீர் அஞ்சலி



எமது பணிமனையின் ஆளணி
உதவியாளர்
செல்வி ம.அன்னபாக்கியம்
அவர்களின் அன்புத் தந்தை

**சவரிமுத்து மனுவேற்பிள்ளை**

(முன்னாள் அதிபர்)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
உதவி அரசாங்க அதிபர் பணிமனை, நெடுந்தீவு.

## துயர் பகிர்கின்றோம்

எமது சக ஊழியரான
திரு.மனுவேற்பிள்ளை மரியநாயகம்
(நெவாட் ஊழியர்) அவர்களின் அன்புத் தந்தை

**சவரிமுத்து மனுவேற்பிள்ளை**

அவர்கள் 18.11.2008 அன்று காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறுவதுடன் எமது கண்ணீர்ப் பூக்களையும் காணிக்கையாக்குகின்றோம்.

இயக்குநரும், ஊழியர்களும்,
கரிதாஸ் - கியூடெக், யாழ்ப்பாணம்.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1038 நீலம்

வெற்றி இலக்கங்கள்

மிதுனம் 09 11 18 34

18-11-2008

செல்லுபடியாகும் தொடர் இல. 400206563 - 400227799

ஜக்பொட் பரிசு ரூபா. 7,311,400/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 229,430 | 20/- | 4,588,600/- |
| 2 இலக்கங்கள் | 21,150 | 40/- | 846,000/- |
| 1 இல. + லக்கினம் | 20,920 | 60/- | 1,255,200/- |
| 2 இல. + லக்கினம் | 1,902 | 200/- | 380,400/- |
| 3 இலக்கங்கள் | 565 | 1000/- | 565,000/- |
| 3 இல. + லக்கினம் | 56 | 10,000/- | 560,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 200,000/- | 800,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 7,311,400/- | - |
| மொத்தம் | | | 8,995,200/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 274,032 | | 9,495,200/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 7,824,125/-

தொடர் இலக்கம் 500228917 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2008 நொவெம்பர் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| கேகாலை | 400219245-6-24 |
| கொழும்பு | 400226502-7-24 |
| இரத்தினபுரி | 400215985-9-40 |
| கண்டி | 400213263-6-36 |
| நுவரெலியா | 400209015-8-22 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


## "தமிழ்ச்செல்வம்" நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், நவ. 20

புலவர் ம.பார்வதிநாதசிவம் எழுதிய 'தமிழ்ச்செல்வம்' இலக்கியக் கட்டுரைகளின் வெளியீட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணிக்கு கோண்டாவிலில் உள்ள சிவபூமிப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் நூலின் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசியர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசா வழங்குவார்.

நூலின் முதற்பிரதியை இளவாலை கிராம அலுவலர் பொ.இராசேந்திரம் பெற்றுக் கொள்வார். மதிப்பீட்டுரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் ஈ.குமரனும், ஏற்புரையை நூலாசிரியர் ம.பார்வதிநாதசிவமும் வழங்குவர். (201)

## நல்லூரில் இன்று நாவலர் குருபூசை

யாழ்ப்பாணம், நவ. 20

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் குருபூசை நிகழ்வுகள் இன்று நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் முற்பகல் 10 மணி முதல் இடம்பெறவுள்ளன.

துர்க்கையம்மன் தேவஸ்தான நிர்வாக சபைத் தலைவர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை 'நாவலர் காட்டிய நல்வழி' என்ற தலைப்பிலும் யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திருமதி எஸ்.முரளிதரன் 'நாவலரும் அவுரது தமிழ்த் தொண்டும்' என்ற தலைப்பிலும், ஸ்கந்தா மாணவன் ப.காண்டீபன் 'நாவலர்' என்ற தலைப்பிலும் உரையாற்றுவர்

தெல்லிப்பழை துர்க்கையம்மன் மகளிர் இல்ல மாணவிகளின் பண்ணிசையும், நண்பகல் 12 மணிக்கு அன்னதானமும் இடம்பெறவிருக்கின்றன. (1)

## இன்றைய ஆட்டம்

வண்ணை, நவ.20

யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தப் பட்டுவரும் 11 பேர்கள் கொண்ட விலகல் முறையிலான சுற்றுப்போட்டி குருநகர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு சென்.நீக்கிலஸ் வி.கழக 'ஏ' அணியை எதிர்த்து சென்.அன்ரனீஸ் வி.கழக 'பி' அணி மோதவுள்ளது. (1-160-86)

## தவறிவிட்டது

கடந்த 05.11.2008 அன்று உடுப்பிட்டிச் சந்திக்கும், வதிரிச் சந்திக்கும் இடையே இராஜகுலேந்திரன் நிர்மலாதேவி என்பவருடைய தே.அ.அட்டையும் (526594789V) வி.அ.அட்டையும், லோகநாதன் பத்மாதேவி என்பவருடைய வி.அ.அட்டையும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 'செம்பிமா', வல்வெட்டி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். J/355 [illegible] கலாம். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தகவல்:
வல்வெட்டி. த.இராஜகுலேந்திரன்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 10 ★ 04 ★ 1935
ஆண்டவன் திருவடியில் 01 ★ 12 ★ 2007

**அமரர் சின்னையா இராசா**

(ஓய்வுபெற்ற உதவிப் பொலிஸ் பரிசோதகர்)

திதி: அட்டமி (20.11.2008)

உயர்ந்த உள்ளம் படைத்த உயர்வான தலைவனே!
கணவன் இல்லை என மனைவி கலங்கிட
தந்தை இல்லை என பிள்ளைகள் கலங்கிட
மாமா இல்லை என மருமக்கள் கலங்கிட
தாத்தா இல்லை என பேரப்பிள்ளைகள் கலங்கிட
அன்பையும் பாசத்தையும் அள்ளித் தந்துவிட்டு
இவ் உலகை விட்டுச் சென்று விட்டீர்
ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டு
சென்றாலும் மறவோம் உங்களை.

சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி. (79981)
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### செல்வநாயகம் பாலகிருஸ்ணன்

(பாலக்குட்டி)



உரும்பிராய் தெற்கு, ஒஸ்கா லேனை பிறப்பிடமாகவும் இத்தாலியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வநாயகம் பாலகிருஸ்ணன் (18.11.2008) செவ்வாய்க் கிழமை இத்தாலியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வநாயகம் மற்றும் பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கதிர்காமு மற்றும் பாலாம்பிகை தம்பதியினரின் மருமகனும், யோகேஸ்வரியின் அன்புக் கணவரும்,ரஞ்சினி, ராகினி ஆகியோரின் சகோதரனும், கந்தசாமி, பிறேமராஜன், திருமதி தவமணி தனபாலசிங்கம், பாலசிங்கம், ஸ்ரீகெங்காதரன், நவரத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (20.11.2008) வியாழக்கிழமை பி.ப. 3.30 மணியளவில் இத்தாலியில் நடைபெறும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஒஸ்கா லேன்,
உரும்பிராய். (79983)
தகவல்:
கா.கந்தசாமி (மைத்துனர் ).

### பொன்னையா தம்பிராசா



சந்திரசேகரப்பிள்ளையார் கோவிலடி, கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா தம்பிராசா நேற்று (19.11.2008) புதன் கிழமை காலமானார்.

அன்னார் துரையம்மாவின் அன்புக் கணவரும்,அமரர் துரைசிங்கம் மற்றும் விசாலாட்சி (கனடா), இராசலட்சுமி (கனடா), சோதிமலர் (கரவெட்டி கிழக்கு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வகுமார் (கரவெட்டி), அமரர் விஜயகுமார் மற்றும் விஜயராணி, செல்வராணி, வசந்தராணி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2008) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்திரசேகரப்பிள்ளையார் கோவிலடி,
கல்வியங்காடு. (79988)
தகவல்:
குடும்பத்தினர்.

### வேலாயுதபிள்ளை உதயசூரியன்

(ஊழியர், பனை தென்னை வள அபிவிருத்தி கூ.சங்கம், யாழ்ப்பாணம்)



பழம் வீதி, கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் பொன்னையா லேன், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை உதயசூரியன் நேற்றுமுன்தினம் (18.11.2008) செவ்வாய்க்கிழமை அகால மரணமடைந்து விட்டார்.

அன்னார் தவரஞ்சினியின் அன்புக் கணவரும் அமரர்களான வேலாயுதபிள்ளை - நாகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும் தம்பு - தங்கம்மா தம்பதியினரின் மருமகனும் நவயூட், சாயிலக்ஷன், தேனுசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தனலஷ்மி, வெற்றிச்செல்வி, தவப்புதல்வன் (R.D.H.S Office, Jaffna), விவேகானந்தன், வேணி சுபாஜினி, விஜேந்திரன் (டோஹா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிரான்சிலுள்ள வினோதாஸ், மோகனதாஸ், பிறேமதாஸ், வவி, மாலா, யாழ்ப்பாணத்திலுள்ள மோகனா, மைதிலி, காயத்திரி, வதனா (இந்தியா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2008) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. ஒரு மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பொன்னையா லேன்,
ஆனைக்கோட்டை. (79990)
தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# அழைக்கப்பட வேண்டிய தரப்பே அழைப்பு விடுக்கின்ற விந்தை

தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பொருத்தமான அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்றைக் கொண்டுவர ஒத்துழைப்பு வழங்குமாறு எதிர்க்கட்சிகளுக்கு அரசு அழைப்பு விடுத்திருக்கின்றது.

இது விடயத்தில் சகல தரப்புகளும் இலங்கை அரசுடன் இணைந்து உளசுத்தியுடன் செயற்படுவதன் மூலமே உண்மையான அரசியல் தீர்வு - சமரச முயற்சி - சாத்தியப்படும் என இலங்கை வெளிவிவகார அமைச்சர் றோஹித போகொல்லாகம நாடாளுமன்றத்தில் கூறியிருக்கின்றார்.

அரசின் இந்த அறிவிப்பைப் பார்த்து விசனித்து - விக்கித்து - போய் நிற்கிறார்கள் ஈழத் தமிழ் மக்கள்.

சர்வதேசத்தின் காதில் பூச்சுற்றும் மற்றொரு தந்திரோபாய அறிவிப்பே இது என்பது அவர்களுக்கு நன்கு தெரியும்.

ஏதோ இதுவரை எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்காத காரணத்தால்தான் இந்த அரசு இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றை முன்வைக்க முடியாமல் போன மாதிரியும்-

எதிர்க்கட்சிகள் அனைத்தும் அரசுடன் இணைந்து செயற்பட்டால் இந்த அரசு இனப்பிரச்சினைக்குத் தீர்வை முன்வைத்துவிடும் என்பது போலவும் -

நாடாளுமன்றத்தில் கதை அவிழ்த்து விட்டிருக்கின்றார் வெளிவிவகார அமைச்சர் றோஹித போகொல்லாகம.

ஈழத் தமிழர் தாயகத்தின் மீது கொடூர யுத்தத்தைக் கட்டவிழ்த்து விடும் போர் வெறித் தீவிரத்தில் முனைப்பாக - துடிப்பாக - நிற்கின்றது இந்த அரசுத் தலைமை.

இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட பிரதான தரப்புகளுள் ஒன்று தமிழினம். இப்பிரச்சினையில் தமிழர் பக்கத்தில் பேரம் பேசும் வலுவும், அரசியல் மற்றும் இராணுவப் பலமும் கொண்ட ஒரே அமைப்பாக இருப்பது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்தான். ஏனைய உதிரிகள் எல்லாம் அரசுத் தலைமைக்குச் சாமரம் வீசும் 'எடுபிடிகள்' தாம்

புலிகள் இயக்கத்தை இராணுவ ரீதியில் துவம்சம் செய்து, அதன் பேரம் பேசும் வலுவை முறித்த பின்னர், பலமிழந்து, அடங்கிப் போய்க்கிடக்கும் தமிழினத்துக்குத் தான் போடும் 'பிச்சையை'த் தீர்வாக ஏற்பதைத் தவிர வேறு வழியேயில்லை என்று மமதைச் செருக்கோடு - கங்கணத்தோடு - திட்டம் வகுத்துச் செயற்படுகிறது கொழும்பு அரசு.

இந்த அரசின் போர் வெறித் தீவிரத்துடனான இந்தத் தந்திரோபாயத் திட்டம் வெளிப்படையானது; பரகசியமானது.

அதன் காரணமாக சர்வதேசக் கடுப்புக்கும், எரிச்சலுக்கும், விசனத்துக்கும் உள்ளாகியிருக்கும் கொழும்பு அரசு அதைச் சமாளிப்பதற்காகத் தீர்வு பற்றியும், அதற்கான நல்லிணக்கம் பற்றியும் 'சாத்தான் வேதம் ஓதுவது போல' இப்போது கயிறு விடுகின்றது.

தாம் ஆட்சிக்கு வந்தால் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான தென்னிலங்கையின் இணக்கப்பாட்டை மூன்று மாதத்துக்குள் எட்டுவார் என்றும் -

அதனடிப்படையில் தமிழர் தரப்புடன் பேசி இறுதித் தீர்வைக் காண்பார் என்றும் -

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் தமது 'மஹிந்த சிந்தனை' தேர்தல் விஞ்ஞாபனத்தில் பிரகடனப்படுத்தியிருந்தார் மஹிந்த ராஜபக்ஷ. இந்த வாக்குறுதியை வழங்கி, அதன் அடிப்படையில் அவர் ஜனாதிபதியாகி, இப்போது மூன்று மாதங்கள் தாண்டி, மூன்று ஆண்டுகளும் கடந்துவிட்டன.

இப்போதுதான் சகல தரப்புகளையும் இணைத்துத் தீர்வுத் திட்டம் தயாரிப்பது குறித்து அரசு வாயளவிலேனும் பேசத்தொடங்கி யிருக்கின்றது.

ஆனாலும், இவ்வளவு காலமும் ஏதோ ஆளும் கட்சி இணக்கத் தீர்வுக்கு முயன்றும், எதிர்க்கட்சிகள் இழுத்துப் பிடித்தமையால்தான் அது சாத்தியப்படாமல் போயிற்று என்ற பாணியில் அரசு இப்போது கதைவிட முயல்வது, விடயம் அறிந்தவர்களை முட்டாளாக்கும் வேலையாகும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ற பெயரில் எதையேனும் தமிழர்களுக்கு வழங்கப்போவதாகக் காட்டி, அதன் மூலம் பௌத்த - சிங்களப் பேரினவாதிகளின் சீற்றத்துக்கு ஆளாகிவிடக் கூடாது என்பதில் மிகக் கரிசனையாக இருக்கும் மஹிந்தரின் அரசு, அதன் காரணமாகத்தான், இப்பிரச்சினைக்கு அரசுத் தரப்பின் தீர்வு யோசனைத்திட்டம் இதுதான் என்ற அடிப்படையைக்கூட வெளியிடாமல் இதுவரையும் இழுத்தடித்து ஏமாற்றி வருகின்றது.

தீர்வுக்கான அரசுத் தரப்பின் அடிப்படைத் திட்டம் என்ன என்ற கேள்வியைப் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க பல தடவை எழுப்பிக் களைத்துப் போய்விட்டது. ஆனால் அரசோ அது குறித்து வாயே திறக்கவில்லை. போர் வெறித் தீவிரத்தை மட்டும் யுத்தக் களத்தில் மிகக் கோரமாக வெளிப்படுத்தி வந்தது.

இந்தச் சீத்துவத்தில் தீர்வுத்திட்டம் ஒன்றைக் கொண்டு வருவதற்காக ஒன்றுபடுமாறு எதிர்க்கட்சிகளுக்கு அரசு இப்போது அழைப்பு விடுப்பது அடாத்தமன்றி வேறில்லை.

இணக்கத்தீர்வு காண ஒத்துழைக்கும்படி அரசு அழைப்பு விடுப்பதல்ல, அரசுக்குப் பிற தரப்புகள் அழைப்பு விடுப்பதுதான் இன்றைய கட்டத்தில் சரியானதாகும்.

இணக்கத் தீர்வுக்கான முயற்சியைப் புறம் ஒதுக்கி, போரியல் வெறியில் நிற்கும் மஹிந்த அரசுக்குத்தான் அரசியல் தீர்வுப் பக்கம் வரும்படி ஏனைய தரப்புகள் அழைப்பு விடுக்க வேண்டும். அதுதான் யதார்த்த நிலை.



ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கத்தின் பட்டமளிப்பும் பாராட்டு விழாவும் நேற்று இடம்பெற்றன. இந்நிகழ்வில் சித்தியெய்திய மாணவி ஒருவருக்கு யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் சான்றிதழ் வழங்குவதையும் புலவர் வை.கா.சிற்றம்பலத்திற்கு முன்னாள் நீதிபதி மு.திருநாவுக்கரசு மாலை அணிவித்து கௌரவிப்பதையும் மேலுள்ள படங்களில் காணலாம். கவிஞர் சோ.பத்மநாதன், தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் மாணவிகளையும் கீழே உள்ள படங்களில் காணலாம்.

# இலங்கையில் போர் உக்கிரமாகியுள்ளதால் தமிழகக் கடலோரத்தில் பாதுகாப்புத் தீவிரம்!

## விரைவில் 20 புதிய ரோந்து கப்பல்கள்

திருவொற்றியூர், நவ. 20

இலங்கை இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்றுவரும் சண்டை உச்ச கட்டத்தை எட்டியுள்ளதையடுத்து, கடலோரப் பகுதிகளில் கண்காணிப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளோம். அகதிகள் என்ற போர்வையில் விடுதலைப் புலிகள் யாரேனும் ஊடுருவுகின்றனரா என்பதனையும் தொடர்ந்து கவனித்து வருகிறோம்.

- இவ்வாறு இந்தியக் கடலோரக் காவல் படைத் தலைமை இயக்குநர் ஆர்.எவ்.காண்ட்ராக்டர் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் பணியிலிருந்து ஓய்வு பெறவுள்ள அவருக்கு உபசார விழா மற்றும் கடலோரக் காவல்படையினரின் ஒத்திகை உள்ளிட்ட நிகழ்ச்சிகள் சென்னை துறைமுகம் அருகே நடுக்கடலில் கப்பலில் நடைபெற்றன.

ஒத்திகையின்போது கடத்தல் கப்பல்களை மடக்குவது, தண்ணீரில் தத்தளிப்போரைக் காப்பாற்றுவது, கப்பல்களில் ஏற்படும் தீ விபத்தை அணைப்பது, கடலில் கலக்கும் எண்ணெய் படலத்தை அகற்றுவது உள்ளிட்ட ஒத்திகை நிகழ்ச்சிகளை படை வீரர்கள் சாகசங்களுடன் செய்து காண்பித்தனர்.

இதில் விக்ரம், விவேக், சாரங் உள்ளிட்ட 8 ரோந்துக் கப்பல்கள், 2 ஹெலிகொப்டர்கள், விமானம் உள்ளிட்டவைகள் ஈடுபடுத்தப்பட்டன.

பின்னர் 'விவேக்' ரோந்துக் கப்பலில் நடைபெற்ற செய்தியாளர்கள் கூட்டத்தில் கடலோரக் காவல் படை தலைமை இயக்குநர் ஆர்.எவ்.காண்ட்ராக்டர் கூறியவை வருமாறு-

கடலோரக் காவல்படையை நவீனப்




கடலோரக் காவல்படையினரின் ஒத்திகையின்போது...

படுத்தும் திட்டத்தின் கீழ் விரைவில் 20 புதிய ரோந்து கப்பல்கள் சேர்க்கப்பட உள்ளன. கூடுதல் வீரர்கள் விரைவில் சேர்க்கப்படுவர். கடத்தல்காரர்களை துரத்திப் பிடிக்கும் அதிவேக ஜெட் விமானங்கள் வாங்கப்பட உள்ளன. அதி நவீன வசதிகள் கொண்ட 'சாம்ராட்' என்ற ரோந்துக் கப்பல் இம்மாத இறுதிக்குள் படையில் சேர்க்கப்பட உள்ளது. மேலும் கடல் மாசினைக் கட்டுப்படுத்தும் புதிய கப்பல் வரும் மார்ச் மாதம் வர உள்ளது.

இந்திய - இலங்கை கடல் பகுதியில் கூட்டு கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள இரு நாட்டு அரசுகளும் ஒப்புக்கொண்டுள்ளன. இது குறித்து மேற்கொண்டு தகவல்கள் அளிக்க இயலாது.

இலங்கையில் போர் உச்சகட்டம் அடைந்துள்ளதையடுத்து கடலோரப் பகுதிகளில் கண்காணிப்பை தீவிரப்படுத்தி உள்ளோம். அகதிகள் போர்வையில் விடுதலைப் புலிகள் யாரேனும் ஊடுருவுகின்றனரா என்பதனையும் தொடர்ந்து கவனித்து வருகிறோம்.

ஆசிய நாடுகளில் கடல் கொள்ளையைத் தடுக்க 14 நாடுகள் இணைந்த கூட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் சிங்கப்பூர், மலேசியா, இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகள் அங்கம் வகிக்கின்றன - என்றார். (சி)

# சர்வதேச மனித உரிமைகள் தின நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில்

வலி.வடக்கு, நவ.20

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மனித உரிமைகள் தின நிகழ்வுகள் எதிர்வரும் 10ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தையொட்டி பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற கட்டுரைப் போட்டிகள் நடத்தப்பட்டன. அதனைத் தொடர்ந்து வலய மட்டத்தில் இடம்பெற்ற போட்டிகளில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான கட்டுரைப் போட்டிகள் எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை 9 மணிக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ்.அலுவலகத்தில் நடைபெறவுள்ளன.

வலய மட்டத்தில் தெரிவு செய்யப் பட்ட அனைத்து மாணவர்களையும் அன்றைய தினம் நேரத்திற்கு சமுகமளிக்கும் படி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பாளர் க.சிவராஜசிங்கம் கேட்டுள்ளார்.

இந்தப் போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கு எதிர்வரும் டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி நடைபெறும் சர்வதேச மனித உரிமைகள் தின நிகழ்வில் வைத்துப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (50-86)

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை 06: 21.11.2008 | |
| | வெள்ளிக்கிழமை |
| திதி: | நவமி |
| | மு.இ 07.04வரை |
| நட்சத்திரம்: | பூரம் |
| | பி.இ 12.58 வரை |
| சுபநேரம்: | 06.10 - 07.40 |
| ராகுகாலம்: | 10.40 - 12.10 |

## காரைநகரில் நாளை பண்ணிசைப்போட்டி

யாழ்ப்பாணம், நவ.20

காரைநகர் மணிவாசகர் சபை காரைநகர் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தும் பண்ணிசைப் போட்டி, திருவாசக மனனப் போட்டிகள், பேச்சுப் போட்டிகள் என்பனவற்றின் இறுதிச் சுற்று நாளை வெள்ளிக்கிழமையும் மறுநாள் சனிக்கிழமையும் காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

முதற் சுற்றுப் போட்டிகளில் பாடசாலை மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள் இப் போட்டிகளில் பங்குபற்ற உள்ளனர். இப்போட்டிகளில் வெற்றியீட்டும் மாணவர்களுக்கு ஈழத்துச் சிதம்பரத்தில் இடம்பெறும் திருவாசகப் பெருவிழாவில் தங்கள் திறமைகளை மேலும் வெளிக்கொணர சந்தர்ப்பம் வழங்கப்பட உள்ளதுடன் அன்றைய தினம் மாணவர்களுக்கான பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும். (202-250)

## வல்லிபுரத்தில் ஆன்மீகச் சொற்பொழிவு

வடமராட்சி, நவ.20

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயிலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் இடம்பெற்று வரும் வாராந்த ஆன்மீக நிகழ்வு வரிசையில் எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை ''இறைபக்தியும் மனித வாழ்வியலும்'' என்னும் தலைப்பில் த.சக்திவேல் சொற்பொழிவாற்றுவார். (202-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாவது ஒருநாள் போட்டி இன்று; இந்தியாவை சமாளிக்குமா இங்கிலாந்து?

கான்பூர், நவ. 20

பீட்டர்சன் தலைமையிலான இங்கிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடிவருகிறது.

7 ஒரு நாள் போட்டித் தொடரில் முதல் ஆட்டத்தில் 158 ஓட்டங்களாலும், 2ஆவது ஆட்டத்தில் 54 ஓட்டங்களாலும் இந்தியா வெற்றி பெற்றது.

இந்தியா-இங்கிலாந்து அணிகள் மோதும் 3ஆவது ஒருநாள் போட்டி கான்பூரில் இன்று நடைபெறுகிறது.

முதல் 2 போட்டிகளிலும் இந்தியாவின் வெற்றிக்கு அதிரடித் துடுப்பாட்ட வீரர் யுவராஜ் சிங் முக்கிய பங்குவகித்தார். இன்றைய போட்டியிலும் அவரது அதிரடியான ஆட்டம் தொடர வேண்டும் என்பதே ரசிகர்களின் விருப்பமாக உள்ளது. அதோடு கம்பீர், யூசுப் பதான் ஆகியோரும் துடுப்பாட்டத்தில் நல்ல நிலையில் உள்ளனர்.

இந்திய அணியின் துடுப்பாட்டத்தை ஒப்பீடுகையில் பந்துவீச்சு பலவீனமாகவே காணப்படுகிறது. 2ஆவது ஆட்டத்தில் பகுதிநேர பந்து வீச்சாளர்களே விக்கெட்டுகளை கைப்பற்றினார்கள்.

முதல் போட்டியை விட 2ஆவது போட்டியில் இங்கிலாந்து அணி நன்றாக ஆடியது. தொடர்ந்து சிறப்பாக விளையாடி வரும் இந்தியாவின் சாவாலை சமாளிக்க இங்கிலாந்து கடுமையாகப் போராடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தென்னாபிரிக்காவை சமீபத்தில் வீழ்த்திய அந்த அணி துடுப்பாட்டம், பந்து வீச்சில் சமபலத்துடன் உள்ளது. பீட்டர்சன், பிளின்ரொப், கொலிங்வூட், ஒவாசிஷ் ஷா போன்ற சிறந்த துடுப்பாட்ட வீரர்களும், கிறிஸ்பிராட், அண்டர்சன், ஹார்மிசன் போன்ற சிறந்த பந்து வீச்சாளர்களும் இந்த அணியில் உள்ளனர்.

இந்திய அணி தொடர்ந்து அதிரடியாகவும், இங்கிலாந்து அணி தோல்விக்கு முற்றுப் புள்ளி வைக்கும் வகையிலும் விளையாடும் என்பதால் இன்றைய போட்டி விறுவிறுப்பாக இருக்கும்.




# 2012 ஒலிம்பிக் அனுசரணை; அமெரிக்க நிறுவனம் விலகல்

நியூயோர்க், நவ.20

லண்டனில் 2012இல் நடக்க உள்ள ஒலிம்பிக் போட்டிக்கு விளம்பரதாரராக இருப்பதிலிருந்து அமெரிக்க நிறுவனமான ஜோன்சன் விலகுவதாக அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டிலிருந்து ஒலிம்பிக் போட்டிக்கு விளம்பரதாரராக இருப்பதில் இருந்து விலகும் 4ஆவது நிறுவனம் இது. ஏற்கெனவே கொடாக், மனுலைவ், லெனோவா நிறுவனங்கள் விளம்பரதாரராக இருப்பதில் இருந்து விலகுவதாக அறிவித்தன.

லெனோவாவுக்குப் பதிலாக அதன் போட்டியாளரான ஏசெர் நிறுவனமும், மனுலைவ் இன்சூரன்ஸ் நிறுவனத்துக்குப் பதிலாக நஷனல் ஒலிம்பிக் குரூப்ஸ் நிறுவனமும், கொடாக் நிறுவனத்துக்குப் பதிலாக பனசொனிக் நிறுவனமும் விளம்பரதாரராக இருக்க முன்வந்தன.

# டெண்டுல்கர் வருகை: வெளியேறுவது யார்?



பெங்களூர், நவ. 20

இங்கிலாந்துக்கு எதிரான நான்காவது போட்டிக்கு சச்சின் வர இருப்பதால், அவருக்குப் பதில் யாரை அணியிலிருந்து நீக்குவது என்ற கேள்வி எழுந்துள்ளது.

அவுஸ்திரேலியத் தொடரில் அசத்திய சச்சின் டெஸ்டில் அதிக ஓட்டங்கள் குவித்து புதிய சிகரத்தைத் தொட்டார். தொடர் முடிந்தவுடன் குறுகிய கால ஓய்வை நிர்வாகத்திடம் கேட்டுப் பெற்றார் சச்சின். இதையடுத்து அவருக்கு இங்கிலாந்துக்கு எதிரான முதல் 3 போட்டிகளில் இருந்து ஓய்வு அளிக்கப்பட்டது. தற்போது 4ஆவது போட்டியில் இருந்து சச்சின் களமிறங்க இருக்கிறார்.

இந்தியா தனது முதல் இரு போட்டிகளிலும் வென்று முன்னிலையில் இருக்கிறது. இரு அணிகளுக்குமிடையிலான 3ஆவது ஒருநாள் போட்டி கான்பூரில் இன்று நடைபெறுகிறது. இந்தப் போட்டி முடிந்த பிறகு அடுத்த 4 போட்டிகளுக்கு வீரர்களைத் தேர்வு செய்ய, தேர்வுக்குழுவினர் முடிவு செய்துள்ளனர். இதையடுத்து யாரை நீக்குவது, யாரை சேர்ப்பது என பெரிய குழப்பம் ஏற்பட்டுள்ளது.

காயம் காரணமாக முதல் இருபோட்டிகளில் பங்கேற்காத இஷாந்த் சர்மா, மீதமுள்ள போட்டிகளுக்கு தேர்வு செய்யப்பட இருக்கிறார். எனவே அவரது இடத்துக்கும் ஒருவரை நீக்க வேண்டியிருப்பதால் யூசுப் பதான், ஆர்.பி.சிங் ஆகியோரின் நிலை கேள்விக்குறியாகியிருக்கிறது.

# முரளி தொடர்ந்தும் முன்னிலை!



சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலின் தரவரிசைப் பட்டியலில் டெஸ்ட் பந்துவீச்சாளர்கள் வரிசையில் இலங்கை அணியின் 'சுழல் மன்னன்' முத்தையா முரளிதரன் தொடர்ந்தும் முதலாம் இடத்தில் இருக்கிறார்.

தற்போது 895 புள்ளிகளைப் பெற்றிருக்கின்ற முரளிதரன் நீண்டகாலமாகவே முதலிடம் வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஒருநாள் பந்துவீச்சாளர்கள் தரவரிசையில் முரளிதரன் 674 புள்ளிகளுடன் 7ஆவது இடத்தில் உள்ளார்.

இதேவேளை, டெஸ்ட் துடுப்பாட்ட வரிசையில் இலங்கை வீரர் குமார் சங்கக்கார இரண்டாவது இடத்தையும், மஹேல ஜெயவர்த்தன 5ஆவது இடத்தையும் வகிக்கின்றனர்.

# டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் இலங்கைக்கு நான்காவது இடம்

சர்வதேச கிரிக்கெட் கவுன்ஸிலின் டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் இலங்கை அணி நான்காவது இடத்தை தக்கவைத்துக்கொண்டிருக்கிறது.

இறுதியாக வெளியிட்ட புள்ளிகளின் அடிப்படையில் டெஸ்ட் கிரிக்கெட்டில் இலங்கை அணி 108 புள்ளிகளைப் பெற்று நான்காவது இடத்தில் உள்ளது.

முதலாவது இடத்தில் அவுஸ்திரேலியாவும் (129 புள்ளிகள்), இரண்டாவது இடத்தில் இந்தியா, தென்னாபிரிக்க அணிகளும் (தலா 116 புள்ளிகள்) உள்ளன. அதற்கு அடுத்த இடம் இலங்கை அணிக்கு. இங்கிலாந்து (104 புள்ளிகள்), பாகிஸ்தான் (100 புள்ளிகள்), நியூஸிலாந்து (82 புள்ளிகள்), மேற்கிந்தியத் தீவுகள் (81 புள்ளிகள்), பங்களாதேஷ் (1 புள்ளி) ஆகிய அணிகள் அடுத்த இடங்களில் உள்ளன.

ஒருநாள் போட்டித் தரவரிசையில் இலங்கை அணி 105 புள்ளிகளுடன் 7ஆவது இடத்தில் உள்ளது. அவுஸ்திரேலியா (131), தென்னாபிரிக்கா (119), இந்தியா (115), பாகிஸ்தான் (114), நியூஸிலாந்து (113), இங்கிலாந்து (113) ஆகிய அணிகள் முதல் 6 இடங்களையும் பெற்றுள்ளன.

# டோனியின் வருமான வரி 6 கோடி ரூபா!

டோனி தலைமைப் பொறுப்பை ஏற்ற பிறகு இந்திய கிரிக்கெட் அணி புத்துணர்வு பெற்றுள்ளது. தனது திறமையான துடுப்பாட்டம், சாதுரியமான முடிவு ஆகியவற்றால் அவரின் புகழ் அதிகரிக்கின்றது.

பல்வேறு விளம்பர நிறுவனங்கள் போட்டி போட்டுக்கொண்டு அவரை ஒப்பந்தம் செய்து வருகின்றன. இதனால் டோனிக்கு கோடிக் கணக்கில் வருவாய் வருகிறது. ஐ.பி.எல். போட்டியில் அதிகளவுக்கு ஏலம் எடுக்கப்பட்ட வீரர் அவர்தான்.

கோடிக் கணக்கில் பணம் சம்பாதித்துள்ள டோனி இன்னும் சில மாதங்களில் வருமான வரி கணக்கு தாக்கல் செய்ய இருக்கிறார். அவர் 6 கோடி ரூபாவுக்கு (இந்திய மதிப்பில்) வருமான வரி செலுத்தலாம் என்று வருமான வரித்துறை எதிர்பாக்கிறது.

அந்த வரித்தொகை இந்திய நாணய மதிப்பில் சுமார் 6 கோடி ரூபாவாக இருக்கும். இதன் மூலம் தொடர்ந்து 2ஆவது ஆண்டாக ஜார்கண்ட் மாநிலத்தில் அதிக வருமான வரி கட்டுபவர் என்ற பெருமையை டோனி பெறுகிறார்.

# அகமதாபாத் டெஸ்டில் மாற்றமில்லை!

மும்பை, நவ.20

''இந்தியா, இங்கிலாந்து அணிகள் அகமதாபாத்தில் மோதும் முதல் டெஸ்ட் போட்டிக்கான திகதியில் எந்த மாற்றமும் இல்லை,'' என இந்திய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இந்தியா, இங்கிலாந்து அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி வரும் டிசெம்பர் 11ஆம் திகதி அகமதாபாத்தில் துவங்க இருக்கிறது. ஆனால் இந்தியன் பிரீமியர் லீக் (ஐ.பி.எல்.,) சார்பில் சுமார் 90 கோடி ரூபாய் பரிசுத்தொகை கொண்ட சம்பியன்ஸ் 'ருவென்ரி-20' லீக் போட்டிகள் டிசெம்பர் 3 ஆம் திகதி துவங்குகின்றன.

சென்னை, மும்பை, பெங்களூரில் நடக்கும் இந்தத் தொடரின் இறுதிப் போட்டி சென்னையில் டிசெம்பர் 10 ஆம் திகதி நடக்க உள்ளது.

சம்பியன்ஸ் 'ருவென்ரி-20' லீக் தொடரில் கடந்த ஐ.பி.எல்., தொடர் இறுதியில் ஆடிய டோனி தலைமையிலான சென்னை சூப்பர் கிங்ஸ் அணி பங்கேற்கிறது. டோனி அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறும் பட்சத்தில் அடுத்தநாள் அகமதாபாத்தில் இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்டில் உடனடியாக அவர் பங்கேற்பதில் சிக்கல் ஏற்பட்டது. இதனால் டெஸ்ட் போட்டியின் திகதியை மாற்றம் செய்ய, இந்திய கிரிக்கெட் சபை ஆலோசித்து வந்தது.

இது குறித்து பேட்டி அளித்த இந்திய கிரிக்கெட் சபையின் துணைத் தலைவர் லலித் மோடி கூறுகையில் -

''அகமதாபாத்தில் நடக்கும் முதல் டெஸ்ட் போட்டிக்கான திகதியில் எந்த மாற்றமும் இல்லை. வரும் டிசெம்பர் 11 ஆம் திகதி, முதல் டெஸ்ட் நடைபெறும். சம்பியன்ஸ் லீக் தொடரின் இறுதிப் போட்டிக்கு டோனியின் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி தகுதி பெறும் பட்சத்தில், அப்போட்டியில் அவர் பங்கேற்கமாட்டார். மறுநாள் அகமதாபாத்தில் நடக்கும் டெஸ்ட் போட்டிக்கு தயாராக இருப்பார்,'' - என்றார்.

# குடும்பப் பிரச்சினை காரணமாகவே இந்தியத் தொடரில் ஜொலிக்கவில்லை

## பிரெட் லீ தெரிவிப்பு




மெல்போர்ன், நவ.20

இந்திய டெஸ்ட் தொடரில் குடும்ப பிரச்சினை காரணமாகவே தம்மால் சரியாக செயல்பட முடியவில்லை என்று அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் பிரெட் லீ ஒப்புக் கொண்டுள்ளார்.

உலகின் அதிவேக வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவரான அவுஸ்திரேலியாவின் பிரெட் லீ, சமீபத்தில் நடந்த இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சரியாக ஆடவில்லை. 4 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 8 விக்கெட்டுகள் மட்டுமே வீழ்த்தியிருந்தார். அணியின் தொடக்கப் பந்து வீச்சாளரான அவரது மோசமான செயற்பாடு, அவுஸ்திரேலிய அணியின் சரிவில் முக்கிய பங்கு வகித்தது.

அவுஸ்திரேலிய அணி 0-2 என்ற கணக்கில் தொடரை இழந்ததால், தோல்விக்கு அந்த அணியின் வீரர்கள் பல்வேறு காரணங்களைக் கூறி வந்தனர். இந்தியாவில் சாப்பிட்ட உணவு நஞ்சானதால் தனது எடை 5 கிலோ வரை குறைந்து விட்டது என்றும், இதன் காரணமாக தன்னால் சிறப்பாக செயல்பட முடியவில்லை என்றும் பிரெட் லீ கூறியிருந்தார்.

இந்த நிலையில் கடைசியாக் பிரெட் லீ தனது மோசமான பந்து வீச்சுக்கு, குடும்பப் பிரச்சினையே காரணம் என்று கூறியிருக்கிறார். இந்தியத் தொடர் தொடங்குவதற்கு முன்பாக பிரெட் லீக்கும், அவரது மனைவிக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக இருவரும் பிரிந்து விட்டனர். இதனால் மனஉளைச்சலுக்கு ஆளான பிரெட் லீ ஒரு மாதம் ஓய்வு எடுத்துக் கொண்ட பிறகு எந்த வித பயிற்சியும் இன்றி நேரடியாக அணிக்குத் திரும்பியிருந்தார்.

இது பற்றி அவர் கூறுகையில், 'எனது திருமண உறவு முறிவு அதன் பிறகு நடந்த சம்பவங்கள் காரணமாக நான் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறேன். வெளிநாட்டு சுற்றுப்பயணத்துக்குச் செல்லும் போது உண்மையிலேயே எனது மகனை (2 வயது) பிரிந்து இருப்பது கஷ்டமாக இருக்கும். இந்திய தொடரின் [illegible] டம் தொலைபேசியில் பேசினேன்' என்று பிரெட் லீ இணையதளம் ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

# ஐ.சி.எல். போட்டியில் பங்கேற்ற பாக். வீரர்களுக்கு தடை நீங்கும்

## இன்ஸமாம் நம்பிக்கை

இந்தியன் கிரிக்கெட் லீக் (ஐசிஎல்) வீரர்கள் மீதான தடையை பாகிஸ்தான் கிரிக்கெட் சபை விரைவில் நீக்கும் என்று பாக். அணியின் முன்னாள் தலைவர் இன்ஸமாம் உல் ஹக் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இந்தியன் கிரிக்கெட் லீக் (ஐசிஎல்) அமைப்பு நடத்தும் 'ருவென்ரி - 20' தொடரில் விளையாடும் வீரர்கள், சர்வதேச மற்றும் உள்ளூர் போட்டிகளில் விளையாட சம்பந்தப்பட்ட நாட்டு கிரிக்கெட் சபைகள் தடை விதித்துள்ளன.

இது குறித்து இன்ஸமாம் கூறியதாவது:-

ஐசிஎல் வீரர்கள் மீதான தடையை நீக்க பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நிர்வாகிகள் முடிவு செய்துள்ளனர் என எனக்கு தகவல் கிடைத்துள்ளது. தடை நீங்கி, அந்த வீரர்கள் தேசிய அணியில் இடம் பிடிப்பார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. வீரர்களின் தனிப்பட்ட உரிமையைப் பாதுகாக்க வேண்டியது சர்வதேச கிரிக்கெட் பேரவையின் கடமையாகும்.

ஐசிஎல் அமைப்பு கிரிக்கெட் விளையாட்டை ஊக்குவிப்பதுடன், ஏராளமான வீரர்களுக்கு வாழ்க்கை அளித்துள்ளது. எனவே, அந்த அமைப்பு சட்டவிரோதமாக விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குவதுடன், ஐசிஎல் போட்டிக்கு உடனடியாக அங்கீகாரம் வழங்க இதுதான் சரியான நேரம் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதியளவு சிமெந்து கிடைத்துள்ளமையால் வைத்தியசாலைகளின் கட்டடப்பணிகள் துரிதம்

யாழ்ப்பாணம், நவ.20

போதியளவு சிமெந்து கிடைத்துள்ளதால் யாழ்.பிராந்தியத்திலுள்ள அரச வைத்தியசாலைகளில் கட்டடப் பணிகள் துரிதகதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இத்தகவலை யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்.பிராந்தியத்திலுள்ள அச்சுவேலி, சாவகச்சேரி, வட்டுக்கோட்டை, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைகளிலும், பிரதேச வைத்தியசாலைகளிலும் புதிய கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

கப்பல் மூலம சிமெந்து எடுத்து வரப்படுவதில் தாமதம் ஏற்பட்டதால் அண்மைக் காலத்தில் இக்கட்டடப் பணிகளைத் துரிதமாக முன்னெடுக்க முடியாதநிலை இருந்து வந்தது.

தற்போது சிமெந்து வந்துசேர்ந்துள்ளதால் கட்டடங்களைப் பூர்த்திசெய்யும் வேலைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அச்சுவேலிப் பிரதேச அரசினர் வைத்திய சாலையில் புதிதாகக் கட்டப்பட்டு பூர்த்தியடையும் நிலையிலுள்ள வெளி நோயாளர் பிரிவுக் கட்டடத்தில் சொற்ப வேலைகளே எஞ்சியுள்ளன. அவை பூர்த்தி செய்யப்பட்டு வைத்தியசாலைக்கான தார் வீதியும் அமைக்கப்பட்ட பின்னர் அது திறந்து வைக்கப்படும் - என அவர் மேலும் தெரிவித்தார். (202-236)

# 'யாழ்ப்பாணத் தகவல் களஞ்சியம்' இறுவட்டு வெளியீடு சனியன்று

வலி.வடக்கு, நவ.20

சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசாரப் பேரவையினால் உருவாக்கப் பட்ட 'யாழ்ப்பாணத் தகவல் களஞ்சியம்' என்னும் இறுவட்டின் வெளியீட்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் பிரதேச செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே. கணேஷ் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி, யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட பௌதிகத் துறை சிரேஷ்ட பேராசிரியர் கலாநிதி கே. கந்தசாமி ஆகியோர் கலந்துகொள்வர்.

கௌரவ விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக விலங்கியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திருமதி சிவசாந்தினி குகநாதன் கலந்துகொள்வார்.

வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக் கழக வரலாற்றுத்துறைப் பேராசிரியர் செ.கிருஷ்ணராசாவும், மதிப்பீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் பேராசிரியர் வி.பி.சிவநாதனும் நிகழ்த்தவுள்ளனர்.

இந்த இறுவட்டில், யாழ்ப்பாணத் தொன்மையையும், பண்பாட்டையும் சித்திரிக்கும் வகையிலான புகைப்படங்களும், பதிவுகளும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (202-86)

# பருத்தித்துறையில் அபிவிருத்தி வேலைகளை விரைவாகப் பூர்த்தி செய்யுமாறு அறிவுறுத்து

வடமராட்சி, நவ.20

வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை விரைவாகப் பூர்த்தி செய்யவேண்டும் என அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இப்பிரதேச செயலர் பிரிவில் சுமார் 30க்கும் மேற்பட்ட அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மேற்கொள்ள யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிதி ஒதுக்கீடுகளைச் செய்திருந்தனர்.

பிரதேச செயலகம் ஊடாக மேற்கொள்ளப்பட்டுவரும் இந்த அபிவிருத்தி வேலைத் திட்டங்களை விரைவாகப் பூர்த்தி செய்து அவற்றிற்கான கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு பருத்தித்துறை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் சம்பந்தப்பட்டோருக்கு அறிவுறுத்தியுள்ளார். (202-236)

# சாவகச்சேரி வைத்தியசாலைக்கு மின்பிறப்பாக்கி அன்பளிப்பு

யாழ்ப்பாணம், நவ.20

மக்கள் வங்கியின் 47ஆவது ஆண்டு நிறைவையொட்டி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு மின்பிறப்பாக்கி வழங்கப்பட்டது.

வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத் தலைவர் மு.நாகேந்திரராசா தலைமையில் நடைபெற்ற மின்பிறப்பாக்கி கையளிக்கும் நிகழ்வில் மக்கள் வங்கியின் வட வலய உதவிப் பொதுமுகாமையாளர் ஆனந்தராசா மின்பிறப்பாக்கியை வைத்திய சாலை மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி க.தயாளனிடம் கையளித் தார்.

இந்நிகழ்வில் மக்கள் வங்கி சாவகச்சேரி கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம், யாழ்.செயலக முன்னாள் திட்ட மிடல் பணிப்பாளர் க.கேதீஸ்வரன் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ.பரமேஸ்வரன் உட் படப் பலர் கலந்துகொண்டனர். (202-207)

# கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றிய 18 ஆசிரியர்கள் தென்மராட்சிக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், நவ.20

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் கடமையாற்றிய 18 ஆசிரியர்கள் தென்மராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் இவர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா சம்பந்தப்பட்ட ஆசிரியர் களுக்கு அறிவித்துள்ளார்.

இடமாற்றம்பெற்ற ஆசிரியர்களும் அவர்கள் கடமையாற்றும் பாடசாலைகளின் விவரங்களும் வருமாறு:

சிவானந்தன் பிரபாகரன் - மாசார் அ.த.க.பாடசாலை, திருமதி விக்னேஸ்வரன் விமலாதேவி - முகமாலை றோ.க.த. க. பாடசாலை, திருமதி உதயகுமாரன் யூட் வினிதா - பளை றோ.க.த.க பாடசாலை., திருமதி தவராசா ஜெயந்தினி - முழங்காவில் ம.வி., திருமதி இராசதுரை ரஞ்சித மலர் - வேம்பொடுகேணி சீ.சீ.த.க.பாடசாலை, திருமதி வாமதேவன் ஜெயலட்சுமி - பரந்தன் இந்துக்கல்லூரி, எஸ்.கோணேஸ்வரன் - கிளிநொச்சி இந்துக்கல்லூரி, குமாரசாமி இரவீந்திரன் - பளை மத்திய கல்லூரி, ஆறுமுகம் தங்கவேலு - அல்லிப்பளை சீ.சீ.த.க. பாடசாலை, திருமதி சுதாகரன் தர்சினி - பளை மத்தியகல்லூரி.

திருமதி சண்முகராஜா பவானி - வேம்பொடுகேணி சீ.சீ.த.க.பாடசாலை., திருமதி இ.மயில்வாகனசிங்கம் - பளை மத்திய கல்லூரி, குமாரசாமி சண்முகலிங்கம் - வேரவில் இந்துக்கல்லூரி, திருமதி நடேசலிங்கம் சோபனா - பளை மத்திய கல்லூரி, திருமதி இரவிச்சந்திரன் குணதேவி - கனகாம்பிகைக்குளம் அ.மி.த.க. பாடசாலை, கே.குகதாஸன் - தர்மபுரம் ம.வி, திருமதி கபிரியேற்பிள்ளை வளர்மதி - சோரன்பற்று கணேசா வித்தி, எஸ்.விக்னேஸ்வரன்-ஜெயபுரம் அ.த.க.பாடசாலை. (202-207)

# பட்டமளிப்புக்குச் செல்லும் உயர்தொழில்நுட்ப மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம், நவ.20

கொழும்பில் நடைபெறவிருக்கும் உயர்தொழில்நுட்ப நிறுவனப் பட்டமளிப்பு விழாவில் பங்குபற்ற நேற்றுமுன்தினம் கப்பலில் பயணிக்காத மாணவர்கள பயணம் மேற்கொள்ளவிருக்கும் நாளுக்கு முதல்நாள் யாழ்.சிவில் நிர்வாகத்தில் பயண அனுமதிக்கு பதிவுகளை மேற்கொள்ளுமாறு நிறுவனப் பணிப்பாளர் க. கதிரமலை கேட்டுள்ளார்.

ஒருபகுதி மாணவர்கள் நேற்று முன்தினம் கப்பலில் புறப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார். (1)

# பட்டப்பின் கல்வி டிப்ளோமா பரீட்சைகள்

யாழ்ப்பாணம், நவ.20

வவுனியா வளாகத்தில் நடைபெற்று வரும் 2005/2007 ஆண்டுக்குரிய பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறியின் இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டுக்கான பரீட்சை, மீள்பரீட்சை என்பன அடுத்த மாதம் 6ஆம் திகதி வவுனியா வளாக வியாபாரக் கற்கைகள் பீடத்திலும் யாழ்.பல்கலைக்கழகத்திலும் நடைபெறவுள்ளன.

முதுதலைமாணிக் கற்கைநெறிகளான அபிவிருத்திக் கற்கைநெறி, குடித்தொகை அபிவிருத்திக் கற்கைநெறி, பிரதேச திட்டமிடல் கற்கைநெறி மற்றும் கல்வியியல் முதுமாணி ஆகிய கற்கைநெறிகளுக்கான முதலாம் பருவ பரீட்சைகள், மீள்பரீட்சைகள் டிசம்பர் மாத முதல்வாரத்தில் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொதுநிர்வாகத்தில் பட்டபின் டிப்ளோமா கற்கைநெறி, நூலக தகவல் விஞ்ஞானத்தில் பட்டப்பின் டிப்புளோமா கற்கைநெறி, ஆகிய கற்கை நெறிகளை மேற்கொண்டு பரீட்சையில் சித்தியடையத் தவறியவர்களிடமிருந்தும் மீள் பரீட்சை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பரீட்சைகளுக்கு இதுவரை விண்ணப்பிக்கத் தவறியவர்கள் பரீட்சை தொடர்பான விண்ணப்பங்களை உடனடியாகப் பட்டப்பின் படிப்புகள் பீடத்தில் சமர்ப்பிக்கும்படி கேட்கப்படுகின்றார்கள். (202-201)



சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூலகத்தினர் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி சரசாலை வடக்குப் பகுதியில் நடமாடும் நூலக சேவையினை அண்மையில் நடத்தினர். சரசாலை வடக்கு ஸ்ரீகணேசா வித்தியாலயத்தில் மாணவர்களுக்கு நூலகர் இ.தர்மலிங்கம் புத்தகங்களை இரவல் கொடுப்பதைப் படத்தில் காணலாம். (படம்: தென்னவன்)




# ஒளிவிழா நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.20

ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலய கிறிஸ்தவ மன்றம் நடத்தும் ஒளிவிழா நிகழ்வு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசன் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக போதகர் ஜே.டி.பிலிப், போதகர் ஈ.ஜே.சூசைப்பிள்ளை, சகோதரன் டேவிட் அருள்ராஜ், சகோதரன் சி.சசீதரன், ஏ.த.கேதாரநாதன் திருமதி மு.யசோதா ஆகியோர் கலந்துகொள்வர். (201)

# பிரதேச ஒருங்கிணைப்புக் குழு விவசாயக் குழு கூட்டங்கள்

நவாலி, நவ.20

வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக ஒருங்கிணைப்பு குழுக் கூட்டமும், விவசாயக் குழுக்கூட்டமும் இன்று வியாழக்கிழமை இடம்பெற வுள்ளன.

விவசாயக் குழுக்கூட்டம் முற்பகல் 10 மணிக்கும் ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் 11 மணிக்கும் இடம்பெறுமென்று பிரதேச செயலர் ரூபினி வரதலிங்கம் தெரிவித்துள்ளார். (202-100)

# பாடசாலை ஆசிரியர்களை பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், நவ.20

அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் ஆசிரியர்களை இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்ட கலைப்பட்டப் பாடநெறி, விஞ்ஞானப் பட்டப் பாடநெறி ஆகிய இரு பாடநெறிகளுக்கான விண்ணப்பங்களே கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் 2004ஆம் ஆண்டு அல்லது அதன்பின்பு நடத்தப்பட்ட பொது விஞ்ஞான அல்லது கலை (ஆங்கிலப் பாடத்துடன்) வெளிவாரப் பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும். விண்ணப்பப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளன்று ஆசிரியராக 5 வருட சேவையைப் பூர்த்தி செய்திருக்க வேண்டியதுடன் நியமனம் நிரந்தரமாக்கப்பட்டதாக இருக்கவேண்டும்.

ஆசிரிய கல்லூரி, கல்வியக் கல்லூரி, பல்கலைக்கழகம் என்பவற்றில் தேசிய கல்வி நிறுவனத்தின் பாடநெறிகளைத் தொடர்வதற்காகப் பதிவு செய்தவராக இருக்க வேண்டும். அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளில் சேவை செய்யும் ஆசிரியர்களினால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களில் அப்பாடசாலையின் அதிபர் அல்லது முகாமையாளரால் உரிய ஆசிரியருக்கு கற்கை விடுமுறை அனுமதிக்கமுடியும் அல்லது முடியாது என்ற குறிப்பு இடப்படல்வேண்டும்.

அரசாங்க ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் அதிபர், வலயக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரால் உறுதிப்படுத்தப்படல்வேண்டும்..

விண்ணப்பங்களை இம்மாதம் 28ஆம் திகதிக்கு முன்னர் 'மனிதவள அபிவிருத்திக் கிளை, கல்வி அமைச்சு, "இசுருபாய", பத்திரமுல்லை' எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விவகாரங்களை 14.11.2008 வர்த்தமானியில் பார்வையிடலாம். (201)

# செயலமர்வு நிலையம் மாற்றப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், நவ.20

சுகாதாரத் திணைக்களத்தினால் மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பு நிறுவனத்தின் அனுசரணையுடன் வடமாகாண உளசமூக வளநிலையத்தினூடாக யாழ்.மாவட்டப் பாடசாலை அதிபர்களுக்கு மேற்கொள்ளப்பட்டு வரும் உளசமூக விழிப்புணர்வுச் செயலமர்வுகளில், வடமராட்சி வலயப் பாடசாலை அதிபர்களிற்கான செயலமர்வு நிலையம் யாழ். ஆசிரிய வளநிலையத்திலிருந்து யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் பணிமனை கேட்போர் கூடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

மேற்படி செயலமர்வு நாளையும் நாளை மறுதினமும் நடைபெறும் என சுகாதார சேவை பிராந்திய பணிப்பாளர் அறிவித்துள்ளார். (202-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



### தம்பிஐயா சிறிஸ்கந்தராசா

யாழ்.வண்ணை அரசடி விநாயகர் ஆலயத்தில் தர்மகர்த்தாவாகக் கடமையாற் றியவரும் தற்போது செயலாள ருமாகக் கடமையாற்றியவருமான தம்பிஐயா சிறிஸ்கந்தராசா 18.11.2008 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமான செய்தியறிந்து எமது பரிபாலனசபை, அவரது திடீர் மறைவு குறித்து கவலையடைவதுடன் தனது ஆழ்ந்த அனுதாபத் தையும் தெரிவித்துக் கொள்கின்றது. இவரது ஆன்மா சாந்தி யடைய எமது விநாயகரைப் பணிவதுடன் எமது கண்ணீர்ப் பூக்களால் அஞ்சலி செய்கின்றோம். அவரது இழப்பால் துயருறும் மனைவி,பிள்ளைகள், உற்றார், உறவினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பரிபாலன சபை,**
**யாழ்.வண்ணை அரசடி விநாயகர் ஆலயம்**
*82, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.*

(79980)

## செயலமர்வு

யாழ்ப்பாணம், நவ.20

தென்மராட்சிக் கல்வி வலயப் பாட சாலைகளின் நூலக ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம் சனிக் கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரி யில் நடைபெறவுள் ளது.

நூலக ஆசிரியர் இல்லாத விடத்து நூல கத்திற்குப் பொறுப் பாக உள்ள ஆசிரிய ரையும், ஆரம்பப் பாட சாலைகள் பொருத் தமான ஆசிரியரை யும் கலந்து கொள் ளச் செய்யுமாறு பாடசாலை அதிபர் களை வலயக் கல் விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் கேட்டுள்ளார்.

(202-207)


## வடமராட்சி வாழ் உதயன் வாசகர்களே!

நீண்ட காலமாக உங்களின் அபிமானப் பத்திரிகையாக விளங்கும் உதயனில் விளம்பரங்களைப் பிரசுரிக்க யாழ்.நகருக்கு வந்து போகும் சிரமத்தைத் தவிர்த்துள்ளோம்.
உங்களுக்கு மிக வசதியாக கீழ்வரும் விலாசத்தில்

**உதயன் விளம்பரப் பணிமனை**

இயங்குகின்றது.

நீங்கள் நினைத்த உடனேயே உதயனில் பிரசுரிக்க விரும்பும் விளம்பரங்களைக் கையளிக்கலாம்.
விரையுங்கள்! தொடர்பு கொள்ளுங்கள்!

**உதயன் விளம்பரப் பணிமனை,**
**சதா போன்ஸ்,**
மாலு சந்தி, பருத்தித்துறை.
தொலைபேசி இலக்கம்: 226 3206



# உறுதியும், உத்தரவாதமுள்ள விலைகளில் பொருட்கள் நம்ப முடியாத விலைகளில்

## போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்

| Processors | |
|---|---|
| Intel Celeron 1.8GHZ | 4,750/= |
| Intel DUAL CORE 2.2GHZ | 9,250/= |
| Intel DUAL CORE 2.5GHZ | 11,000/= |
| Intel DUAL CORE 3GHZ | 11,750/= |
| Intel CORE 2 DUO 2.53GHZ | 14,500/= |

| Motherboards | |
|---|---|
| ASUS P5GCMX | 5,900/= |
| Gigabyte DG31PR965 | 8,000/= |
| Gigabyte DG33 FB | 12,750/= |
| Gigabyte DG35EC | 13,250/= |
| FOXCONN G31MX-K | 5,750/= |

| Ram | |
|---|---|
| DDRII 512MB | 1,450/= |
| DDRII 1GB | 1,800/= |
| DDRII 2GB | 3,750/= |
| DDRII 4GB | 5,000/= |

| Hard Disk | |
|---|---|
| HARD DISK DRIVE 250GB | 5,500/= |
| HARD DISK DRIVE 500GB | 9,000/= |

| DVD Writers | |
|---|---|
| DVD WRITER SAMSUNG SATA | 3,200/= |
| DVD WRITER SONY SATA | 3,400/= |
| DVD WRITER LG SATA | 3,100/= |

| Monitors | |
|---|---|
| MONITOR 15" CRT PANORA | 11,750/= |
| MONITOR 15" CRT SAMSUNG | 11,750/= |
| MONITOR 15" CRT VIEWSONIC | 10,500/= |
| MONITER 17" VIEWSONIC REAL FLAT | 16,500/= |
| MONITER 17" SAMSUNG | 16,250/= |
| MONITER 17" PANORA | 15,500/= |
| MONITER 16" LCD PANORA | 16,750/= |
| MONITER 16" LCD SAMSUNG | 16,750/= |
| MONITER 17" LCD VIEWSONIC | 20,500/= |
| MONITER 19" LCD VIEWSONIC | 24,500/= |
| MONITER 19" LCD SAMSUNG | 26,250/= |
| MONITER 20" LCD SAMSUNG | 27,500/= |
| MONITER 22" LCD SAMSUNG | 32,500/= |




| UPS | |
|---|---|
| POWERTREE UPS 650VA | 6,250/= |
| PANORA UPS 650VA | 5,750/= |
| POWERTREE UPS1.2KV | 13,500/= |

| Printers | |
|---|---|
| EPSON PRINTER LX 300+ | 20,500/= |
| EPSON PRINTER LQ 300+ | 21,500/= |
| TVS PRINTER PRO VX 3810 | 19,000/= |
| TVS PRINTER CHAMPION | 20,000/= |
| HP 1560 | 4,500/= |
| HP 2235 | 12,500/= |
| HP 4355 ALL IN ONE | 16,750/= |
| SAMSUNG ML-1640 | 12,750/= |

| Pen Drive | |
|---|---|
| PENDRIVE 1GB 802 black | 600/= |
| PENDRIVE 2GB 802 black | 900/= |
| PENDRIVE 4GB 801 white | 1,450/= |
| PENDRIVE 8GB 801 white | 2,400/= |

**PC HOUSE PRIVATE LIMITED**
Innovative Solutions !

பீ சீ ஹவுஸ் பிரைவட் லிமிட்ட்
யாழ்ப்பாண கிளை
இலக்கம் 01, கே. ஸ்டென்லி வீதி,
யாழ்ப்பாணம்

தொலை பேசி இலக்கம் : 021 222 40 39 - வசந்தன்
தொலை நகல் : 021 222 66 71
மின்னஞ்சல் : jaffna@pchouse.lk
இணையத்தளம் : www.pchouse.lk

கையடக்கத்தொலைபேசி -
ஜோய்குமார் - 0773 66 78 73




*Reliable solutions... for today... tomorrow and beyond...*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடத்தப்பட்டவர்கள் குறித்த விவரங்களை அறிய சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களில் மனுத்தாக்கல்

## பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு, நவ.20

2008ஆம் ஆண்டு கடத்தப்பட்டவர்கள் தொடர்பான விவரங்களை அறிவதற்கு சம்பந்தப்பட்ட பிரதேச நீதிமன்றங்களில் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். அத்துடன், நாடெங்கிலும் உள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் காணாமல் போனவர்கள் தொடர்பான தகவல்களைக் கண்டறிந்து சமர்ப்பிக்கும்படி பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு பொலிஸ்மா அதிபர் ஜயந்த விக்கிரமரட்ண தெரிவித்துள்ளார்.

பொலிஸ் தலைமையகக் கேட்போர் கூடத்தில் கடந்த திங்கட்கிழமை காலை 8 மணி முதல் 9.45 வரை நடைபெற்ற, கடத்தல் மற்றும் காணாமல் போதல் தொடர்பான விசாரணைகளை மேற்பார்வை செய்யும் குழுவினரின் கூட்டத்தில் கலந்துகொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேற்படிக் கூட்டத்தில் நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள் அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ண, வாழ்க்கைத் தொழில், தொழில்நுட்பப் பயிற்சிப் பிரதியமைச்சர் பெ.இராதாகிருஷ்ணன், ஜனாதிபதியின் ஆலோசகர் வாசுதேவ நாணயக்கார, குழுவின் செயலாளர்களான ஆர்.திவ்வியராஜன், லால் வெடிக்கார, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர், பிரதிப் பொலிஸ்மா அதிபர்களான சிசிர மெண்டிஸ், அசோக விஜயதிலக, அத்தியட்சகர்களான சி.என். வாகிஸ்டர், கே.குமாரசிங்க மற்றும் காணாமல் போனோர் பொலிஸ் பிரிவுப் பொறுப்பதிகாரி ஜயதிலக ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது, இதுவரை எனக்கு 265 கடத்தல் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவற்றில் 88 பேர் விடுவிக்கப்பட்டனர். மேலும் நீர்கொழும்பு, வவுனியா, கொழும்புப் பிரதேசங்களில் கடத்தப்பட்டவர்களுள் நால்வர் கொலை செய்யப்பட்டுள்ளனர். 21 பேர் பூஸா முகாமிலும், குற்றப் புலனாய்வுப் பிரிவிலும் வைக்கப்பட்டிருக்கின்றனர். கண்டுபிடிக்கப்படாத மிகுதியான 162 பேர் தொடர்பாகவே தற்போது மேலதிக விசாரணைகள் பரவலாக மேற்கொள்ளப்பட்டுள்ளன என பிரதியமைச்சர் பெ.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

இதேவேளை, கொட்டாஞ்சேனை, புதுச்செட்டித்தெரு வீட்டிலிருந்து விமானப் படையினரால் கைதுசெய்யப்பட்டு தமிழ்க் குழு ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டார் எனக் கருதப்படும் செல்வராஜா பாலகுமார், தற்போது பயங்கரவாதத் தடுப்புப் பிரிவில் வைக்கப்பட்டுள்ளார். இவரைப் பார்வையிடுவதற்காக அவரது மனைவியான ரோகினி பாலகுமாரிடம் இருந்து 2 லட்சம் ரூபா பணம் பெறப்பட்டுள்ளது. இது குறித்து பிரதியமைச்சர் பெ. இராதாகிருஷ்ணன், அமைச்சர் ராஜித சேனாரட்ண, வாசுதேவ நாணயக்கார ஆகியோர் விசனம் தெரிவித்ததுடன் பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு மற்றும் வங்கி விவரங்கள் ஆகியவற்றை குற்றப்புலனாய்வுப் பொலிஸாரிடம் சமர்ப்பித்தனர்.

கடத்தப்பட்ட நபர்கள் தொடர்பாக நீதிமன்ற விவரங்களைச் சட்டத்தரணிகள் கோரமுடியும் என்றும், பொலிஸ் பிரிவினரால் அங்கு தெரிவிக்கப்பட்டது.

காணாமல் போனோரின் விவரங்களைப் பெறமுடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது எனக் குழு சார்பில் தெரிவிக்கப்பட்டது.

கடத்தப்பட்டுக் கப்பம் கோரப்பட்ட பல முறைப்பாடுகள் தொடர்பாகவும் இங்கு ஆராயப்பட்டது. குறிப்பாக வடக்கு - கிழக்குப் பகுதிகளிலும் வவுனியாவிலும் ஆயுதக் குழுக்களே கப்பம் பெறுகின்றன எனவும் - யார், எந்தக் குழு என்று அறிய முடியால் இருக்கின்றது என்றும் - அரச படையினருடன் இணைந்து இந்த ஆயுதக் குழுக்கள் செயற்படுகின்றன எனவும் சிவநாதன் கிஷோர் எம்.பி. அங்கு தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த பொலிஸ்மா அதிபர், இதற்கான முறைப்பாடுகள் உரிய முறையில் தெரிவிக்கப்பட்டால் பாகுபாடற்ற விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்றும், எவர் மீதும் தயவு தாட்சணியம் காட்டப்பட மாட்டாது என்றும் தெரிவித்தார்.

மேலதிக விசாரணைகள் தொடர்பாக டிசம்பர் மாதம் 8 ஆம் திகதி அடுத்த கூட்டம் நடைபெறும் என்றும் - அத்துடன், அமைச்சரவைக் குழுவினர் இம்மாதம் 27 ஆம் திகதி பூஸா முகாமுக்கு விஜயம் செய்து அங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ள 361 கைதிகள் தொடர்பாக ஆராய்வர் எனவும் அங்கு கூறப்பட்டது.

இதேவேளை, வெற்றி எவ்.எம். முகாமையாளர் வாமலோஷனைக் கைதுசெய்தமை தொடர்பாகவும் இங்கு ஆராயப்பட்டது. பிரதியமைச்சர் இராதாகிருஷ்ணன் முழுமையான உத்தரவாதத்தை வழங்கி அவர் மீதான விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறும் அவர் ஒரு வானொலிக் கலைஞர் என்ற வகையில் அவரது தொலைபேசி இலக்கம் அநேகமாக எல்லாத் தமிழர்களிடம் இருப்பது சகஜம் என்றும் அங்கு தெரிவித்தார். (சி)

# இலங்கைத் தூதரகம் முன்னால் மலேசியாவில் கண்டனப் பேரணி

கோலாலம்பூர்,நவ.20

ஈழத்தில் அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து மலேசியாவில் உள்ள இலங்கைத் தூதரகம் முன்பாக 2 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழர்கள் ஒன்று திரண்டு கண்டனப் பேரணி நடத்தியுள்ளனர்.

இப்பேரணி கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

ஈழத் தமிழர் படுகொலையைத் தடுத்து நிறுத்த வேண்டும். அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவிக்கும் இலங்கை அரசுக்கு கண்டனம் தெரிவிக்கும் கண்டனப் பேரணி எனும் பதாகைகளை தாங்கியவாறு-

"கொல்லாதே கொல்லாதே அப்பாவித் தமிழர்களைக் கொல்லாதே" ,"போராடுவோம் போராடுவோம் போரை நிறுத்தும் வரை போராடுவோம்"ஆகிய முழக்கங்களுடன் மக்கள் கூட்டம் உணர்வுடன் கூடியிருந்தனர்.

"வாங்காதே வாங்காதே சிலோன் தேயிலையை வாங்காதே" ,"பறக்காதே பறக்காதே ஏயர் லங்காவில் பறக்காதே" போன்ற முழக்கங்கள் தொடர்ந்து எழுப்பப்பட்டன.

பேரணியின் இறுதியில் இலங்கைத் தூதரகத்திடம் மனுஒன்றும் கையளிக்கப்பட்டது.

முக்கிய மூன்று கோரிக்கைகளை முன்னிலைப்படுத்தி இந்த மனு வழங்கப்பட்டது.

- அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவிப்பதனை நிறுத்த போர் நிறுத்தம் செய்ய வேண்டும். வன்னியில் மீண்டும் அனைத்துலக தொண்டு நிறுவனங்கள் அனுமதிக்கப்பட வேண்டும். அனைத்துலக சமூகத்தின் கருத்தை மதித்து இருதரப்பும் போர் நிறுத்தத்தைக் கடைப்பிடித்து அமைதி உடன்படிக்கையில் கையெழுத்திட வேண்டும் என்பனவே வழங்கப்பட்ட மனுவின் முக்கிய சாராம்சமாக இருந்தன.

இலங்கை ஜனாதிபதிக்கு மனு அனுப்பி வைக்கப்படும் என இலங்கைத் தூதரக அதிகாரிகளினால் உறுதியளிக்கப்பட்டது. (சி)

# மக்களின் உற்சாகம் குன்றாமல் தக்கவைத்தலே பொருளாதார மேம்பாட்டுக்கு வழிகோலும்

## முன்னாள் துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை கருத்து

யாழ்ப்பாணம், நவ.20

மக்களிடம் உள்ள சக்தியை ஆக்கசக்தியாக மாற்றவேண்டும். மக்களுடைய உணர்வு, உற்சாகம் ஆகியவை குன்றாமல் அதனைத் தக்கவைக்க வேண்டும். அதுவே அவர்களின் முன்னேற்றத்தை மேம்படுத்தும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை.

அண்மையில் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மீள்எழுச்சித் திட்டத்தின் கீழ் 23 கிராம அபிவிருத்தி அமைப்புகளுக்கான நிதிவழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும்போது கூறியவை வருமாறு:

1950, 1960ஆம் ஆண்டுகளில் எமது பிரதேசத்தில் வறுமை இருந்தது. ஆனால் தங்கி வாழும்நிலை இருக்கவில்லை. இன்று இந்தநிலை மாறியுள்ளது.

பெரும்பாலான மக்கள் இன்று தங்கி வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இதை மாற்ற உலக வங்கி மீள்எழுச்சித் திட்டத்தின்கீழ் மக்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்த முன்வந்துள்ளது.

எனவே யாழ். மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களது அனைத்து வடிவங்களையும் பயன்படுத்தி முன்னேற்றம் காணவேண்டும். இதன்மூலம் மக்களுடைய வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதுடன் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும் முடியும்.

உலகில் பல தொழிற்சாலைகள் இருந்தாலும் ஐம்பது சதவீதமான உற்பத்திப் பொருள்கள் சிறுமுயற்சிகள் மூலமே சந்தைக்கு வருகின்றன - என்றார்.

யாழ்.மாவட்ட அரச அதிபர் உரையாற்றுகையில், தெரிவித்தவை வருமாறு:

மக்களுக்குச் சிறந்த தொண்டாற்ற உத்தியோகத்தர்கள் தொடர்ந்தும் மனப்பூர்வமாக உழைக்க வேண்டும். நாம் கற்ற கல்வியும், அனுபவமும் கஷ்டப்படும் மக்களைச் சென்றடைய வேண்டும்.

சமூகத்தில் நலிவுற்று இருக்கும் மக்களை இனங் கண்டு அவர்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த் துவதற்கு உத வுவதன் மூலம், அம்மக்கள் நிவா ர ணத்தில் தங்கி வாழாத நிலையை ஏற்படுத்த முடி யும்.

இன்று 23 கிராம அபிவி ருத்தி அமைப்புகளுக்கு இயலளவு விருத்திக்கான முதல் கட்ட நிதி வழங்குகிறோம். இந்த நிதியை கிராமமட்ட அமைப்புகள் சரியாகப் பயன்படுத்த வேண்டும்.

எமது செயற்பாடுகள் யாவும் நல்லாட்சிக்கு உதாரணமாக இருத்தல் வேண்டும். அத்தோடு இலங்கை வங்கி மீள்எழுச்சித் திட்டத்துடன் தோளோடு தோள்நின்று உழைப்பதையிட்டு அவர்களைப் பாராட்டுகின்றேன் - என்றார்.

(202-249)

# வீதி புனரமைக்க மக்கள் கோரிக்கை

கோப்பாய், நவ.20

இருபாலை கற்பகப் பிள்ளையார் ஆலயத்திற்கு அருகாகச் செல்லும் வீதியைப் புனரமைத்து தருமாறு அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வீதியினாலேயே அயல் பிரதேசங்களிலுள்ள வெள்ள நீர் வழிந்தோடுவதனால் மழைகாலங்களில் வீதி சேறும் சகதியுமாகக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் வீதியில் பயணம் செய்யும் மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(202-72)




மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் கிராம அபிவிருத்தி அமைப்புகளுக்கு நிதி வழங்கும் நிகழ்வில் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், பிரதித் திட்டப் பணிப்பாளர் வே.வீசுவலிங்கம் ஆகியோர் உரை நிகழ்த்துவதை முதலிரு படங்களிலும் காணலாம்.

முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை [illegible] கிராம அபிவிருத்தி அமைப்புக்கும் இலங்கை வங்கியின் செயற்பாட்டு முகாமையாளர் ரி.உலகநாதன் இருளன் கிராம அபிவிருத்தி அமைப்புக்கும் வைப்புப் புத்தகங்களை வழங்குவதை அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம். (249)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




ஆசிரியர்:- கே.உமாகரன்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

# Special Guidance for O/L 2008 Students

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மாதிரிப் பரீட்சை - 2008 டிசம்பர்

General Certificate of Education (Ord.Level) Model Examination - 2008 December

T / 32 / I **கணிதம் - I** Two hours

பகுதி-01
பிரிவு-1

01. 1 Kg சீனியின் விலை 80 ரூபாவாயின் 260 ரூபாவிற்கு எத்தனை Kg சீனி வாங்க முடியும்?

02. 2/5 இற்கு சமவலுவானதும் பகுதியெண் 35 ஆகவுடைதுமான பின்னத்தைத் தருக.

03. $\frac{30 \times 29}{2}$ என்பது எத்தனையாவது முக்கோணி எண்ணாகும்?

04. $\sqrt{(-2)+8}$ இன் பெறுமானம் யாது?

05. $256x^2$ என்பதை சுருக்குக?

06. $\begin{pmatrix} 2 & 3 \\ 4 & 5 \\ 1 & -2 \end{pmatrix}$ இத்தாயத்தின் வரிசை யாது?

07. 125 g ஐ Kg இல் தருக?

08. $2x^{-5}$ என்பதனை நேர்ச்சுட்டியில் தருக?


09. $3^{2/5}$ என்பதன் நிகர் மாற்றுப் பின்னம் யாது?

10. சுருக்குக : $0.25 \times 2.5$


11. $A=\{2,3,5,7,9\}$ ஆகும். தொடை A யினது தொடைப்பிரிவுகளின் எண்ணிக்கையைக் காண்க?

12. தற்போது தந்தையின் வயது (7a-3) வருடஙடகளும்,மகனின் வயது 5 a வருடங்களுமாகும்.மகன் பிறந்த போது தந்தையின் வயதை ஓர் அட்சரக்கணிதக் கோவையில் தருக.

13. சுருக்குக : $11001_{இரண்டு} - 1011_{இரண்டு}$

14. 

திண்மக் கூம்பின் கணவளவு 150 எனின் உருவின் மொத்தக் கனவளவைக் காண்க.

15. 

படத்தில் AB //EF
AB=AC
CDF=70° $A\hat{D}E=75^0$
எனின்
1) $A\hat{B}C$
2) $C\hat{A}D$
என்பவற்றின் பெறுமானங்களைப் காண்க?

16. y=3x - 2 என்ற நேர் கோட்டு வரைபிற்கு சமாந்தரமாகவும் (0,5)என்ற புள்ளியினூடாகவும் செல்லுகின்ற நேர் கோட்டின் சமன்பாட்டைக் காண்க?

17. a =3 2 எனின் $a^2 -15$ இன் பெறுமானத்தைக் காண்க?


18. (2 x -1 ) (x + k )=0 என்ற சமன் பாட்டின் தீர்வுகள் 1/2 ,3 எனின் k இன் பெறுமதியைக் காண்க?

19. (15-y ) ; 12 = 3 ; 2 எனின் y இன் பெறுமானத்தைக் காண்க?

20. தீர்க்க : $\frac{5K}{2} -1 =3$

21. lg 27.5=1.4393 எனின் lg 0.00275 இன் பெறுமானம் யாது?

22. y=1+c/x எனும் சமன்பாட்டில் x ஐ ஏனையவற்றின் சார்பில் தருக?

23. 

O ஐ மையமாகக் கொண்ட வட்டத்தில் விட்டமாகும் $C\hat{O}D=100^\circ$எனின்
1) $A\hat{B}D$
2) $C\hat{E}D$ என்பவற்றின்பெறுமானங்களைக்காண்க?

24. கூட்டல் விருத்தியொன்றின் ஐந்தாம் உறுப்பு 19 ஆகும் எனின் அதன் முதல் ஒன்பது உறுப்புக்களின் கூட்டுத்தொகையைக் காண்க?


25. ஐந்து மாணவர்களின் வயதுகளை ஏறுவரிசைப் படுத்தும் போது ஆகாரம் 12 ஆகவும்,இடையம் 13 ஆகவும் ,இடை 14 ஆகவும் இருந்தது.ஒரு மாணவனின் வயது 18 வருடங்கள் எனின் நான்காவது மாணவனின் வயது யாது?

26. ரு 5000 க்கு வாங்கிய பொருளொன்று 15% கழிவுடன் விற்கப்பட்டது எனின் விற்ற விலையைக் காண்க?

27. மோட்டார் வண்டியொன்று 50 $kmh^{-1}$கதியுடன் 42 நிமிடங்களில் சென்ற தூரம் யாது?

28. காணியொன்றின் 0.4 ha (ஹெக்ரெயர்) இன் பெறுமதி 12000 ரூபா எனின் அதே காணியின் 6000 $m^2$ காணியின் பெறுமதி யாது?

29. A, B என்பன 10 cm இடைத்தூரத்திலுள்ள இரு புள்ளிகளாகும்.a இலிருந்து 6 cm தூரத்திலும்,A,B இலிருந்து சம தூரத்திலும் இயங்கும் புள்ளியினது ஒழுக்கை படம்வரைந்து காட்டி அவை இடை வெட்டும் புள்ளிகளை p,q இனால் குறித்துக் காட்டுக?

30. 


தரப்பட்ட வளையின் சமன் பாட்டைக் காண்க?

(10x1+20x2)=50 புள்ளிகள்

பகுதி 1 பகுதி B

எல்லா வினாக்களுக்கும் விடை தருக?

01. குறுக்கு வெட்டுமுகம் 40 $cm^2$ பரப்பளவையுடைய நீர்க்குழாய் ஒன்றின் இருந்து நிமிடத்திற்கு 2.5 mநீளமான நீர் வெளியேறுகின்றது?
அ.1 நிமிடத்தில் வெளியேறும் நீரின் கனவளவு யாது?
ஆ.நீளம் 80 cm ,அகலம் 60 cm ,உயரம் 50 cm ஆகவுள்ள தொட்டியை இக் குழாய்மூலம் நிரப்புவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும்?

02. 

பாடசாலை ஒன்றிற்கு மாணவர்கள் வருகை தரும் விதத்தை அருகிலுள்ள பை வரைபு காட்டுகின்றது.இங்கு பஸ்சில் வருவோரின் எண்ணிக்கையானது நடந்து வருவோரின் எண்ணிக்கையிலும் இரு மடங்காகும் நடந்து வருவோரின் எண்ணிக்கையானது துவிசிசக்கர வண்டியில்வருவோரின் எண்ணிக்கையின்1/4 மடங்காகும்.எனின்


1)நடந்து வருவோரைக் குறித்து நிற்கும் ஆரைச்சிறையின் கோணம் யாது?
2)முச்சக்கர வண்டயில் வருவோரின் எண்ணிக்கை 400 பேர் எனின் துவிச்சக்கர வண்டியில் வருவோரின் எண்ணிக்கை யாது?
3)பாடசாலையில் உள்ள மொத்த மாணவர்களின் எண்ணிக்கை யாது.?
4)நடந்து வருவோரின் எண்ணிக்கைக்கும்,முச்சக்கர வண்டியில் வருவோரின் எண்ணிக்கைக்கும் இடையில் உள்ள விகிதம் யாது?

03. மனிதன் ஒருவன் ரு 1500 ஐ 4% எளியவட்டிக்கு கடனாகப் பெற்றான். பின்னர் 16800 ருபாவை திருப்பிச் செலுத்தி அவன் கடனில இருந்து முற்றாக விடு பட்டான்.
1)அவர் செலுத்திய மொத்த வட்டி யாது?
2)அவன் எவ்வளவு காலத்திற்கு கடனாளியாக இருந்தான்?

பகுதி -1
B பகுதி

ஆ. ஒருவரது வருமானத்தின் முதல் 15000 க்கு வரிவிலக்கு அளிக்கப் படுகின்றது.எஞ்சிய தொகைக்கு 4% வரி அறவிடப்படுகின்றது.ரூ 25000 ஐ வருமானமாகப் பெறும் ஒருவர் செலுத்த வேண்டிய வரி யாது?

04. ஒரு வகுப்பறையில் 6 ஆண் மாணவர்களும்,4 பெண்களும் இருந்தனர். அவர்களில் இருந்து இருவரை 1 ஆம்,2ஆம் வகுப்பு மாணவர்களாகத் தெரிய வேண்டியிருந்தது.இதற்காக அனைவரது பெயர்கள் எழுதிய சீட்டுக்களை ஒரு பெட்டியினுள் இடப்பட்டு குலுக்கிய பின் எழுமாற்று முறை மூலம் தெரிவுசெய்யப்படடனர்.
அ.நடைபெறக்கூடிய நிகழ்ச்சியைக் காட்டும் மரவரிப் படத்தைத் தருக?
ஆ.பின்வருவனவற்றின் நிகழ்தகவைக் காண்க?
1)இருவரும் ஆண் மாணவர்களாக2 இருத்தல்
2)ஒருவர் ஆணாகவும்,மற்றவர் பெண்ணாகவும் இருத்தல்
3)ஒருவராயினும் ஆண்மாணவனாக இருத்தல்?

05. 

5 cmதடிப்புடைய மரக்குற்றியொன்றிலிருந்து ஒழுங்கான எண்கோணி ABCDEFGHவடிவில் அமைந்த திண்மத்தின் குறுக்கு வெட்டு முகம் அதன்உருவில் தரப்பட்டுள்ளது.அதன் AB =12 cm ஆகும் .

1) AP இன் நீளத்தைக் காண்க?
2) கோணம் APH இன் பரப்பளவு யாது?
3) உருABQP இன் பரப்பளவு யாது?
4) PQRSவெட்டியகற்றிய பின் எஞ்சிய உருவின் குறுக்கு வெட்டுமுக பரப்பளவு144(2√2+1) $cm^2$ எனக்காட்டுக?
5)எஞ்சிய உருவினது (5 தடிப்புடைய திண்மத்தின் )கணவளவு யாது?

(5 x10=50 புள்ளிகள்)

**கணிதம்-11 பகுதி A**

**நேரம்-2 மணித்தியாலம்**

விரும்பிய ஐந்து வினாக்கனுக்கு விடை தருக?

01.அ.a)காரணிப் படுத்துக?


b)x +1/x =7 எனின் $x^2+1/x^2$ இன் பெறுமானம் யாது?

ஆ.a)$27^x=81 \times 3^{-x}$ தீர்த்து xஇன் பெறுமானம் மாண்க?
b)பெறுமானம் காண்க.$\log3^{27} + \log2^{256}$ -5

02. கைப்பணத்திற்கு 4600 ரூபாவாக தையல் இய்திரம் ஒன்றை கடன் குறைந்து செல்லும் முறையில் முதலில் ரூபா 1000 உம் மீதியை ரு 314 வீதம் சமனாக 18 மாதக் கட்டனங்களாகவும் செலுத்தி வாங்கலாம்.
1)18 மாதக் கட்டணங்களாக செலுத்தி முடிப்பதற்கு எஞ்சும் தொகை யாது?
2)செலுத்த நேரிடும் மொத்த வட்டி எவ்வளவு?
3)மாத அலகுகளின் எண்ணிக்கை யாது?
4)மாத அலகு ஒன்றிற்கான வட்டி எவ்வளவு?
5)மாதம் ஒன்றில் செலுத்தப்படும் கீடன் தொகையின் பகுதி எவவளவு?
6)ஆண்டு வட்டி வீதம் எவ்வளவு?

03.அ. 10.5 cm ஆரையுடைய 1m உயரமும் கொண்ட திண்ம உருளையின்
1)மொத்த மேற்பரப்பு யாது?
2)கணவளவு யாது?

ஆ.அத் தின்ம உருளையின் வட்ட மையத்தை மையமாகவும் 3.5 cm.ஆரையைக் கொண்டதுமான சிறிய வட்டக் குறுக்கு வெட்டைக் கொண்ட துளையொன்று வெட்டியகற்றப்பட்டது.பின் அது படத்தில் காட்டியவாறு நெடுக்கு வட்டமாக வெட்டி ஒரு பகுதி அகற்றப்பட்டது.அதன் எஞ்சிய பகுதியின் மூலம் ஒரு பீலிதயாரிக்கப்பட்டது.எனின் திண்ம உருவின்
1)மொத்த மேற்பரப்பு யாது?
2)மொத்த கனவளவு யாது?



இதன் தொடர்ச்சி எதிர்வரும் வியாழக்கிழமை வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## தரம் - 05 மாணவர்களுக்கான
# தயார்படுத்தல் பரீட்சைத் தொடர் – 2009
**வினாத்தாள் - 1** **நேரம் : 45 நிமிடங்கள்**

எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடை எழுதுக

இல 1-33 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் உரிய சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க்கோடிடுக.

முதலாம், இரண்டாம் வினாக்களில் தொடர்பற்ற உருவைக்கொண்ட அடைப்பைத் தெரிவுசெய்க.

01.




02.



03. நிலையான தன்மைக்கு உவமானமாக அமைவது,
1) கல்மேல் எழுத்துப்போல. 2) தாமரை இலைமேல் தண்ணீர் போல.
3) நீர்க்குமிழி போல. 4) நீர்மேல் எழுத்துப்போல.


04. சிலர் வறுமை வந்தாலும் பொருத்தமற்ற செயல்களைச் செய்ய மாட்டார் என்பதை விளக்கும் பழமொழி,
1) புலி பசித்தாலும் புல்லைத்தின்னாது. 2) வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்.
3) சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது. 4) முயற்சி உடையோர் இகழ்ச்சி அடையார்.

05. வட்டத்துள் வரவேண்டிய எண் யாது?
1) 20
2) 60
3) 80
4) 50





06. நீளத்தை அளப்பதற்கான அலகுகளை ஏறுவரிசையில் எழுதினால்,
1) m, mm, cm 2) mm, cm, m 3) cm, m, mm 4) cm, mm, m

07. எந்த இரு இடங்களுக்கான தூரம் மிக அதிகமாகும்,




1) பாடசாலை - வைத்தியசாலை.
2) புகையிரத நிலையம் - பாடசாலை.
3) வைத்தியசாலை - புகையிரத நிலையம்.
4) புகையிரத நிலையம் - பேருந்து நிலையம்.

08. வெற்றிடத்திற்கு வரவேண்டிய எண்,





1) 16
2) 20
3) 24
4) 32

09. "அம்புயம் வாடித்தளர்ந்ததம்மா" இப்பாடலில் குறிப்பிடப்படும் மலர்,



10. "மரத்தைக் கொத்தும் பறவையைப் பார்
மரங்கொத்தியெனவே நாம் அழைப்போம்
அரத்தின் கூர்மை அலகதனால் - அவை
மரங்களையே கொத்திடுமே" இப்பாடலில் குறிப்பிடப்படும் பறவை.




* 100மீ ஓட்டப்போட்டியில் நான்கு வீரர்கள் ஓடி முடித்த நேரம் கீழே தரப்பட்டுள்ளது. இதிலிருந்து 12ஆம், 13ஆம் வினாக்களுக்கு விடை தருக.

| வீரர்கள் | ஓடி முடித்த நேரம் |
|---|---|
| அனுஷன் | 13.05 செக்கன். |
| அபிலாஷ் | 13.00 செக்கன். |
| அபிநயன் | 13.42 செக்கன். |
| கபிநயன் | 14.15 செக்கன். |


11. போட்டியில் முதலிடத்தைப் பெற்ற வீரர் யார்?
1) அனுஷன். 2) அபிலாஷ். 3) அபிநயன், 4) கவிநயன்.

12. மூன்றாம் இடத்தைப் பெற்ற வீரர் யார்?
1) அனுஷன். 2) அபிலாஷ். 3) அபிநயன். 4) கவிநயன்.

13.  இரண்டு தடவை மடிக்கப்பட்ட சதுரத்தாளை படத்தில் உள்ளவாறு புள்ளிக்கோட்டின் வழியே வெட்டி எடுக்கப்பட்ட பின், விரித்துப்பார்க்கும் பொழுது தோன்றும் விதம்,



14. இத்தாயக்கட்டையில் இரண்டிற்கு எதிர்பக்கத்தில் இலக்கம் 1 உள்ளது எனின், 5 இற்கு எதிர்பக்கத்திலுள்ள இலக்கம்,
1) 1 2) 2
3) 3 4) 4




15. சாந்தியின் மாமி மகேஸ்வரி. மோகன் சாந்தியின் கணவரின் தந்தை. எனவே, மகேஸ்வரி மோகனுக்கு என்ன உறவு?
1) கணவன். 2) மகன். 3) மருமகள். 4) தந்தை.

16. இந்துவும் சிந்துவும் ஒரே ஆண்டில் பிறந்தவர்கள். கடந்த ஆண்டு இந்து தனது 16ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடும் போது சிந்து தனது 4 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடி னாள். சிந்து பிறந்த திகதி, மாதமாக இருக்கக்கூடியது,
1) பெப்ரவரி 28. 2) பெப்ரவரி 29. 3) மார்ச் 30. 4) டிசம்பர் 31.

பின்வரும் தரவிற்கு பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

17. கச்சேரி - தவில் - இசை



18. காற்று - விளையாட்டு - சாகசம்



19. குருதி என்பது 385 எனின், திருகு என்பது,
1) 358 2) 853 3) 583 4) 835

20. பசு புல் மேயும் என்பது □○△ எனின், பசு பால் தரும் என்பது,
1) □○○ 2) ○□⬠ 3) □○⬠ 4) □○△

21. இவ்வுருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை,
1) 6 2) 7
3) 8 4) 9



22. நீளம், அகலம், உயரம் கொண்ட உரு,




23. பின்வரும் நான்கு போத்தல்களிலும் மிகவும் குறைந்த அளவு நீர் கொண்டது எது?





1) A 2) B 3) C 4) D

* 24ஆம், 25ஆம் வினாக்களுக்கு உருவைப் பூரணப்படுத்துவதற்கு பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

24.



25.



* 26-28 வரையிலான வினாக்களிற்கு பின்வரும் தகவல்களை கருத்திற்கொள்க.
குடும்பத்தின் இளையவர் பின்வருமாறு கூறுகிறார். எனக்கு ஆண் சகோதரர்களும், பெண் சகோதரர்களும் சம எண்ணிக்கையில் உள்ளனர். குடும்பத்தில் மூத்தவர் பின்வருமாறு கூறுகிறார். எனக்கு 4 ஆண் சகோதரர்களும், 2 பெண் சகோதரர்களும் உள்ளனர்.

26. குடும்பத்தில் இளையவர் யாராக இருப்பார்?
1) ஆண். 2) பெண். 3) தாய். 4) தந்தை.

27. குடும்பத்தின் மூத்தவர் யாராக இருப்பார்,
1) தந்தை. 2) தாய். 3) ஆண். 4) பெண்.

28. குடும்பத்தில் உள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?
1) 6 2) 7 3) 8 4) 10


(தொடர்ச்சி 10 ஆம் பக்கம்)

**அன்பு மாணவர்களே!**

இப்பகுதியில் வெளியாகியுள்ள வினாத்தாள் - 1 இற்கான விடைக்குறிப்புகளுடன், வினாத்தாள் - 11 எதிர்வரும் வியாழக்கிழமை பிரசுரமாகும். இப்பகுதியில் தொடர்ச்சியாக வெளிவரும் வினாத்தாள்களை நேரங்கணித்துப் பயிற்சிசெய்து அடுத்த வருடம் நடைபெறவுள்ள அரச பரீட்சைக்கு இன்றே தயாராகுங்கள். உங்கள் விடைகளை ஆசிரியரின் விடைகளுடன் ஒப்பிட்டுப்பார்க்க மறவாதீர்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ பின்வரும் தரவுகளை அவதானித்து கீழ்வரும்




29.மாம்பழத்தின் பெறுமானம் யாது?
1) 3 2) 4 3) 5 4) 9

30.அப்பிள் பழத்தின் பெறுமானம் யாது?
1) 2 2) 3 3) 1 4) 7

31.அன்னாசிப் பழத்தின் பெறுமானம் யாது?
1) 2 2) 4 3) 6 4) 9

★ 32ஆம், 33ஆம் வினாக்களில் இரு நிகழ்ச்சிகளின் உருக்கள் ஒழுங்கு ABCDE எனத் தரப்பட்டுள்ளன. நிகழ்ச்சிகளின் சரியான ஒழுங்கு இடம்பெறும் விடையைத் தெரிவு செய்க.

32.நிலத்தைச் சுத்தம்செய்து வீடு கட்டி பால் பொங்குதல்.
A- சுவர் கட்டுதல்.
B- பால் பொங்குதல்.
C- நிலத்தைச் சுத்தம் செய்தல்.
D- கூரை போடுதல்.
E- அத்திவாரம் போடுதல்.
1) BCADE. 2) CEADB. 3) ABCDE. 4) EADBC.

33.ஆடையைத் தோய்த்து உலர்த்தி அணிந்துகொள்ளுதல்.
A- அழுத்துதல்.
B- நீர் + சலவைத்தூள்.
C- அணிதல்.
D- உலர்த்துதல்.
E- துவைத்தல்.
1) BEDAC. 2) ABCDE. 3) CDBEA. 4) CBAED.

★ 34-40 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் உரிய விடையை புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

34.முதலாம் எழுத்து கண்ணில் உண்டு; காதில் இல்லை. இரண்டாம் எழுத்து பத்தில் உண்டு; இருபதில் இல்லை. மூன்றாம் எழுத்து திங்களில் உண்டு; செவ்வாயில் இல்லை.

..........................................

35.முதலாம் எழுத்து சிவப்பில் உண்டு; கறுப்பில் இல்லை. இரண்டாம் எழுத்து குலத்தில் உண்டு; குளத்தில் இல்லை. மூன்றாம் எழுத்து பந்தில் உண்டு; பட்டத்தில் இல்லை. நான்காம் எழுத்து அகத்தியில் உண்டு; அகப்பையில் இல்லை.

..........................................

★36ஆம், 37ஆம் வினாக்கள் ஒவ்வொன்றிலும் குறிப்பிடப்படும் விடயத்தை எழுதுக.

36.இது சுவையான பழம். குலைகுலையாய்ப் பழுக்கும். நரி ஒன்று இந்தப்பழத்தைச் சாப்பிட எடுத்த முயற்சியில் தோல்வி கண்டது. அது என்ன பழம்?

..........................................

37.நான் உருவத்தில் சிறியவன். உழைப்பில் சுறுசுறுப்பானவன். என் இனத்தவர்களுடன் ஒற்றுமையாக வேலை செய்வேன். என்னைவிட பல மடங்கு பெரிய உணவையும் கொண்டு செல்வேன். இனிப்பு உள்ள இடத்தைத் தேடிச் செல்வேன். நான் யார்?

..........................................

★கீழ்வரும் அழைப்பிதழை வாசிக்குக.

## அழைப்பிதழ்

### நாவலர் வித்தியாலய ஆரம்பப்பிரிவு மாணவர்களின் "கல்விக்கண் காட்சி-2008"

இடம் :- வித்தியாலய மண்டபம்
காலம் :- ஏப்பிரல் 18, 19 மற்றும் 20ஆம் திகதி காலை 9.00 தொடக்கம் மாலை 4.30 மணிவரை
பிரதம அதிதி :- பேராசிரியர் ச.எழிலரசன்

இக்கண்காட்சியைப் பார்வையிட வருமாறு தங்களை அன்புடன் அழைக்கிறோம்.

18, பூங்காவீதி,
நுவரெலியா.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

38.கண்காட்சியை நடாத்தும் பாடசாலையின் பெயர் என்ன?

..........................................

39.கண்காட்சி எத்தனை நாட்கள் நடைபெறும்?

..........................................

40.இப்பாடசாலை எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?

..........................................

ஆசிரியர் :- **திரு.தி.மன்மதகாந்தன்**
தொடர்புகளுக்கு : 071-4449245

## கடந்த 13.11.2008 வெளிவந்த வினாத்தாள் 11 இற்கான விடைக்குறிப்புகள்

01.1 - வெள்ளை, 2 - புறா, 3 - களத்து மேடு, 4 - வேடுவிச்சி, 5 - பறக்குது/ தின்னுது/ திரியுது, 6 - சூடடிக்கும் இடம், 7 - பாடி+திரியுது, 8 - வேகம், 9-படபட, 10-தோன்றுதல்/ உதித்தல்.
02. 1-எனக்கு இரவு முழுவதும் நித்திரை வரவில்லை.
2-இன்று புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகின்றன.
03. 1 - பறித்தாள், 2 - மரம்.
04. 1 - வரதனும், காந்தனும் விளையாடச் சென்றனர், 2- பசுக்கள் வயலில் மேய்ந்தன.
05. 1 - Eye, 2 - Ear, 3 - Mouth.
06. 1 - நான் விளையாடிக் கொண்டிருக்கிறேன், 2 - அதை எடு.
07. 1 - எப்படிசுகமா?, 2 - நல்ல சுகம்.
08. 3 09. 2 10. 2 11. 4 12. 2 13. 1 14. 1
15. 3 16. 3 17. 4 18. 1 19. 2 20. 1
21.பலகை வாள். 22. கப்பி. 23. பாக்கு வெட்டி. 24. கத்தி. 25. கரம்.
26. கிரிக்கெட். 27. எல்லே.
28. ஹொக்கி. 29. (1) - 751, (2) - 157 30. 1/8 31.1- நான்முகி, 2-4, 3-6
32. பாலா. 33. 15 மாபிள்கள். 34. 5 மாபிள்கள். 35. 90 மாபிள்கள்.
36. பண்டார, விமல், சலீம், பாலா. 37. 21 கட்டைகள். 38. 1-14 cm, 2-10 $cm^2$
39. 16 40. பொருத்தமான கருத்துள்ள வாக்கியங்கள்.

விடைகள் தொடர்பான விளக்கங்களுக்கு:-
ஆசிரியர் திரு.து.திலீப்குமார் தொ.பே.:- 0714449447

### அன்பு மாணவர்களே!

★ வினாக்கள் தொடர்பான சந்தேகங்களுக்கு நேரடியாக உரிய ஆசிரியரிடம் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு சந்தேகங்களைத் தெளிவுபடுத்துவதற்கு ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.
★ கல்விச்சுடர் தொடர்பான முறைப்பாடுகளுக்கும் விமர்சனக்களுக்கும் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும் 021 222 9933, 0714273035, 0716850005.

# தனிப் பெருஞ் சிறப்புமிக்க தமிழ் கலைகள் பேணிப் பாதுகாத்து வளர்க்கப்பட வேண்டும்

## யாழ்.அரச அதிபர் கூறுகிறார்

மந்திகை, நவ.20

தனிப்பெருஞ் சிறப்புகள் பொருந்திய தமிழ்க்கலை, கலாசாரங்கள் பேணிப்பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்பட வேண்டும். இதன் மூலம் சமுதாய மறுமலர்ச்சியை ஏற்படுத்தி நல்லதொரு சமுதாயத்தை உருவாக்க முடியும். இந்த இலட்சியத்தில் வெற்றிபெற இன்று இங்கு இடம்பெறும் முத்தமிழ் விழாப் போன்ற விழாக்கள் வழி வகுக்கும். இவ்விழாக்கள் சிறப்பாக நடத்தபடவேண்டும்.

மேற்கண்டவாறு, பருத்தித்துறை பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் முத்தமிழ் விழா இறுதி நிகழ்விலே பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் குறிப்பிட்டார்.

விழா தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தில் மதுரைப் பண்டிதர் சச்சிதானந்தன் அரங்கில் பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

தொடர்ந்து உரையாற்றிய அரச அதிபர் குறிப்பிட் டவை வருமாறு:

கலைஞர்கள் தமது திறமைகளை வெளிக்காட்ட வேண்டும். திறமைகளை வெளிப்படுத்தும் கலைஞர்கள் கௌரவிக்கப்படவேண்டும். கலைத்தொண்டு ஊக்குவிக்கப்பட வேண்டும். கலைத்தொண்டாற்றுபவர்கள் மெச்சப்பட வேண்டும். எதிர்காலச் சந்ததியினர்கள் மத்தியில் கலைகளின் மகத்துவம் பற்றி விளக்கி அவற்றினை ஊக்கு விப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். எதிர்காலச் சந்ததியினரின் பிரச்சினைகளை நீக்கி சமூகத்தை வலுவூட்டி வளர்ச்சியடையச் செய்வதில் கலைகள் முக்கிய இடத்தினை வகிக்கின்றன.

காலத்திற்கேற்ப எமது வாழ்க்கையிலும் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். இதன்மூலமே சமுதாய மறுமலர்ச்சி ஏற்படமுடியும். சமூகத்தை நல்வழிப்படுத்துவதில் நாடகத்துறை முன்னணியில் திகழ்கின்றது. நாடகத்தின் மூலம் மக்கள் மத்தியில் எழுச்சியை ஏற்படுத்த முடியும். மலிந்துள்ள குற்றச் செயல்களைக் கூடக் கட்டுப்படுத்திவிட முடியும். நற்பண்பு கொண்ட இறை பக்தியுள்ள சமுதாயத்தின் மூலமே நாட்டை அபிவிருத்திப் பாதையில் வழி நடத்திச் செல்ல முடியும்.

ஒவ்வொரு மனிதனும் மற்றவர்களிடத்தில் அன்பு செலுத்த வேண்டும். அவர்களுக்கு உதவ வேண்டும். ஒவ்வொருவரும் நான் மற்றவர்களுக்குத் தீங்கிழைக்க மாட்டேன் எனச் சபதம் செய்து வாழ்ந்தால் வாழ்வில் ஒளி வீசும். கலைகள் மூலம் சிறந்த சமுதாயத்தை உருவாக்க வழி வகுக்க வேண்டும்.- என்றார்.

இவ்விழாவிலே யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினமும் [illegible] மற்றும் எட்டுக்கலைஞர்கள் விருது வழங்கிக் கௌரவிக் கப்பட்டனர். (202-218)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
இலட்சுமி இளையவி

தாயின் மடியில்
14.10.1917

இறைவனடியில்
21.10.2008

எம் உயிரினில் கலந்து உணர்வினில் ஒன்றிவிட்ட அன்புத் தெய்வமே! தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

திருமதி பாலேஸ்வரி தம்பிராசா (மருமகள்).
பேரப்பிள்ளைகள்: சுபாஜினி குணலிங்கம் (கொலண்ட்),
தர்மினி ரஞ்சித்குமார் (லண்டன்),
ராகினி குலராஜன் (ஜேர்மனி),
வதனி முருகையா (சுவிஸ்),
மாலினி நாகேஸ்வரன் (டென்மார்க்),
சாந்தினி சிறீகாந்தன் (ஜேர்மனி).

கோட்டைக்காடு,
மல்லாகம். (79965)

# அதிபர் இடமாற்றம்

யாழ்ப்பாணம்,நவ.20

மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அதிபர் எவ்.எக்ஸ்.அன்ரன் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலைக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளார்.

எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் இடமாற்றம் செய்யப்படவுள்ளதாக மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (202-207)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
துரைச்சாமி செல்லம்மா

மலர்வு: 10.02.1936
உதிர்வு: 21.10.2008

எமதருமை அம்மாவே! பத்து மாதம் எம்மைச் சுமந்து
பக்குவமாய் வளர்த்தெடுத்து நல்வழிகாட்டி
உணவைச் சுருக்கி இறைவன் அருள்பெற்று
பார்புகழ் எம்மை வாழ வைத்து உன்கடமை
முடிந்ததென்று எங்கள் குலதெய்வமாம் வேலங்காட்டுத்
துர்க்கை அம்மனிடம் நீங்கள் சென்று விட்டீர்களோ அம்மா....
உங்கள் நினைவுகளை நெஞ்சில் சுமந்தபடி வாழ்ந்திடுவோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எமது அன்னையின் மரணச் செய்தியறிந்து ஓடோடி வந்து உதவிகள் பல புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் மற்றும் தொலை பேசி, தந்தி, கடிதங்கள் ஊடாக அனுதாபங்களை எம்மோடு பகிர்ந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

வாதரவத்தை,
புத்தூர். (79938)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி இரண்டு பதில் ஒன்று

1) பட்டம் பறப்பது எதனால்?
படிப்புச் சிறப்பது எதனால்?
2) நல்லபாம்பு தலைதூக்குவதேன்?
நாம் "கமரா" முன் நிற்பது ஏன்?
3) காடு குறைவது ஏன்?
கால்வாய் நீள்வது ஏன்?
4) பந்து எழும்புவதேன்?
பையன் அழுவதேன்?
5) கொட்டாவி வருவது எதனால்?
பிள்ளை அழுவது எதனால்?
6) தோட்டத்தைப் பதப்படுத்துவது எப்படி?
தீனியைக் கோழி தின்பது எப்படி?
7) புத்தகத்தின் ஆடை எது?
இரத்தம் உறிஞ்சும் உயிரினம் எது?
8) மலரால் தொடுக்கப்படுவது எது?
சூரியன் மறையும் நேரம் எது?

விடைகள்

1) நூலால்
2) படமெடுக்க
3) வெட்டுவதால்
4) அடிப்பதால்
5) பசியால்
6) கொத்திக்கொத்தி
7) அட்டை
8) மாலை

கோகுலா சு. கோபன், 8சி, யா/வேம்படி ம.உ.பா.

# கணித விநோதம்

1) 1x8+1= 9
12x8+2=98
123x8+3=987
1234x8+4=9876
12345x8+5=98765
123456x8+6=987654
1234567x8+7=9876543
12345678x8+8=98765432
123456789x8+9=987654321

2) 1x1=1
11x11=121
111x111=12321
1111x1111=1234321
11111x11111=123454321

3) (1x7) +1 = 8
(11x7) + 11 = 88
(111x7) + 111 = 888
(1111x7) + 1111 = 8888
(11111x7) + 11111 = 88888

மதேந்திரன் சிவனொளி, 10, யா/பண்டத்தரிப்பு பெண்கள் உ.பா.

# இழந்து விடாதீர்கள்

கோபமாய் பேசினால்
குணத்தை இழப்பாய்
அதிகமாய் பேசினால்
அமைதியை இழப்பாய்
அதிகாரமாய் பேசினால்
ஆதரவை இழப்பாய்
வெட்டியாய் பேசினால்
வேலையை இழப்பாய்
வேகமாய் பேசினால்
அர்த்தத்தை இழப்பாய்
ஆணவமாய் பேசினால்
அன்பை இழப்பாய்
அவதூறாகப் பேசினால்
இறையருளை இழப்பாய்.

உ.பிரதீப்
தரம் - 11பி
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
கந்தரோடை.

# எறும்புகளும் அவற்றின் மோப்பத்திறனும்



க.மதுரன்
மாதகல் வடக்கு, மாதகல்.

எறும்புகள் இனிப்புப் பதார்த்தங்களைச் சரியாகக் கண்டுபிடிக்க அவற்றின் மோப்பசக்தி உதவுகின்றது. அத்தோடு அப்பதார்த்தங்களைத் தன் இனத்தவருக்கும் சரியாக தெரியப்படுத்துகின்றது. அவ்வாறான இயல்புடைய எறும்புகளின் மோப்பசக்தி உணர்கொம்பில் இதற்கென தனியாக மோப்ப செல்கள் (கலங்கள்) உண்டு. ஓர் எறும்பு எங்கேயாவது இனிப்புப் பொருள்களைக் கண்டுபிடித்தால் அவ்விடத்திலிருந்து வாசனைப் பாதை அமைத்து இருப்பிடம் வரை செல்கின்றது. பின்பு அப்பாதையை முகர்ந்துகொண்டு ஏனைய எறும்புகள் வரிசையாகச் செல்கின்றன. இவ்வாறு செல்லும்போது வாசனைப் பாதை குழப்பப்பட்டால் அவை தடுமாற்றமடையும். இதனை நாம் சிலவேளைகளில் காணக்கூடியதாக இருக்கும். இவ்வாறான தன்மை வாய்ந்த எறும்புகளினது மூளையின் அளவு என்ன தெரியுமா? ஒரு மில்லிமீற்றரின் ஆயிரத்தில் ஒரு பகுதி. அதில் இருக்கும் நியுரோன் கலங்களின் எண்ணிக்கை இருபதாயிரத்திலிருந்து ஒரு லட்சம் வரையாவது ஆகும்.

# கேள்விக்கு என்ன பதில்? - 11

அனுப்பியவர்: க.பொன்னுக்கோன், நாவற்குழி வடக்கு, கைதடி

தச்சர் ஒருவர் கட்டடம் ஒன்றின் 4 மூலை
களிற்குத் தறைவதற்காக ஒரு தொகை ஆணி
யோடு செல்கின்றார். அங்கே அவர் கொண்டு
சென்ற அதேயளவு ஆணிகள் உள்ளன. அவர்
ஒரு தொகை ஆணியை அறைந்துவிட்டு மிகுதி
யோடு 2ஆவது மூலைக்குச் செல்கின்றார். அங்
கும் தச்சரிடம் தற்போது இருக்கின்ற அதேயளவு ஆணிகள்
உள்ளன. அவற்றிலும் ஒரு தொகை ஆணிகளைத் தறைந்து
விட்டு மிகுதியோடு 3ஆவது மூலைக்குச் செல்கின்றார். அங்
கும் அவரிடமுள்ளதைப் போன்று அதேயளவு ஆணிகள் உள்
ளன. அங்கும் ஒருதொகையை தறைந்துவிட்டு மிகுதியுடன்
4ஆவது மூலைக்குச் செல்கின்றார். அங்கும் அவர் கொண்டு
சென்ற அதேயளவு ஆணிகள் உள்ளன. அப்போது அங்கே
யும் ஆணிகள் தறைகின்றார். இப்போது அவரிடம் ஆணி
கள் எதுவும் மிஞ்சவில்லை. ஆனால் நான்கு மூலைகளுக்
கும் சம எண்ணிக்கையான ஆணிகளே தறையப்பட்டு உள்ளன.
தச்சர் கொண்டு சென்ற ஆணிகள் எத்தனை? தறையப்
பட்ட ஆணிகள் எத்தனை?

(சரியான விடையை 30.11.2008இற்கு முன்னர் அனுப்பிவைக்கவும்.)

கேள்விக்கு என்ன பதில்? -09இன் சரியான விடை மிகச்சிறிய பொருத்தமான எண் 2519 ஆகும். ஆயினும் 5039, 7559, 10079 போன்ற வேறு பல எண்களும் உள்ளன.

## கேள்விக்கு என்ன பதில்? - 09 - பரிசு பெறுவோர்

முதலாம் பரிசு - ஜெ.யூட்டலரிஸ்ரன், தரம் - 10சி,
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.
இரண்டாம் பரிசு - பே.ர.போல் அன்ரனி,
அலுக்கை, அளவெட்டி.
மூன்றாம் பரிசு - லோகநாதன் ஜனார்த்தனன், 2009 A/L,
கலைப்பிரிவு, புங்குடுதீவு மகாவித்தியாலயம்.

## பாராட்டுப் பெறுவோர்

1. நம்பையா பாலச்சந்திரன், மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
2. நா.கஜானனன், 91, ஆசீர்வாதப்பர் வீதி, அரியாலை மேற்கு.
3. எல்.ஆர்.ரிக்ஷரோன், சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கு.
4. குமரபதி விசாகன், யாதம்பை, மாதகல்.
5. சிரோமினி வியூனிக்கா இரத்தின கிருபாகரன் தரம் 07, வசாவிளான் ம.ம.வி.
6. ஜோன் செல்வம் ஏஞ்சலின், தென்னிந்தியத் திருச்சபை, நெடுந்தீவு.
7. சி.யனிட்டா, சிங்...
8. யே.கார்மேல் தர்சிகா, 6ஆம் வட்டாரம், நெடுந்தீவு மத்தி.
9. பொ.தில்லைநாதன், 10/1, சிவன் வீதி, திருநெல்வேலி.
10. ச.நிர்மலராஜா, 2ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை.

# இளவல்கள் வட்டம்

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :- ....................
முகவரி :- ....................
:- ....................
....................
திகதி ....................
கையொப்பம் ....................

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# சிந்திக்க சில வரிகள்

- உலகில் சகலருக்கும் அன்பு காட்டு ஆனால் சகலரையும் நம்பிவிடாதே.
- நீ சொல்லப்போகும் வார்த்தை மௌனத்தை விடச் சிறந்தது என்று திடமாய் தெரியும் வரை வாயைத் திறவாதே.
- நிறையப் படிப்பதைவிட பயன் உள்ளவற்றை படிப்பவனே தலைசிறந்தவனாய் உருவெடுப்பான்.
- மணிக்கணக்கில் போதனை செய்வதை விட ஒரு கணப்பொழுதில் உதவி புரிந்தாலே போதும்.
- இரவை இரவாகவும் பகலைப் பகலாகவும் பாவனை செய். நீ மகிழ்வுடன் இருப்பாய்.
- தான் வாழ்வதற்கு உலகம் உதவவேண்டும் என்று எண்ணுபவன், உலகம் வாழ்வதற்கு உதவ முனையவேண்டும்.


ஜெ.ராதிகா, வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி.

# காதல் தேர்

எங்கள்
காதல்
தேரினிலே...
நீயும்,
நானும்,
சமேதராய்!
ஆனால்
வடம்பிடிக்க
யாருமே
வரமாட்டார்கள்!
ஏனெனில்
சாதி,
அந்தஸ்து
கௌரவம்
போன்ற
ஆசாசம்
அவர்களுக்கு!
நாமே
ஆரோகணித்து
அவரோகணிப்போம்.

எஸ்.கவிதரன்
சண்டிலிப்பாய்.

# நாடும் நடப்பும்




ச.சுமேதினி
நடேஸ்வராக் கல்லூரி

# எதிர்பார்த்து எதிர்பார்த்து

காத்திருப்புகள் பல நாளாய்,
காணவில்லை உன்னை!
பெய்யவில்லை பெருமழை.
காலம் மாறிவிட்டதுவோ?
அப்பப்போ வந்திங்கு
ஆங்காங்கே தூறற்பாசாங்கும்
தேவையில்லா நேரம் வந்து
தேங்கவிட்டுச் செல்லுவதும்
வேண்டும் என்ற வேளையிலே
வெறுத்து எம்மை ஒதுக்குவதிலும்
என்ன லாபம் நீ கண்டாய்?
கார்மேகக் கூட்டங்கள்
திரண்டுவந்து
இரகசியக் கூட்டம் வைத்து
கலைந்து செல்வதுதான் ஏனோ?
கொடும்பாவி கட்டவேண்டும்
உன் கோரத்தனத்திற்கு!
இயற்கை செய்யும் சோதனைக்கு
விவசாயி ஆய்வுப் பொருளா?
விதைத்த நெல்லும் முளைக்காமல்
விம்மி விம்மி அழுகின்றது
வாடைக்காற்று வீசியது
சோளக் காற்றும் வீசியது
விழவில்லை மழைத்துளிகள்!
நனையவில்லை நன்நிலங்கள்
வியர்க்கிறது எம்மேனி.
மனம் மிரங்கி வந்திங்கு
மாரி மழை பொழியாயோ?
மக்கள் பஞ்சம் தீர்வதற்கு.

க.சிவரூபன்
கந்தரோடை, பொலிகண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களது உரிமைகள் மறுக்கப்பட்டமையே ஆயுதப் போராட்டம் தலைதூக்க வழி வகுத்தது

**18.11.2008 உதயனில் 'வெள்ளையினச் சிறார்களுடன் சமமாகக் கல்வி கற்கத் தகுதியற்றிருந்த கறுப்பின அமெரிக்கச் சிறுவனே இன்று அந்த நாட்டின் ஜனாதிபதி' என்னும் தலைப்பில் வெளியான கட்டுரையின் மிகுதிப் பகுதி. சுனந்த தேசப்பிரிய எழுதி 'ராவய'வில் வெளியான கட்டுரையின் தமிழ் வடிவம் இது.**

யாழ்ப்பாணத்தில் இன்று சிங்கள மக்கள் எவரும் இல்லை. அம்பலாங்கொடையில் மாத்திரமல்ல தென்பகுதியின் கரையோரப் பிரதேசங்களின் பெரும்பாலான நகரங்களில் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த தமிழ் மக்களும் கூட இன்று அங்கில்லை. 2004 ஆம் ஆண்டில் இந்நாட்டை நிர்வகித்த சந்திரிகா குமாரதுங்கவின் அரசில் பிரதமராகப் பதவியில் அமர்வதற்கு தகுதியும் வாய்ப்பும் கிட்டியிருந்த லக்ஷ்மண் கதிர்காமருக்கு அப்பதவி கிட்டாது போனமைக்கு அவர் தமிழ் இனத்தவர் என்பதே காரணமாயிற்று. இன்றைய நிலையில், இலங்கையின் ஜனாதிப திப் பதவியல்ல, முக்கிய அமைச்சுப் பதவி ஒன்றுகூட தமிழ் இனத்தைச் சேர்ந்த ஒருவருக்கு கிட்டமாட்டாது. இதுவே ஐம்பது ஆண்டுகளுக்குப் பின்னரான இந்நாட்டின் நிலைப்பாடாகும்.

இந்நாட்டின் தமிழ் அரசியல் கட்சிகள் தமது உரிமைகளைக் கோரி அஹிம்சை வழிப் போராட்டங்களை 1956ஆம் ஆண்டுகளிலிருந்தே முன்னெடுத்து வந்துள்ளன. 1977இல் சிறையிலிருந்து விடுதலையான நான், அத்தகையதொரு அஹிம்சை வழிப்போராட்டத்தில் கலந்துகொள்வதற்காகவே யாழ்ப்பாணத் துக்குச் சென்றிருந்தேன். 1956ஆம் ஆண்டின் பின்னர் தமிழ் மக்களால் முன்வைக்கப்பட்ட அவர்களது அடிப்படைப் போராட்டக் கோரிக்கையான தமிழ் மொழிக்குச் சம அந்தஸ்து என்ற உரிமையை வழங்க இந்நாட்டின் நிர்வாகிகளுக்கு இருபதாண்டுகளுக்கும் மேற்பட்ட காலம் தேவைப்பட்டுள்ளது. அதுவும் ஆயிரக்கணக்கில் பிணங்கள் குவிந்ததன் பின்னரேயாகும். அதுவும் கூட 1979இல் அது, சட்டமாக்கப்பட்டதேயல்லாது நடைமுறைச் சாத்தியமானதாக ஆக்கப்படவில்லை. உப யோகத்துக்குக் கொண்டுவரப்படவில்லை.

1988இல் மாகாண சபைகள் சட்டமூலத்துக்கு எதிராக எழுந்து நாட்டையே குழப்பிவிட்ட தரப்பினர் இன்று அனைத்துக் கட்சி மாநாட்டின் ஊடாக அந்த சட்டமூலத்தை நியாயப்படுத்தி நிற்பதும் இருபது ஆண்டுகளுக்குப் பின்னரேயாகும். இந்நாட்டின் தமிழ் அரசியல் கட்சிகளால் தமது உரிமைகளைப் பெறுவதற்காக அஹிம்சை வழியில் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும், அவை அடக்கி ஒடுக்கப்பட்டமை, விடுதலைப்புலிகள் அமைப்பின் பயங்கரவாதத்தை ஒடுக்கிவிடுதற்கு அல்ல என்பதையும் நாம் நன்கறிவோம். ஏனெனில் அக்காலகட்டங்களில் பிரபாகரனோ, அவரது விடுதலைப் புலிகள் அமைப்போ அரசியலில் களமிறங்கியிருக்கவில்லை.

கடந்துசென்றுள்ள ஐம்பதாண்டு காலம் முழுவதிலும் எமக்கு வாய்ப்புகள் கிட்டும் போதெல்லாம் தமிழ் மக்களுக்குக் கிட்டியிருந்த உரிமைகள் பறித்துக் கொள்ளப்பட்டுள்ளதேயல்லாது, அவர்களும் எமக்குச் சமமான சம உரிமை கொண்ட இந்நாட்டின் குடிமக்களே எனக் க்ருதப்படும் விதத்திலான சட்டவரைபையோ அல்லது அரசியல் கலாசாரத்தையோ கட்டமைத்துவிடுவதாக இருக்கவில்லை. அதேவேளை, அத்தகைய சந்தர்ப்பங்களின் மத்தியில் இந்நாட்டின் அனைத்து மக்களும் அனுபவித்து வந்துள்ள உரிமைகளைத் தடுத்துவிடும் செயற்பாடுகளும் கூட இடம்பெற்றன.

### ஜனாதிபதி மஹிந்தவின் மௌனம்

இன்று, நாட்டின் அரசியல் தலைவர்களின் வாதமோ, தமிழர்களும் முஸ்லிம்களும் இலங்கைக்கு உல்லாசப் பயணிகளாக வந்த மக்களே அவ்வாறு வந்த - வந்து குடியேறிகள் என்பதாகவே உள்ளது. இந்நாட்டின் இராணுவத் தளபதியோ, அந்த மக்கள் இந்நாட்டில் வாழவேண்டுமானால், அநாவசியமான கோரிக்கைகள் எதையும் முன்வைப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். இந்நாட்டின் ஜனாதிபதியோ இராணுவத் தளபதியின் அக்கருத்து வெளிப்பாடு குறித்துவாயே திறக்கவில்லை. மௌனமாகவே இருந்து விட் டார்.

பிரபாகரனின் சாதனை அதாவது, தமிழ் இளைஞர், யுவதிகளின் ஆயுதப் போராட்டம், இந்த நிலைப்பாட்டைத் தீவிரப்படுத்து வதற்குக் காரணியாகியுள்ளது என்பதிலும் எந்தவொரு விவாதத்துக்கும் இடமில்லை. கெரில்லாப் போராட்டமொன்றின் குறிக்கோளும் கூட அதுவேயாகும். அதைத் தெளிவுபடுத்துவதானால், நாட்டை நிர்வகித்துவரும் நிர்வாகத் தரப்பினரால் நாட்டின் நிர்வாகத்தைக் கொண்டுசெல்ல இயலாத அளவுக்கான நிலைப்பாட்டை உருவாக்கி விடுவதேயாகும்.

அது எந்தளவுக்குச் சாத்தியமானதாகும் அல்லது சாத்தியமற்றதாகும் என்பது தனியாக ஆராயப்பட வேண்டியதொன்றாகும். ஆனாலும், ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர், வெள்ளையினச் சிறார்கள் கல்வி பயிலும் அதே பாடசாலைக்கு வெள்ளையினச் சிறார்களுடன் சமமாகக் கல்வி பயிலச் செல்வதற்கு உரிமையற்றிருந்த கறுப்பினத்தைச் சேர்ந்த அமெரிக்கச் சிறுவனொருவன் இன்று அதே நாட்டின் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நிகழ்வானது எமக்காக நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டியுள்ளதொரு கருமம் அல்லவா?

(முற்றும்).

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 09 . 01 . 1974



இறப்பு 01 . 12 . 2007

### அருணாசலம் கமலகுமார்

*(தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்)*

*திதி: அபரபக்க அட்டமி (20.11.2008)*

ஆண்டு ஒன்று ஆகிடினும்
ஆறிடுமோ எங்கள் மனம்
நீர் இல்லா வாழ்வினை
நினைத்துப் பார்க்க முடிகிறதா?
அன்புடனே எமை யெல்லாம்
அரவணைத்து ஆசையுடன்
இதயத்தில் இடம் பிடித்து வாழ்ந்தவரே.

நெடுந்தீவு-10. (79979) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



*சவரிமுத்து மனுவேற்பிள்ளை*

*(ஓய்வுபெற்ற ஆசிரியர்)*

நெடுந்தீவு கிழக்கு, 12ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சவரிமுத்து மனுவேற்பிள்ளை (18.11.2008) செவ்வாய்க்கிழமை இறைபதமெய்தினார்.

அன்னார் அமரர்களான சவரிமுத்து-வரோணிக்கா தம்பதியரின் அன்பு மகனும் அமரர்களான மாரிமுத்து- பார்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் அமரர் அந்தோனிப்பிள்ளை மற்றும் மரியாம்பிள்ளை (கனடா), ஞானம்மா, வரப்பிரகாசம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் மேரிசறோசா (ஓய்வுபெற்ற அதிபர்), அன்னமலர் (ஆசிரியர், வவுனியா), அருளானந்தம் (திட்ட உத்தியோகத்தர், போறூட்), மரியநாயகம் (கரித்தாஸ்-கியூடெக்), சேவியர் தனிநாயகம் (USA), அன்னபாக்கியம் (பிரதம லிகிதர் உ.அ.அ.பணிமனை, நெடுந்தீவு), அன்ரன் திருச்செல்வம் ஆகியோரின் அன்புத் தந்தையும் கணபதிப்பிள்ளை, மனோரஞ்சினி, சத்தியஜோதி, வசந்தி ஆகியோரின் அன்பு மாமனும் சுதர்சினி, ஜெகதீபன் (லண்டன்), நவதீபன், ஜனாதீபன், துஷ்யந்தினி, கிரிசாந்தினி, நிஷாந்தன் (டுபாய்), துஷியந்தன் (மருத்துவபீடம், ரஷ்யா), நிரோஜன், அருணன் (USA) ஆகியோரின் அன்புப் பேரனும் ரிஷிக்காந்தின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று (19.11.2008) புதன் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கட்டு ராமன் சல்லி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அருளானந்தம் (மகன்).

*12 அம் வட்டாரம்,*
*நெடுந்தீவு.* (79982)

## கண்காட்சி

கரவெட்டி, நவ.20

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் ''மனை முகாமைத்துவ தொழிற்பயிற்சி நெறிக் கண்காட்சி'' நாளை மறுதினம் சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் காலை 9.00-4.30 மணிவரை நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி வி.சுகுமாரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியும், சிறப்பு விருந்தினர்களாக வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா, கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன், கரவெட்டி அந்தோனியார் ஆலய பங்குத் தந்தை சி.ஆனந்தகுமார், நெல்லியடி மக்கள் வங்கிக் முகாமையளார் வி.சிவகுமாரன், லூர்த் கன்னியர்மடம் அருட் சகோதரி ஜே.சிறியபுஸ்பம், கரவெட்டி உதவிக் கல்விப் பணிப்பாளர், முறைசாராக் கல்விப் பிரிவு த.தவேந்திரராசா ஆகியோரும் கலந்துகொள்வர். (202-70)

## யாழ். வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம்

யாழ்.கல்வி வலயத்தில் ஏற்பட்டுள்ள முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் வெற்றிடத்தை நிரப்புவதற்காக வலயத்திற்குட்பட்ட மாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றும் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு I, வகுப்பு 2-I தரத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவங்களை யாழ். கல்வி வலயத்தில் பெற்று, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்யாழ்.கல்வி வலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

## யாழ்.பிரதேசத்தில் ஓய்வூதியம் பெறுபவர்களின் விவரம் திரட்டப்படுகின்றது

யாழ்ப்பாணம், நவ.20

ஓய்வூதியம் பெறுபவர்களின் விவரங்கள் யாழ்ப்பாண பிரதேச செயலர் பிரிவில் கணனிமயப்படுத்தப்படவுள்ளன.

இந்த செயற்றிட்டத்தை விரைவுபடுத்தி கொடுப்பனவுகளை இலகுவாகவும் விரைவாகவும் மேற்கொள்வதற்கு வசதியாக ஓய்வூதியம் பெறுபவர்கள்தமது விவரங்களை நாளை வெள்ளிக்கிழமை அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

முழுப்பெயர், ஓய்வூதிய இலக்கம், விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய இலக்கம், தேசிய அ.அட்டை இலக்கம், ஊதியம் பெறும் வங்கிக் கிளை, ஓய்வூதிய வங்கி கணக்கிலக்கம் போன்ற விவரங்களை உரிய படிவத்தில் குறித்தனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது. (202-302)

## கிழக்கு மாகாணசபையின் முதலாவது வரவு-செலவுத் திட்டம்

கிழக்கு மாகாணசபையின் முதலாவது வரவுசெலவுத்திட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சமர்ப்பிக்கப்பட்டது. கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் நேற்றுமுன்தினம் காலை 9.45 மணியளவில் தமது முதலாவது வரவுசெலவுத் திட்டத்தை சபையில் சமர்ப்பித்தார்.

வரவுசெலவுத் திட்டத்தை சமர்ப்பித்து உரையாற்றிய முதலமைச்சர், எமது மாகாணத்தின் துரித அபிவிருத்தி மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மறுவாழ்வு போன்ற திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள இந்த வரவுசெலவுத் திட்டத்தை சபை ஏற்றுக்கொள்ளுமென நம்புகிறேன் என்று கூறினார்.

இவ்வரவு செலவுத் திட்டம் மீதான விவாதம் நேற்று முன்தினம் சபையில் ஆரம்பமானதோடு, அதன் மீதான வாக்கெடுப்பு நாளை வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## கண்ணீர் அஞ்சலி



*கடந்த பல ஆண்டுகளாக புங்குடுதீவு மேற்கு, குறிகாட்டுவான் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் அன்னதான சபையின் உப தலைவராகத் தொண்டாற்றியவரும் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, சிங்கப்பூர் போசனசாலை உரிமையாளருமான*

### செல்லையா கனகலிங்கம்

*அவர்கள் 17.11.2008 அன்று அமரத்துவமடைந்த செய்திகேட்டு ஆறாத்துயரில் மூழ்கி இருக்கின்றோம். அவருக்கு எமது இதயம் கனக்கும் கண்ணீர்த் துளிகளைக் காணிக்கை ஆக்குவதுடன், அவரது இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

**நிர்வாக சபையினர்,**
**புங்குடுதீவு மேற்கு, குறிகாட்டுவான்,**
**ஸ்ரீ மனோன்மணி அம்பாள் அன்னதான சபை.**

(79971)

## அந்தியேட்டி அழைப்பு

மண்ணில் 12 . 06 . 1934



விண்ணில் 21 . 10 . 2008

### திருமதி கந்தையா சிவக்கொழுந்து

*எங்கள் குலம் விளங்க விளங்கிய குடும்பத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகளும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வும் இன்று (20.11.2008) புதன்கிழமை புஸ்பராசா அவர்களின் இல்லத்தில் நடைபெறும் இந்நிகழ்வுகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

குமாரசாமி புஸ்பராசா
குடும்பத்தினர்.

மீசாலை வடக்கு,
மீசாலை. (சி/555378)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் 7 கோடி ரூபா நிதி அரசுடமையானது

## மத்திய வங்கி அறிக்கையில் தகவல்

கொழும்பு, நவ.20

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கணக்கில் வைப்பீடு செய்யப்பட்டிருந்த ஏறத்தாழ ஏழு கோடியே பத்து லட்சம் பணத்தை இலங்கை மத்திய வங்கி பறிமுதல் செய்துள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிதி செயற்படுத்தப்படுவது நிறுத்தி வைக்கப்பட்ட சமயத்தில் அந்நிதியில் ஏறத்தாழ ஏழு கோடியே 10 லட்சம் ரூபா இருப்பில் இருந்ததாகவும் அந்நிதி இப்போது அரசினால் பறிமுதல் செய்யப்படுவதாகவும் மத்திய வங்கி செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான அமைப்பு என பொதுவாகக் கருதப்படும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் பொதுமக்கள் பண கொடுக்கல், வாங்கல் தொடர்புகள் வைத்துக் கொள்ளக் கூடாதெனவும் மத்திய வங்கி எச்சரிக்கை விடுத்துள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் கணக்குகள், 2006ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத பயங்கரவாத நிதிகளைக் கட்டுப்படுத்தும் சட்டத்தினதும் நிதி கொடுக்கல், வாங்கல் அறிக்கை சட்டத்தினதும் பிரிவுகளுக்கு அமைவாக இடைநிறுத்தப்பட்டிருந்தன.

வெளிநாடுகளிலும் உள்ளூரிலுமிருந்து இலங்கையில் மனிதநேய பணிகளுக்கென கிடைக்கப்பெற்ற பெருமளவி லான நிதி உள்ளூரில் பயங்கரவாத செயற் பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டதென்றும், மேற்கொண்டும் அதன் பெயரில் உள்ள பணம் பயங்கரவாதச் செயற்பாடு களுக்கு பயன்படுத்தப்படவிருப்பதாகவும் இரகசிய ஆய்வுகளின் மூலம் கிடைத்த தகவல்களையடுத்து அந்த நிதி முடக்கப்பட்டு உறங்கு நிலை யில் வைக்கப்பட்டிருந்தன.

இந்நிறுவனத்தின் வேறு சொத்துகள், நிதி பற்றி மேற்கொண்டும் ஆய்வுகள் நடைபெற்று வருவதுடன், தடை செய் யப்பட்ட இந்நிறுவனத்துடன் பொது மக்கள் எதுவிதத் தொடர்புகளும் வைத்துக் கொள்ளலாகாதென்றும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (ப)

### மக்கள் வங்கி நடத்திய கட்டுரைப் போட்டியில் சாவகச்சேரி மாணவன் முதலிடம்

யாழ்ப்பாணம், நவ.20

மக்கள் வங்கியின் 47 ஆவது வருட பூர்த்தியையொட்டி தேசிய ரீதியில் மாணவர்களிடையே நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் சாவகச்சேரியைச் சேர்ந்த மாணவன் தமிழ்க் கட்டுரைப் போட்டியில் முதலிடத்தைப் பெற்றுள்ளான்.

யாழ்.இந்துக் கல்லூரி மாணவனான எஸ்.சேந்தன் என்பவரின் கட்டுரையே முத லிடம் பெற்றதாகும்.

இவருக்குரிய பரிசில் நேற்று முன்தினம் மக்கள் வங்கியின் சாவகச்சேரிக்கிளையில் வடவலய உதவிப் பொது முகாமையாளர் க.ஆனந்தராஜாவினால் வழங்கப்பட்டது.

மக்கள் வங்கியின் ஜயஸ்ரீ சீட்டிழுப்பில் வெற்றி பெற்றவர்களுக்கும் குளிர்சாதனப் பெட்டி மற்றும் டி.வீ.டி. கருவி, மற்றும் சிசு உதான கணக்கில் அதிக தொகை வைப்பிலிட்ட மாணவிக்கு சைக்கிளும் நேற்று வழங்கப்பட்டன.(202-207)

# வன்னியில் 14 ஆயிரம் மாணவர்கள் இதுவரை பாடசாலைகளில் இணையவில்லை

கிளிநொச்சி,நவ.20

படையினரின் தாக்குதல்கள் காரணமாக வன்னிப்பெரு நிலப்பரப்பில் 14 ஆயிரம் மாணவர்கள் இதுவரை பாடசாலைகள் எதிலும் இணைந்து கெள்ள வில்லை என்று வலயக்கல்விப் பணிமனை தகவல் கள் தெரிவிக்கின்றன.

துணுக்காய் கல்வி வலயத்தில் 2ஆயிரத்து 500 க்கும் அதிகமான மாணவர் களும் கிளிநொச்சி கல்வி வலயத்தில் 10 ஆயிரம் வரையான மாணவர்களும் மடு கல்வி வலயத்தில் ஆயிரத்து 500 வரை யான மாணவர்களும் இதுவரை எந்த பாடசாலைகளிலும் இணைந்து கொள்ள வில்லை.

பாடசாலைகள் ரீதியாக வலயக் கல்வி திணைக்களங்கள் மேற்கொண்ட புள்ளி விவரங்கள் மூலம் இது தெரியவந்துள்ளதாகக் கிளிநொச்சி மடு, துணுக்காய், வலயக் கல்வித் திணைக்களங்கள் தெரிவித்துள்ளன.

# அரச அலுவலர்கள் இலங்கைக்கு வெளியே விடுமுறையில் செல்ல அனுமதி பெறுவதற்கு புதிய நடைமுறைகள்

யாழ்ப்பாணம், நவ.20

இலங்கைக்கு வெளியே விடுமுறையில் செல்வதற்கான அனுமதி பெறுவதற்குரிய நடைமுறைகளை முழுமையாகப் பின்பற்றுமாறு வடக்கு மாகாண பிரதம செயலாளர் சி.ரங்கராஜா சகல திணைக்களத் தலைவர்களுக்கும் சுற்றுநிரூபம் மூலம் அறிவித்துள்ளார்.

தாபன விதிக்கோவை அத்தியாயம் XII உப பிரிவு 23 இன் பிரகாரம் நாட்டுக்கு வெளியேயான விடுமுறை விண்ணப்பங்கள் யாவும் சம்பந்தப்பட்ட அலுவலரால் மூன்று மாத காலத்திற்கு முன்னர் சமர்ப்பிக் கப்பட்டு விடுமுறையின் முன்னரான ஒரு மாத காலப் பகுதிக்கு முன் பிரதம செயலாளர் அலுவலகத்துக்கு கிடைக்கக் கூடிய வகையில் அனுப்பப்படல் வேண்டும்.

ஆசிரியர் சேவை தவிர்ந்த அனைத்து சேவைகளுக்குரிய அலுவலர்களது நாட்டுக்கு வெளியேயான விடுமுறை விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர், அமைச்சின் செயலாளர் ஆகியோரின் சிபார் சுடன் மாகாண பொது நிர்வாக செயலகம் ஊடாக அனுப்பி வைக்கப்படல் வேண் டும்.

முறையாகப் பூர்த்தி செய்யப்படாத மற்றும் உரிய இணை ஆவணங்கள் அனைத்தும் முழுமையாக இணைக்கப்படாத விண்ணப்பங்கள் எதுவித முன்னறி வித்தலும் இன்றி நிராகரிக் கப்பட்டு திருப்பி அனுப்பப்படும்.

இந்த நடைமுறை 2008 நவம்பர் முதலாம் திகதி தொடக்கம் அமுலாகும் எனவும் சுற்றுநிரூபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. (202-207)




*உடுவில் பிரதேச செயலக சிறுவர் முதியோர் தின விழா சுன்னாகம் பிரதேச சபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.*
*இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் பிரதேச செயலர் திருமதி ச.மஞ்சுளாதேவி அருகில் நிற்பதையும் முதலாவது படத்தில் காணலாம்.*
*நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரை இரண்டாவது படத்தில் காணலாம்.* *(படங்கள் : நேசன்)*

# அரசியல் தீர்வு குறித்துப் பேசத் தேவையில்லை இனவாதக் கட்சிகள் ஜனாதிபதியிடம் வலியுறுத்து

கொழும்பு, நவ.20

தமிழீழ விடுதலைப் புலிகள் போரில் தோல்வி அடைந்து வருகின்றனர். எனவே, அரசியல் தீர்வு குறித்துப் பேச வேண்டிய அவசியம் இல்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் பேரினவாதக் கட்சிகள் வலியுறுத்தியுள்ளன என்று கூறப்பட்டது.

விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி, ஜாதிக ஹெல உறுமய ஆகிய கட்சிகளே இவ்வாறு வலியுறுத்தியுள்ளன.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ, ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற குழு தலைவர் அத்துரலியே ரத்னதேரர் ஆகியோர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்து பூநகரி கைப்பற்றப்பட்டமைக்கு பாராட்டு தெரிவித்த போதே இவ்வாறு வலியுறுத்தியுள்ளனர் என்று தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்திய அரசின் யோசனை எதனையும் கேட்க வேண்டிய அவசியமில்லை எனவும் புலிகளுக்கு எதிரான போரைத் தொடர்ந்து நடத்துமாறும் விமல் வீரவன்ஸ கோரிக்கை விடுத்தார் எனவும் கூறப்படுகிறது. (சி)

# புதுக்குடியிருப்பு மருத்துவ மனையில் விசர்நாய்க் கடிக்கு மருந்து இல்லை

கிளிநொச்சி,நவ.20

புதுக்குடியிருப்பு அரசினர் மருத்துவமனையில் விசர்நாய்க்கடிக்கான ஏ.ஆர்.வி. தடுப்பூசி மருந்து முற்றாக முடிவடைந்துள்ளதாக மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இத்தடுப்பூசி மருந்து இல்லாமையால் மக்கள் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த மக்களில் பெரும் எண்ணிக்கையிலானோர் இம்மருத்துவமனையை நம்பி இருக்கின்றனர்.

நாளொன்றுக்கு தற்போது வெளிநோயாளர் பிரிவு, கிளினிக் பிரிவு, விடுதியில் தங்கி நிற்போரென ஆயிரம் பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதே வேளை ஒட்சிசன் இல்லாமையினாலும் பெரும் நெருக்கடிநிலை உருவாகியுள்ளது. மேலும் சத்திரசிகிச்சைக்குத் தேவையான சில பொருள்களும் தீர்ந்து விட்டன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## மகிழ்ச்சியுடன் வாழ உலகியற்கல்வி

*மனிதன் பிரேமை நிரம்பிய தெய்வபக்தியையும், தியாகம் நிரம்பிய அரசியலையும் வளர்த்துக்கொள்ள வேண்டும். அப்போதே நாடு வளமுடன் இருக்கும். இன்று தியாகமில்லாத அரசியலைக் காண்கிறோம். அன்பு நிறைந்த பக்தியையும், நாம் காண இயலாது. இவ்வுலகில் மகிழ்ச்சியுடன் இருக்க, உலகியற்கல்வி தேவை. உள்ளே ஆனந்தம் பெருக, ஆன்மீகக் கல்வி தேவை. அன்பு தோய்ந்த ஆன்மீக முயற்சியே விரும்பத்தக்கது. அது இதயத்தை வளர்க்கிறது.*

*தியாகம் நிறைந்த அரசியல் உலகத்துக்குத் தேவைப்படுகிறது. உலகத்தைச் சீர் தி ரு த் த ,தியாகவுணர்வுடன் செயலில் ஈடுபட வேண்டும். முக்திக்கு முயற்சி செய்வதற்கு, அன்பு நிறைந்த பக்தி வேண்டும். தியாகமே உண்மையான யோகம். தியாகத்துடன் கூடிய யோகத்தைப் பயின்ற பின்னரே, அன்பு வளர்கிறது, அன்பை நாம் வளர்க்க இயலும்.*



*மனிதன் தன்னை முதலில் தெரிந்து கொண்டு, பிறகு மற்றவர்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். தன்னை தெரிந்து கொள்ளாதவர்கள் எவ்வாறு இறைவனைத் தெரிந்து கொண்டு அவரை அடைய இயலும்?*

**சாயி சிந்தனை**

# வடக்கு -கிழக்கு வைத்தியசாலைகளிலிருந்து 400 சிங்கள மருத்துவர்கள் வெளியேறுவர்

கொழும்பு,நவ.20

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பணியாற்றி வரும் 400 சிங்கள மருத்துவர்கள் பாதுகாப்புக் கருதி அங்கிருந்து வெளியேற்றப்படவுள்ளனர் என இலங்கை அரச மருத்துவர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அரச மருத்துவர் சங்கத்தின் துணைச் செயலாளர் மருத்துவ கலாநிதி உபுல் குணசேகர மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:

போர் இடம்பெற்று வரும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள சிங்கள மருத்துவர்களுக்கு அங்கிருந்து வெளியேறுவதற்கான அனுமதி வழங்கப்பட் டுள்ளது.

மட்டக்களப்பு பகுதியில் கடந்த வாரம் சிங்கள மருத்துவர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து வடக்கு - கிழக்கில் பணியாற்றி வரும் 400 மருத்துவர்களும் அங்கிருந்து வெளியேறுவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மருத்துவர்களுக்கு முழுப் பாதுகாப்பு வழங்கப் பாதுகாப்பு அமைச்சு முன்வந்துள்ள போதும் சுகாதார அமைச்சரின் நடவடிக்கைகள் காரணமாக நாம் அவர்களின் பேச்சை கேட்கத் தயாராக இல்லை.

மட்டக்களப்பில் பணியாற்றி வந்த 58 மருத்துவர்களும் வெளியேறியுள்ளனர். ஏனைய பகுதிகளில் உள்ள சிறிய மருத்துவமனைகளில் பணியாற்றி வரும் மருத்துவர்களும் பெரிய மருத்துவமனைகளுக்கு திரும்புமாறு கேட்கப்பட்டுள்ளனர் - என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி உணவகங்களில் சுகாதாரச் சீர்கேடு; நீக்குவதற்கு அதிகாரிகள் உடனடி நடவடிக்கை

மந்திகை,நவ.20

வடமராட்சிப் பிரதேசத்தில் உணவகங்கள், ஐஸ்கிறீம் உற்பத்தி - விற்பனை நிலையங்களில் சுகாதாரச் சீர்கேடுகள் இடம்பெறுகின்றன எனப் பொதுமக்கள் முறைப்பாடுகள் செய்துள்ளனர். இதையடுத்து இச் சுகாதாரச் சீர்கேடுகளை நீக்குவதற்கான உடனடி நடவடிக்கைகளைப் பருத்தித்துறைச் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் துரிதமாக மேற்கொண்டுள்ளது.

வைத்திய அதிகாரி அலுவலகப் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் குழு இப்பிரதேசத்திலுள்ள உணவகங்கள், ஐஸ்கிறீம் நிலையங்களில் திடீர்ப் பரிசோதனைகளில் ஈடுபட்டன. இத்திடீர் பரிசோதனைகளின் போது சுகாதார விதிகளைக் கடைப்படிக்கத் தவறிய உணவகங்கள், ஐஸ்கிறீம் நிலையங்களுக்கு ஆலோசனைகளைக் குழு வழங்கியது. சுகாதார விதிகளைக் கடைப்பிடிக்கத் தவறிய உணவகங்கள் உடனடியாகத் தவறுகளைத் திருத்திக்கொண்டன. சில ஐஸ்கிறீம் நிலையங்கள் தமது செயற்பாட்டை நிறுத்தியுள்ளன.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் மேற்பார்வை சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.இரவிச்சந்திரன் தலைமையில் உணவகங்கள், ஐஸ்கிறீம் நிலையங்களின் உரிமையாளர்களுக்கான கூட்டம் ஒன்றும் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் யாழ்.மாவட்ட உணவு, மருந்துப் பொருள்கள் பரிசோதகர் தி.மகாதேவா கலந்துகொண்டு உரையாற்றினார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் குறிப்பிட்டவை வருமாறு:

வடமராட்சிப் பிரதேசத்தில் இயங்கி வரும் உணவகங்கள், ஐஸ்கிறீம் நிலையங்களில் சுகாதாரச் சீர்கேடுகள் நிலவுகின்றன என பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இச்சுகாதாரச் சீர்கேடுகள் மக்கள் மத்தியில் தொற்றுநோய்கள் பரம்பலுக்குக் காரணமாகின்றது. இதனால் மக்கள் கஷ்டங்களை அனுபவிக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுவிடும்.

சுகாதாரச் சீர்கேடுகளுடன் இயங்கி வரும் உணவகங்கள், ஐஸ்கிறீம் நிலையங்கள் உடனடியாக சுகாதாரச் சீர்கேடுகளை நீக்கி சுகாதார விதிகளுக்கிணங்க செயற்படவேண்டும். இவற்றினை மீறி செயற்படும் உணவகங்கள், ஐஸ்கிறீம் நிலையங்களுக்குகெதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

இவ்விடயத்தில் உணவகங்கள், ஐஸ்கிறீம் நிலையங்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும். இவற்றை மீறிய சில உணவகங்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன - என்றார். (202-218)

## மன்னார் மாவட்டத்தில் பாதுகாப்பு ஏற்பாடு

எதிர்வரும் 27ஆம் திகதி இடம்பெறவுள்ள மாவீரர் தினத்தை முன்னிட்டு மன்னார் மாவட்டத்தில் பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் குவிக்கப்பட்டுப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

மாவீரர் தினத்திற்கு முன் மாவட்டத்தில் எவ்வித அசம்பாவிதங்களும் ஏற்படாதிருக்கவே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மன்னார் மாவட்டத்தின் சகல கிராமங்களிலும் நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர். வாகனங்கள் அனைத்தும் கடுமையாகச் சோதனையிடப் படுகின்றன. வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மாலை 6.30 மணியுடன் மூடப்படுகின்றன. இதனால் மக்கள் நடமாட்டம் இன்றி மன்னார் நகரம் வெறிச்சோடிக் காணப்படுகிறது. (202)

# உடுவில் விவசாயப் போதனாசிரியர் பிரிவில் சிறந்த விவசாயிகளாக 24 பேர் தெரிவாகினர்

யாழ்ப்பாணம்,நவ.20

உடுவில் விவசாயப் போதனாசிரியர் பிரிவில் கீழ் போட்டியிட்டு வெற்றியீட்டிய 24 விவசாயிகளைக் கௌரவிக்கும் வைபவம் அப்பிரிவு விவசாயப் போதனாசிரியர் செல்வி கா.ம.சவரிமுத்து தலைமையில் இன்று முற்பகல் 10 மணிக்கு வலி.தெற்குப் பிரதேச சபை நூலக மண்டபம் சுன்னாகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் பிரதேச செயலாளர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பிரதி விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், கால்நடை வைத்தியர் செல்வி லே.மரியதாஸ் ஆகியோர் கலந்துகொள்வர்.

வெற்றியீட்டி விவசாயிகளின் விவரம் வருமாறு:

*சிறந்த நெல் உற்பத்தியாளர்:* செல்லையா இலங்கைநாதன் (கந்தரோடை), சுப்ரமணியம் விக்கினராசா (கந்தரோடை), சிவபாதசுந்தரம் ஜெயானந்தன் (கந்தரோடை).

*சிறந்த சேதனப் பண்ணையாளர்:* மகேஸ்வரி குமாரவேற்பிள்ளை (சுன்னாகம் தெற்கு), சுஜாதா பூரணலிங்கம் (ஏழாலை வடக்கு), தம்பையா செல்வச்சலமன் (ஈவினை).

*சிறந்த சுயவிதைநெல் உற்பத்தியாளர்:* கந்தையா துரைசிங்கம் (கந்தரோடை, மடத்தடி), கந்தையா அருளானந்தராசா (கந்தரோடை), செல்வராசா வாமதேவன் (சுன்னாகம் மேற்கு).

*சிறந்த ஒருங்கிணைந்த பண்ணையாளர்:* பாலசிங்கம் திருமாறன் (ஏழாலை வடக்கு), கிறிஸ்மஸ் மனுவேல் றணேஸ்வரன் (ஏழாலை கிழக்கு), செல்வநாயகம் சிறிதரன் (ஏழாலை கிழக்கு).

*சிறந்த பெண் தலைமைத்துவ விவசாயி:* தனபாலசிங்கம் தவரட்ணேஸ்வரி (ஏழாலை மத்தி), ஜெயசேகரம் நிர்மலா (ஏழாலை வடக்கு), தேவராசன் தேவி (ஈவினை).

*சிறந்த சோளச் செய்கையாளர்:* குலசிங்கம் உதயராஜ் (ஏழாலை வடக்கு), கதிரித்தம்பி ஆனந்தசீலன் (ஏழாலை வடக்கு), பொன்னுத்துரை சிறீதரன் (ஏழாலை வடக்கு).

*சிறந்த நிலக்கடலைச் செய்கையாளர்:* கந்தையா நாகரத்தினம் (கந்தரோடை, மடத்தடி), மார்க்கண்டு சந்திரலிங்கம் (கந்தரோடை), தம்பிராசா உதயசந்திரன் (ஏழாலை தெற்கு).

*சிறந்த குரக்கன் செய்கையாளர்:* செல்லத்துரை பாக்கியராசா (குப்பிளான் தெற்கு), இரத்தினம் பாஸ்கரன் (ஏழாலை வடக்கு), தருமலிங்கம் தர்மரத்தினம் (ஏழாலை கிழக்கு). (202)

# நாட்டின் முதுகெலும்புகளான விவசாயிகள் பாராட்டி கௌரவிக்கப்படவேண்டியவர்கள்

## - தென்மராட்சிப் பிரதேச செயலர்

யாழ்ப்பாணம்,நவ.20

விவசாயிகள் ஒரு நாட்டின் முதுகெலும்பு என எமது முன்னோர்கள் கூறியுள்ளனர். நாட்டின் வளர்ச்சிக்காக மக்களின் உயிர்வாழ் தேவைக்காகப் பாடுபடும் விவசாயிகள் நிச்சயம் அனைவராலும் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

விவசாயத் திணைக்களத்தினால் எட்டுப் பிரிவுகளாகப் போட்டிகளை விவசாயிகளிடையே ஏற்படுத்தி அந்தப் போட்டியாளர்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்டவர்களையே இன்று பாராட்டிக் கௌரவிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பிரிவிலும் நூற்றுக்கணக்கான விவசாயிகள் பங்குபற்றியிருப்பார்கள் என நம்புகிறேன். தாம் தேர்ந்தெடுத்த பிரிவில் தமது முயற்சியை வெளிப்படுத்திய அனைத்து விவசாயிகளும் பாராட்டப்பட வேண்டியவர்களே.

இவ்வாறு யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களத்தினால் சாவகச்சேரிப் பிரதேச விவசாயிகளிடையே தெரிவுசெய்யப்பட்ட சிறந்த விவசாயிகளைக் கௌரவிக்கும் நிகழ்வில் தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் உரையாற்றினார்.

மேலும் அவர் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:

தென்மராட்சிப் பிரதேசத்தின் பெரும்பாலான பகுதிகள் விவசாயப் பூமியாகும். ஒவ்வொரு பகுதி மண் வளத்திற்கேற்ப விவசாயப் பொருள்கள் பன்னெடுங்காலமாக உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. செயற்கை உரங்கள், கிருமிநாசினிகள் உருவான காலத்திற்கு முன்பாகவே விவசாயத்தில் புகழ்பெற்ற இப்பிரதேச விவசாயிகள் தற்போது விவசாயத் திணைக்கள அலுவலர்களின் ஆலோசனைகள் வழிகாட்டல்களுடன் சிறந்தமுறையில் விவசாயத்தினை அபிவிருத்தி செய்வது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இருப்பினும் கஷ்டப்பட்டு உழைக்கும் விவசாயிகள் இடைத்தரகர்களால் உரிய உயர்வினைப் பெறமுடியாமல் போகும் சந்தர்ப்பங்களும் ஏற்படுகின்றன. கஷ்டப்படும் விவசாயி அதன் உச்சப் பயனை அடைய வேண்டும்.

ஒரே நேரத்தில் பலர் உற்பத்திப் பொருள்களை அறுவடை செய்வதும் விவசாயிகளுக்குப் பாதிப்பு தரக்கூடியன. இடைத்தரகர்களின் தொல்லை, ஒரே நேரத்தில் அறுவடை ஆகியவற்றைத் தடுக்க அந்தப் பகுதி விவசாய சம்மேளனங்கள் முயற்சி செய்ய வேண்டும்.

விவசாயப் பகுதிகளில் விவசாயச் சந்தைகளை உருவாக்குவதிலும் இவ்வாறான பாதிப்புகள் ஏற்படாமல் தடுக்கமுடியும். உற்பத்தியாளர்களும் தகுந்த பயனைப் பெறமுடியும்.

## பஞ்சாங்கக் கலண்டர்

யாழ்ப்பாணம்,நவ.20

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயத்தினரால் வருடாந்தம் வெளியிடப்படுகின்ற பஞ்சாங்கக் கலண்டர் இம்முறையும் வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

ஆலய முகப்புத் தோற்றம் மற்றும் நாயன்மார்களது வர்ணப் படங்களுடன் கூடிய 2009ஆம் ஆண்டுக்கான இந்தக் கலண்டரில் ஆலய உற்சவங்கள், விரத நாள்கள், அரச, வங்கி, வர்த்தக விடுமுறைகள் உள்ளிட்ட பல விடயங்கள் அடங்கியுள்ளன. (202-250)

# பாதிக்கப்பட்டுள்ள வன்னி மக்களுக்கு மன்னார் மாவட்டத்தில் நிதி சேகரிப்பு

இடம்பெற்றுவரும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள வன்னிப் பிரதேச மக்களுக்கு வழங்குவதற்காக மன்னார் மாவட்டத்தில் நிதி சேகரிக்கப்பட்டது.

இதுவரை 19 லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா (19,50 000) வரை நிதி சேகரிக்கப்பட்டிருப்பதாக மன்னார் சர்வதேச அருட்பணி மையத்தின் தலைவர் அருட்பணி அலெக்சாண்டர் சில்வா (பெனோ) தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், மதவழிபாட்டுத் தலங்கள், வர்த்தக நிலையங்கள் ஆகியவற்றிலிருந்து இந்த நிதி திரட்டப்பட்டுள்ளது.

மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகையின் ஆசியுடனும் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி விக்டர் சோசை அடிகளாரின் வழிகாட்டலுடனும் இந்த நிதி சேகரிக்கப்பட்டுள்ளது எனவும் விரைவில் இது மக்களிடம் கையளிக்கப்படும் எனவும், அருட்தந்தை பெனோ அடிகளார் மேலும் தெரிவித்தார்.

# குருநாகல் நகரில் சுரங்க நடைபாதை

கொழும்பு,நவ.20

குருநாகல் நகரில் சுரங்க நடைபாதை ஒன்று முதன்முதலாக அமைக்கப்பட்டுள்ளது.

குருநாகலில் அமைக்கப்பட்டுள்ள இச் சுரங்க நடைபாதை ஜனவரி மாதம் 10ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளதாக வீதி அபிவிருத்தி அமைச்சு தெரிவித்தது.

குருநாகல் போதனா வைத்தியசாலைக்கு முன்னால் 4 கோடி 75 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும் இச்சுரங்கப் பாதையின் நிர்மாணப்பணிகள் டிசெம்பர் மாதத்திற்குள் பூர்த்தியாகும் எனத் தெரிவிக் கப்பட்டது. (202)



கரவெட்டிப் பிரதேச செயலகமும், சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றமும் இணைந்து நடத்திய சமுர்த்திப் புலமைப் பரிசில் விழாவில் எடுக்கப்பட்ட படங்கள்.

நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை முதலாவது படத்தில் காணலாம். சமுர்த்தி உதவி ஆணையாளர் தி.மகேஸ்வரன், வடமராட்சி வலயக் கல்விப்பணிப் பாளர் வ.செல்வராஜா ஆகியோர் மாணவர்களுக்குப் புலமைப் பரிசில்கள் வழங்குவதை அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழருக்கு இந்தியா உதவத் தேவையில்லை தமிழீழம் உருவானால் அதை ஏற்பளிக்கச் செய்க!

## இதுதான் எமது விருப்பம் என்கிறார் ராமதாஸ்



சென்னை, நவ.20

**போரை நிறுத்துவதற்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மறுத்துள்ள சூழ்நிலையில், தமிழர்கள் எரிமலையாகக் கொதித்துப் போயுள்ளனர். எனவே, அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து முதல்வர் கருணாநிதி தலைமையில் அனைத்துக் கட்சியினரும் ஒன்று கூடி ஆலோசனை நடத்த வேண்டும்.**

**ஈழத் தமிழர்களுக்கு மத்திய அரசு எந்த உதவியும் செய்யத் தேவையில்லை. தமிழீழம் உருவானால் அதனை ஏற்பளிப்புச் செய்ய வேண்டும். இதைத்தான் நானும், திருமாவளவனும் எதிர்பார்க்கிறோம்.**

**- இவ்வாறு பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.**

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாணவர் அமைப்பான முற்போக்கு மாணவர் கழகத்தின் சார்பில் 'இந்திய அரசே போரை நிறுத்து, ஈழத்தமிழர்களை காப்பாற்று' என்ற கோரிக்கையை வலியுறுத்தி நேற்றுமுன்தினம் பேரணி நடைபெற்றது. பேரணியை திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தொடக்கி வைத்தார்.

பேரணியை முடித்து வைத்துப் பேசுகையிலேயே மேற்கண்டவாறு ராமதாஸ் தெரிவித்தார்.

அப்போது அவர் மேலும் கூறியவை வருமாறு-

சிங்களப் பேரினவாத நாடான இலங்கை எப்போதுமே இந்தியாவின் நேச நாடாக இருந்ததில்லை. சீனாவையும், பாகிஸ்தானையும்தான் நேச நாடாக இலங்கை கருதுகிறது. நம்மை எதிரியாகத்தான் நினைக்கிறது. அதே நேரத்தில் நம்முடைய தென் பகுதியில் தமிழீழம் உருவானால் அது எந்தக் காலத்திலும் நமக்கு நேச நாடாக இருக்கும்.

எனவே வங்க தேசத்தை உருவாக்க அப்போதைய மேற்கு வங்காள முதல்வர் சித்தார்த்த சங்கரே எப்படி பாடுபட்டாரோ அது போன்று நாமும் தமிழ் மக்களுக்காகப் பாடுபட வேண்டும்.

அனைத்துக்கட்சிக்கூட்டத்தைக்கூட்டி போரை நிறுத்துவோம் என்று தீர்மானம் கொண்டு வந்தோம். தொடர்ந்து தமிழக முதல்வர் எடுத்த முயற்சிகள் - எடுக்கின்ற முயற்சிகளுக்கு பா.ம.க., விடுதலைச் சிறுத்தைகள் ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கிறோம். யோசனைகளையும் சொல்லி வருகிறோம். பிரதமர் போரை நிறுத்த வேண்டும் என்று சொன்ன நிலையிலே, வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி அழுத்தம் திருத்தமாக போரை நிறுத்த வேண்டும் என்று சொன்னார். ஆனால், மஹிந்த கேட்கவில்லை. இதன்மூலம் இந்தியாவை அவர் மதிக்கவில்லை என்பது வெள்ளிடைமலை.

இலங்கை ஒரு சுண்டைக்காய் நாடு. இந்தியா வளர்ந்து வருகின்ற வல்லரசு என்று மற்ற நாடுகள் நினைத்துக் கொண்டிருக்கின்றபோது இந்தச் சுண்டைக்காய் நாடு எந்தத் தைரியத்திலே அப்படிச் சொல்கிறது. தமிழர்கள் எரிமலையாகக் கொதித்துப் போயிருக்கிறார்கள். போரை நிறுத்த முடியாது என்று சொல்லி விட்டார். அடுத்து என்ன செய்ய போகிறோம்.

ஆறே கால் கோடி தமிழர்களுக்கு தலைமை தாங்குகின்ற முதல்வர் கருணாநிதியின் வேண்டுகோளையும், சிங்களவன் நிராகரித்து விட்டான்.

ஏற்க மறுத்துவிட்டான் என்கின்றபோது மாற்று வழி என்ன என்பதை நாம் யோசிக்க வேண்டும். இதில் நானும், திருமாவளவன் மட்டும் யோசித்தால் போதாது.

தமிழக முதல்வர் தலைமையிலே ஒன்று கூடி அடுத்து என்ன மாற்றுவழி என்பதை நாம் அவர் தலைமையிலே யோசிக்க வேண்டும்.

இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டோம் என்ற நிலை உருவாக வேண்டும். தனித்துக் கூட்டம் போடுங்கள். ஆனால் தனித்து முடிவு எடுக்காதீர்கள். மாறுபாடாகக் கருத்துச் சொல்கிறேன் என்று எண்ணிக் கொள்ள வேண்டாம்.

அந்த வகையில் அடுத்து இந்திய அரசு என்ன செய்ய வேண்டும் என்பதை அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்ற வேண்டுகோளை நான் வழிமொழிகிறேன் - என்றார்.

## புலிகள் பதுங்குவது பாய்வதற்கே!

பேரணியைத் தொடக்கி வைத்து திராவிடர் கழகத் தலைவர் வீரமணி உரையாற்றிய போது கூறியவை வருமாறு-

நமக்கு ஒரே இலக்குதான் இலங்கையில் யுத்த நிறுத்தம் செய்ய வேண்டும். தமிழர்கள் காப்பாற்றப்பட வேண்டும். இல்லாவிட்டால் நாங்கள் எங்களையும் அழித்துக் கொள்ள தயங்க மாட்டோம். ராஜீவ் கொலையை வைத்து தமிழ் உணர்வுகளை அழித்து விட முடியாது.

இலங்கை இராணுவத்தால் இறுதி வெற்றி பெற முடியாது.

இலங்கையில் புலிகள் பின்வாங்கிக் கொண்டிருக்கின்றனர் எனச் சில ஊடகங்கள் கூறிக் கொண்டிருக்கின்றன. அவர்கள் தாங்களும் ஏமாந்து, மற்றவர்களையும் ஏமாற்ற நினைக்க வேண்டாம். புலிகள் பதுங்குவது பாய்வதற்காகத்தான் என்பதை நான் நினைவுறுத்துகிறேன். இறுதி வெற்றி தமிழர்களுக்குத்தான் கிடைக்கும் - என்றார்.

## முழு அடைப்புக்குப் பதில் மறியல் கம்யூ. தா.பாண்டியன் அறிவிப்பு

சென்னை, நவ. 20

இலங்கையில் போர் நிறுத்தம் செய்யக் கோரி நவம்பர் 25ஆம் திகதி நடத்தப்படவிருந்த முழு அடைப்புப் போராட்டம், மறியல் போராட்டமாக மாற்றப்படுவதாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் தா.பாண்டியன் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கை வருமாறு-

17ஆம் திகதி (திங்கட்கிழமை) நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் இலங்கையில் நடைபெறும் போரை நிறுத்தக் கோரி, வரும் 25ஆம் திகதி தமிழகத்தில் முழு அடைப்புப் போராட்டம் நடத்துவது என முடிவெடுக்கப்பட்டது.

இந்நிலையில் முழு அடைப்புப் போராட்டத்துக்கு எதிராக உச்ச நீதிமன்றத் தீர்ப்பு உள்ளதால், அப்போராட்டத்தை மாற்றியமைக்க வேண்டும் என சில கட்சிகள் கருத்துத் தெரிவித்தன.

இலங்கைத் தமிழ் மக்களுக்காக, தமிழக மக்களின் குரல், உறுதியோடு, ஒருமித்த குரலாக ஒலிக்க வேண்டுமென்பதால் முழு அடைப்பு தவிர்க்கப்படுகிறது. போர் நீடிப்பதால், மத்திய அரசு தமது நிலையைத் தெளிவுபடுத்தக் கோரி, வரும் 25ஆம் திகதி தமிழகத்திலுள்ள மத்திய அரசு அலுவலகங்கள் முன் மறியல் போராட்டம் நடைபெறும்.

இலங்கையில் போர் நிறுத்தம் வேண்டும்; இலங்கைத் தமிழர்கள் கொல்லப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை மட்டும் வலியுறுத்தி போராட்டம் நடைபெறும்.

மறியலில் ஈடுபடுவோர், இந்தக் கோரிக்கையைத் தவிர வேறு எந்த முழக்கத்தையும் எழுப்ப வேண்டாம் - என்றுள்ளது.

## இந்தியச் செய்திகள்

## ஈழத் தமிழரின் பிரச்சினையில் தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் அவர்களின் உயிர்–உடைமைக்குப் பேரழிவு!

### சரத்குமார் அறிக்கை

சென்னை, நவ.20

ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் ஏற்படும் ஒவ்வொரு நிமிட கால தாமதமும், பல அப்பாவித் தமிழ் மக்களின் உயிர்களுக்கும், உடைமைகளுக்கும் ஏற்படும் பேரழிவு என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

இப்பிரச்சினையில் அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்படவேண்டிய தருணம் இதுவே என்பதை உணராவிடில், நாம் தமிழர்கள், தமிழ் உணர்வு மிக்கவர்கள் என்று சொல்வதெல்லாம் அர்த்தமற்றதாகிவிடும் - என்று அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி தலைவர் சரத்குமார் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

பல்வேறு கட்சிகளின் பல்வேறு விதமான போராட்டங்கள் தொடர்ந்தாலும், இலங்கை அரசின் நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் இல்லை. அப்பாவித் தமிழர்களுக்கு ஏற்பட்டு வரும் பாதிப்புகளும் நின்றபாட்டில்லை.

விதவிதமான போராட்டங்களை அரங்கேற்றி வருவது, அப்பாவித் தமிழர்களின் அவல நிலையைப் பயன்படுத்தி அரசியல் நடத்துவதற்காக மட்டுமே என்றிருந்தால், அது



நாம் இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கும் துரோகமாகவே அமையும்.

எனவே, இலங்கையில் போர் நிறுத்தம் உடனடியாக ஏற்பட உறுதியான நடவடிக்கையை மத்திய அரசு உடனடியாக எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி, முதல்வர் கருணாநிதி மீண்டும் அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இதில் அரசியல் பாகுபாடின்றி எல்லாக் கட்சிகளும் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும். இந்தக் கூட்டத்தில் எடுக்கப்படும் தீர்மானங்கள், வெறும் அரசியல் அதிரடி அறிவிப்புகளாக இல்லாமல், அப்பாவித் தமிழர்களுக்கு நிரந்தர நிம்மதி ஏற்படுவதற்கான நடவடிக்கைகளாக அமைய வேண்டும்.' - என்றுள்ளது.

## இலங்கைப் பிரச்சினையில் ஐ.நா. கண்டனம்; மத்திய அரசு மௌனம்

### நெடுமாறன் குற்றச்சாட்டு

இராமநாதபுரம், நவ. 20

இலங்கையில் ஈழத் தமிழர்கள் வாழ்வா, சாவா எனப் போராடி வருகிறார்கள். இப்பிரச்சினையில் ஐ.நா. கண்டனம் தெரிவித்தும்கூட மத்திய அரசு தொடர்ந்து மௌனமாக இருந்து வருகிறது - என்று தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் தமிழீழ விடுதலை ஆதரவாளர்கள் ஒருங்கிணைப்புக் குழுவின் சார்பில், நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தைத் தொடக்கிவைத்துப் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசியவை வருமாறு-

இலங்கை அரசு உடனடியாகப் போரை நிறுத்த வேண்டும். அனைத்துத் தமிழ் இன மக்களும், வீடுகள், உடைமைகளை இழந்து தவித்து வரும் சுமார் 5 லட்சம் ஈழத் தமிழர்களுக்கு உணவு, மருந்து ஆகியவற்றை வழங்க வேண்டும்.

ஈழத்தமிழருக்காக தமிழகத்தில் பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இப்பிரச்சினையில் ஐ.நா. சபை கண்டனம் தெரிவித்தும் கூட மத்திய அரசு மௌனம் சாதிக்கிறது.

தமிழக அரசின் மூலம் அனுப்பப்படும் 800 தொன் உணவுப் பொருள்களும் ஈழத்தமிழர்களுக்கு போய்ச் சேரப்போவதில்லை.

சுமார் ஒரு கோடி ரூபா மதிப்புள்ள அத்தியாவசியப் பொருள்களை இலங்கைக்குக் கொண்டு செல்ல முயன்றபோது என்னைத் தடுத்து அரசு கைதுசெய்தது. பின்னர் உண்ணாவிரதம் இருந்த நான், முதல்வர் அளித்த வேண்டுகோளை ஏற்று போராட்டத்தைக் கைவிட்டேன்.

இலங்கை இராணுவம் தொடர்ந்து குண்டுகளை வீசி தமிழினத்தை அழித்து வருகிறது. அண்டை நாட்டுப் பிரச்சினையில் இந்தியா தலையிடுவது அந்நாட்டின் இறையாண்மையைப் பாதிக்கும் என்கின்றனர்.

ஆனால், தமிழக மீனவர்கள் 400க்கும் மேற்பட்டோர் [illegible] இலங்கை இராணுவத்தால் [illegible] அப்போது இந்தியாவின் இறையாண்மை எங்கே போனது - என்றார்.

## ஈழத் தமிழர் விடயத்தில் தமிழகக் கட்சிகளின் நீலிக்கண்ணீரால் நிறைகின்றது வங்கக்கடல்

### தினமணி ஆசிரியர் தலையங்கம் சாடல்

இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் தமிழக அரசியல் கட்சிகளிடையே ஒற்றுமையில்லை என்றும் - நீலிக் கண்ணீர் வடிக்கின்றன என்றும் - அந்தக் கண்ணீரில் வங்கக் கடல் நிறைந்து வழிகிறது என்றும் 'தினமணி' ஆசிரியர் தலையங்கம் தெரிவித்துள்ளது.

அதன் முழு விவரம் வருமாறு-

குடும்பத்தில் காதுகுத்து, கல்யாண நிகழ்ச்சிகளில் மொய் எழுதியவர்கள்கூட, தங்கள் வீட்டு நிகழ்ச்சிக்கும் அதேபோல வரவேண்டும். அதே அளவு திருப்பிச் செய்ய முடியாத போதும், ஏதாவது சக்திக்கு ஏற்பச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் தங்களுக்கு மரியாதை கொடுக்கப்பட்டது என அர்த்தம் என்ற எண்ணம் பொதுவானது. ஆனால் இந்த நாகரிகம், தமிழக அரசியல் கட்சிகளுக்கு மட்டும் இல்லாமல் போனது எப்படி என்பதுதான் புரியவில்லை.

இலங்கைப் பிரச்சினை தொடர்பாக தி.மு.க. சார்பில் அனைத்துக் கட்சிகள் கூட்டம் நடத்தப்பட்டபோது அனைத்துக் கட்சிகளும்-அ.தி.மு.க., ம.தி.மு.க., தே.மு.தி.க. தவிர- பங்குகொண்டன. இந்தக் கூட்டத்தில், ஒக்டோபர் 28ஆம் திகதிக்குள் மத்திய அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகுவது என்று தீர்மானிக்கப்பட்டபோதும் அனைவரும் அதற்கு மறுப்புச் சொல்லவே இல்லை.

இந்தத் தீர்மானத்தின்படி காங்கிரஸ் எம்.பிக்கள் பதவியைத் துறப்பார்களா என்றும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகள் தங்கள் தலைமையின் கருத்தைக் கேட்காமல் இத்தகைய முடிவை மேற்கொள்ள இயலுமா என்றெல்லாம் சந்தேகம் ஏற்பட்டது.

இருந்தாலும்கூட, பொது நாகரிகம் கருதி, மற்றக் கட்சியினர் இத்தகைய கருத்து உரசல்களுக்கு இடம் தராமலும் தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்காமலும் மௌனம் காத்தனர். தி.மு.கவின் மக்களவை உறுப்பினர்கள் தங்கள் பின் திகதியிட்ட பதவி விலகல் கடிதத்தை முதல்வர் கருணாநிதியிடம் கொடுத்தபோதும்கூட, இந்த விவகாரம் பற்றி அதிகம் பேசாமல் மௌனம் காத்தன மற்ற கட்சிகள்.

இந்தப் பிரச்சினையில், மத்திய வெளிவிவகாரத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி, முதல்வர் கருணாநிதியை அவரது இல்லத்தில் சந்தித்த பின்னர், மத்திய அரசின் நடவடிக்கை திருப்தி தருகிறது என முதல்வர் கருத்துத் தெரிவித்த பிறகுதான், அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்த விமர்சனங்களை பிற கட்சிகள் முன்வைத்தன. அந்த அளவுக்கு ஒரு நாகரிகமான அரசியலை இந்த விவகாரத்தில் மற்றக் கட்சிகள் [illegible] என்பது பாராட்டுக்குரிய [illegible] ஏனென்றால், இலங்கைத் தமிழர் பிரச்சினையும் மிகவும் சிக்கலான ஒன்றாக இருந்து வருகிறது.

நியாயமாகப் பார்த்தால், மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி வந்து சென்ற பின்னர் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, மத்திய அமைச்சர் விளக்கியதை எடுத்துச் சொல்லிய பிறகுதான், தனது திருப்தியை முதல்வர் கருணாநிதி தெரிவித்திருக்க வேண்டும். ஆனால் அவர் அப்படி நடக்கவில்லை.

விடுதலைப் புலிகள் போர்நிறுத்தம் செய்யத் தயார் என்று சொல்லியும் இலங்கை அரசு போர்நிறுத்தம் செய்யத் தயாராக இல்லை. இந்தியா வந்த இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அதைத் தெளிவாகவே சொல்லிச் சென்றுவிட்டார். மீண்டும் அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்று பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ், தமிழக முதல்வருக்கு கோரிக்கை வைத்தார். இத்தகைய சூழ்நிலையில்தான் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அனைத்துக் கட்சிக் கூட்டத்தை அறிவித்தது.

இந்த அனைத்துக் கட்சிக் கூட்டம் தங்களை அவமானப்படுத்துவதற்காக என்று தி.மு.க. தலைமை நினைத்திருந்தால், இந்தக் கூட்டத்தை 'நானே மீண்டும் நடத்துகிறேன்' என்று மௌனம் கலைந்திருக்க வேண்டும். ஆனால் அதையும் செய்யவில்லை. அல்லது தங்கள் பிரதிநிதி ஒருவரை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் பங்கேற்கச் செய்திருக்க வேண்டும். அதையும் செய்யவில்லை.

முன்பு தி.மு.க. தலைமை நடத்திய கூட்டம் என்பதால் பங்குகொள்வதைத் தவிர்த்த அ.தி.மு.க., தே.மு.தி.க. இப்போது இக்கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கலாம். இவர்களும் பங்குகொள்ளவில்லை. பா.ஜ.க., விடுதலைச் சிறுத்தைகள் என யாருமே பங்கேற்கவில்லை என்பதைப் பார்க்கும்போது தமிழக அரசியல் ஆரோக்கியமாக இல்லை என்பது தெளிவாகிறது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய அனைத்துக் கட்சிக் கூட்டம் ஒன்றும் தேசவிரோதச் செயலுக்காக கூட்டப்பட்டதல்ல. அது வெறும் ஆலோசனைக் கூட்டம். கருத்து உடன்பாடு இல்லை என்றால், இந்தக் கூட்டத்தின் தீர்மானத்தை நாங்கள் ஏற்கவில்லை என்று சொல்லி, வெளியேறலாம். யாரும் கட்டாயப்படுத்தப் போவதில்லை. ஆனால் கூட்டத்துக்கு ஒரு பிரதிநிதியைக்கூட அனுப்ப முடியாது என்றால் - தமிழக கட்சிகள் ஒன்றாகக் கூடி நின்றால், மத்திய அரசுக்கு ஏற்படும் நெருக்கடி நமக்கும் ஏற்படும் என்று இலங்கை அரசு உணர்ந்து செயற்பட வாய்ப்பு இருக்கும்.

தமிழக அரசியல் கட்சிகளுக்குள்ளேயே இலங்கைப் பிரச்சினையில் வெறும் கபட நாடகம்தான் நடக்கிறது என்பது வெட்டவெளிச்சமாகிவிட்டால், இலங்கைக்குக் கொண்டாட்டம். பாவம், அப்பாவி இலங்கைத் தமிழர்கள்!. நமது அரசியல் கட்சிகளின் நீலிக் கண்ணீரால் நிறைகிறது வங்கக் கடல்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானைவிட்டு பிரெஞ்சு இராணுவத்தை வெளியேறக் கோருகிறது தலிபான் இயக்கம்

டுபாய், நவ. 20

''ஆப்கானிஸ்தான் நாட்டைவிட்டு பிரெஞ்சு இராணுவம் வெளியேறாவிட்டால் பிரான்ஸ் நாட்டில் தாக்குதல் நடத்துவோம்'' - இவ்வாறு தலிபான்கள் எச்சரித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்க இராணுவம் மட்டும் அல்லாது, பிரான்ஸ் உட்படப் பல்வேறு நாடுகளின் இராணுவமும் தங்கியிருந்து தீவிரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து வருகின்றன. ஆப்கானிஸ்தானில் பிரான்ஸ் நாட்டு இராணுவ சிப்பாய்கள் 2,600 பேர் இருக்கிறார்கள். அவர்கள் நேட்டோ தலைமையிலான சர்வதேச இராணுவத்தின் அங்கமாக ஆப்கானிஸ்தானில் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில், ''ஆப்கானிஸ்தானை விட்டு பிரான்ஸ் இராணுவம் வெளியேற வேண்டும். அப்படி வெளியேறாவிட்டால் பிரான்ஸ் நாட்டின் மீது தாக்குதல் நடத்துவோம்'' என்று தலிபான்கள் எச்சரித்துள்ளனர். இந்த எச்சரிக்கை அறிவிப்பு அல்-அரேபியா தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது.

இந்தக் காட்சி தங்கள் சேவைக்கு எப்படிக் கிடைத்தது என்பதை அந்தச் சேவை அதிகாரிகள் தெரிவிக்க மறுத்துவிட்டனர். அந்தத் தொலைக்காட்சியில் தலிபான் இராணுவத் தலைவர் பாரூக் இடம்பெற்றிருந்தார். அவர் அரேபிய மொழியில் பேசினார். இது பிரான்ஸ் மொழியில் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பாரூக் பேசுகையில் கூறியிருந்தவை வருமாறு:-

''ஆப்கானிஸ்தானில் காபூல் நகருக்கு அருகே கடந்த ஒகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி நடந்த தாக்குதலுக்கு நாங்கள் தான் பொறுப்பு - என்றார்.

இந்தத் தாக்குதலில் 10 பிரான்ஸ் இராணுவ வீரர்கள் பலியானார்கள். 21 பேர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 'செக்ஸ்' கட்சி ஆரம்பம் ஆஸியில் பெரும் பரபரப்பு

சிட்னி, நவ. 20

ஆஸ்திரேலியாவில் புதிதாக 'செக்ஸ்' கட்சி ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. செக்ஸ் உறவை சீரியஸாக எடுத்துக் கொண்டிருப்பவர்கள் இந்தக் கட்சியைத் தொடங்கி இருக்கிறார்கள். இதனால், அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

பள்ளிக்கூடங்களில் செக்ஸ் கல்வி தொடங்கப்படவேண்டும், தணிக்கை முறையை குறைப்பது, ஓரினச் சேர்க்கையாளர்கள் திருமணம் செய்வதை ஆதரிப்பது, இணையத்தளத்தில் ஆபாசக் காட்சிகளுக்கு தணிக்கை செய்ய அரசு திட்டமிட்டு இருப்பதை எதிர்ப்பது என்பவை இந்தக் கட்சியின் கொள்கை எனவும் கூறப்படுகிறது.

ஆஸ்திரேலியாவில் ஆபாசப் படங்களைப் பார்ப்பவர்கள் எண்ணிக்கை 40 இலட்சம் ஆகும். இவர்களை குறிவைத்து தேர்தல் பிரசாரம் செய்தாலே போதும், வெற்றி பெற்றுவிடலாம் என்று இந்தக் கட்சியினர் கணக்குப் போட்டிருக்கிறார்கள். இந்தக் கட்சியின் அமைப்பாளரான பியோனா பாட்டன் இது குறித்து கூறுயவை வருமாறு:-

''இணையத்தள ஆபாசக் காட்சிகளை தணிக்கை செய்யும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் செக்ஸ் தொழில் 5 ஆண்டுகளுக்குள் முடங்கிப் போய்விடும்'' - என்று தெரிவித்தார்.

# சீனாவில் கிராம மக்கள் அமைத்த சுரங்கப்பாதை

பீஜிங், நவ. 20

சீனாவில் மலைப் பிரதேசத்தில் வசிக்கும் கிராம மக்கள் அருகிலுள்ள நகரத்துக்குச் செல்வதற்காக, தாங்களாகவே மலையைக் குடைந்து ஒரு சுரங்கப் பாதையை அமைத்து ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

சீனாவில் மட்டிகுவா என்றொரு கிராமம் உள்ளது. அடர்ந்த மலைப் பிரதேசத்திலுள்ள இந்த கிராமத்துக்குப் போக்குவரத்து வசதியில்லை. தங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்குவதற்கு அருகிலுள்ள சியான் என்ற நகருக்கே மக்கள் வரவேண்டும், மலைகளுக்கிடையே மிகவும் குறுகலான - அபாயகரமான ஒரு பாதை உள்ளது. இதில் பல மணி நேரம் நடந்து வந்த பின்னரே, சியான் நகரை அடைய முடியும். இந்த சாலை வழியே பலர் கீழே தவறி விழுந்து உயிரிழந்துள்ளனர்.

இதையடுத்து, அந்தக் கிராமத்தினர் தாங்களாகவே மலையைக் குடைந்து, சுரங்கப் பாதை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். தாங்கள் வைத்திருந்த சுத்தியல், கம்பி போன்ற சிறிய ஆயுதங்களைக் கொண்டே இதற்கான முயற்சியில் ஈடுபட்டனர். ஐந்தாண்டுகளுக்குப் பின் அவர்களது முயற்சிக்கு வெற்றி கிடைத்துள்ளது. ஆறு அடி உயரமும், அதே அளவு அகலமும் உள்ள பாதையை ஏற்படுத்தினர்.

இந்தப் புதிய சுரங்கப் பாதை மூலம் அரை மணி நேரத்தில் சியான் நகரை அடைந்து விட முடியும். மிகவும் பாதுகாப்பாகவுமுள்ளது என கிராமத் தலைவர் வென்சாங்பா கூறினார்.




# முஸ்லிம் பழங்குடியினருக்கு ஒபாமா சொந்தக்காரராம்?

லண்டன், நவ. 20

இஸ்ரேலின் வட பகுதியிலுள்ள கலிலீ பகுதியில் முஸ்லிம் நாடோடி பழங்குடியினத்தவர்கள் வசித்து வருகின்றனர். இவர்கள் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தங்களின் இரத்தச் சொந்தம் என்று தெரிவித்துள்ளனர்.

இத்தகவலை பழங்குடியின செய்தித் தொடர்பாளர் அப்துல் ரகுமான் ஷேக் அப்துல்லா (வயது 53) என்பவர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

1930 ஆம் ஆண்டுகளில் பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்த பாலஸ்தீனத்தில், பணக்கார ஷேக்குகளின் விளைநிலங்களில் வேலை பார்ப்பதற்காக ஆபிரிக்க தொழிலாளர்கள் கொண்டு வரப்பட்டனர். அவர்களில் ஒருவரின் சாயலை ஒபாமா ஒத்திருப்பதை எனது 95 வயது தாய் தான் முதலில் கண்டுபிடித்தார்.

இவ்வாறு குடியேறிய ஆபிரிக்க தொழிலாளர்கள் அங்குள்ள நாடோடி பெண்களை திருமணம் செய்துகொண்டு குடும்பம் நடத்தத் தொடங்கினர். பல ஆண்டுகளுக்குப் பின் அவர்கள் இங்கு திரும்பி வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். அப்படிப்பட்ட ஒருவர்தான் ஒபாமாவின் கென்ய நாட்டைச் சேர்ந்த பாட்டியின் சொந்தக்காரர். இதற்கு ஆதாரமாக ஆவணங்கள் என்னிடம் உள்ளன.

இது தொடர்பாக ஒபாமாவுக்குக் கடிதமும் எழுதியுள்ளோம். ஆனால், அவரிடமிருந்து பதில் வரவில்லை. ஒபாமாவின் வெற்றியை நாங்கள் கோலாகலமாகக் கொண்டாடவுள்ளோம். 10க்கு மேற்பட்ட ஆடுகளை கொன்று, மிகப் பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்துள்ளோம். இப்பகுதியில் வசிக்கும் எட்டாயிரத்துக்கும் மேற்பட்ட நாடோடி பழங்குடியின முஸ்லிம்கள் ஒபாமாவின் இரத்தச் சொந்தங்கள் - இவ்வாறு ஷேக் அப்துல்லா கூறினார்.

# தாய். முன்னாள் பிரதமர் திடீரென விவகா ரத்து



தாய்லாந்திலிருந்து வெளியேறியுள்ள அந்த நாட்டின் பிரதமர் தக்ஷின் ஷினவத்ரா, 32 ஆண்டுக்கு முன் திருமணம் செய்த தனது மனைவியை 'விவாகரத்து செய்துள்ளார். தாய்லாந்தின் மிகப் பெரிய கோடீஸ்வரராக இருந்தவர் தக்ஷின். இவரது சொத்துகளில் பெரும்பாலானவை மனைவி பூஜாமன் பெயரிலேயே உள்ளன.

'தாய் ராக் தாய்' என்ற கட்சியைத் தொடங்கி, மக்கள் ஆதரவு கொள்கைகளுடன் தேர்தலை சந்தித்தார். ஆட்சியில் இருந்தபோது, ஹொங்கொங்கில் பிரதான இடத்திலுள்ள வீட்டு மனைகளை அரசு ஏலம்விட்டபோது, அதிகாரத்தைப் பயன்படுத்தி, தனது மனைவி பூஜாமன் பெயரில் அதனை வாங்கினார். இது தொடர்பாக தாய்லாந்து நீதிமன்றில் மேன்முறையீட்டு வழக்கு தொடரப்பட்டது. வழக்குகள் காரணமாக, தாய்லாந்து வங்கியில் தக்ஷின் மற்றும் பூஜாமன் பெயரிலிருந்த 9,000 கோடி ரூபா முடக்கி வைக்கப்பட்டது. கடந்த மாதம் தக்ஷினுக்கு இரண்டு ஆண்டு சிறைத் தண்டனை விதித்து தாய்லாந்து மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அதேபோல, வரி விதிப்பு வழக்கில் தக்ஷினின் மனைவி பூஜாமனுக்கு மூன்று ஆண்டு சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

இவர்கள் இருவருக்கும் அளிக்கப்பட்ட சுற்றுலா விசாவை பிரிட்டன் ரத்துச் செய்தது. இதனால் குடும்பத்தோடு ஹொங்கொங் வந்தார் தக்ஷின். அங்குள்ள தாய்லாந்து தூதரகத்தில் தனது மனைவி பூஜாமனை விவாகரத்து செய்ய விண்ணப்பித்தார். இதை ஏற்று விவாகரத்து அளிக்கப்பட்டுள்ளது. தாய்லாந்தில் முடக்கப்பட்டிருக்கும் வங்கிப் பணத்தை சட்டப்பூர்வமாக எடுப்பதற்காக நடந்த சூழ்ச்சியாக இது இருக்கலாம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

# ஆப்கானிஸ்தானுக்கு இராணுவத்தை அனுப்பமாட்டோம்; சீனா அறிவிப்பு

பீஜிங், நவ. 20

ஆப்கானிஸ்தானுக்கு இராணுவத்தை அனுப்பமாட்டோம் என்று சீனா அறிவித்துள்ளது. கடந்த வாரம் இங்கிலாந்து பிரதமர் கார்டன் பிரவுன் பேசுகையில், ''சீனா, ஆப்கானிஸ்தானுக்கு இராணுவத்தை அனுப்பலாம்'' என்று தெரிவித்தார்.

இதற்கு அந்த நாட்டு அரசு மறுப்பு தெரிவித்துள்ளது. அரசு மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

ஆப்கானிஸ்தான் அரசும், மக்களும் நாட்டில் அமைதியை ஏற்படுத்தவும், பொருளாதார வளர்ச்சியை உருவாக்கவும் எடுத்து வரும் முயற்சிகளுக்கு சீனா ஆதரவு அளிக்கும். ஐ.நா.சபையின் அங்கீகாரம் பெற்று அனுப்பப்பட்ட அமைதிப்படையைத் தவிர, சீனா தனியாக இராணுவத்தை ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பாது. ஆப்கானிஸ்தானுக்கு சீனா இராணுவத்தை அனுப்ப இருக்கிறது என்று வெளியான செய்தியில் ஒரு சதவீதம் கூட உண்மை கிடையாது - இவ்வாறு சீன அரசு தன் அறிக்கையில் வெளியிட்டுள்ளது.

# அமெரிக்க இராணுவம் ஈராக்கில் தங்கியிருக்கும் காலம் நீடிக்குமா?

பேரழிவு ஆயுதங்களை ஒழிப்பதற்காக ஈராக் நாட்டுக்குள் கடந்த 2004 ஆம் ஆண்டு அமெரிக்க இராணுவம் புகுந்தது. இந்த இராணுவம் 2008 ஆம் ஆண்டு வரை ஈராக்கில் தங்கி இருப்பதற்கு ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் அனுமதி அளித்திருந்தது. இந்த அனுமதி காலாவதியானதைத் தொடர்ந்து அமெரிக்க இராணுவம் ஈராக்கில் தொடர்ந்து தங்கி இருப்பதற்கு வகை செய்யும் ஒப்பந்தம் இப்போது கையெழுத்தாகி உள்ளது.

இந்த ஒப்பந்தத்தில் ஈராக்கின் வெளிநாட்டு அமைச்சர் ஹோஷியார் ஜெபரி அமெரிக்கத் தூதர் ரியான் கிரேக்கர் ஆகியோர் கையெழுத்திட்டனர்.

இந்த ஒப்பந்தத்தை இறுதி செய்வதற்காக இருதரப்பினர் இடையேயும் பேச்சு பல மாதங்களாக நடந்து வந்தது. ஒப்பந்தம் இறுதியான பிறகும்கூட ஒப்பந்தம் கையெழுத்தாக தாமதமானது. இப்போது ஒப்பந்தம் கையெழுத்தான நிலையிலும் இதற்கு ஈராக் நாடாளுமன்றம் ஒப்புதல் அளிக்கவேண்டியுள்ளது. அதன்பிறகு தான் இது நடைமுறைக்கு வரும்.

# பிரிட்டனின் இந்துக் கோவிலுக்கு கிறிஸ்தவ மேற்றாணியார் விஜயம்

லண்டன், நவ. 20

பிரிட்டன் பர்மிங்ஹாம் நகரில் டிவிடேல் என்ற இடத்திலுள்ள வெங்கடேஸ்வரர் ஆலயத்திற்கு அந்த நாட்டின் கிறிஸ்தவ மேற்றாணியாரான ரோவான் வில்லியம்ஸ் சென்றார்.

இந்துக்களுக்கும் கிறிஸ்தவர்களுக்குமிடையே வளர்ந்து வரும் நட்புறவை கொண்டாடும் வகையில் கோவிலுக்கு வரும்படி கோவில் அறங்காவலர்கள் விடுத்த அழைப்பை ஏற்று அவர் அங்கு விஜயம் செய்தார். இந்த வெங்கடேஸ்வரர் ஆலயம் திருப்பதி ஏழுமலையான் கோவில் பாணியில் கட்டப்பட்ட ஒன்றாகும்.

இந்தியத் தூதுவர் சிவசங்கர் முகர்ஜி, தொழில் அதிபர்களான இந்துஜா சகோதரர்கள் அவரை வரவேற்றனர். அந்தக் கோவிலிலுள்ள ஏழுமலைகளில் ஒன்று கிறிஸ்தவ மலை என்று பெயரில் உருவாக்கப்பட்டுள்ளது. அதனை இவர் வைபவரீதியாகத் தொடக்கி வைத்தார். அதோடு கோவிலில் ஒரு மரக் கன்றையும் அவர் நட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# பாகிஸ்தான் பழங்குடியினருடன் தலிபான்கள் மோதல்: 10பேர் பலி!

கராச்சி, நவ. 20

பாகிஸ்தான் வடமேற்குப் பகுதியிலுள்ள பழங்குடியின மக்களுக்கும் தலிபான்களுக்குமிடையே கடந்த திங்கட்கிழமை நிகழ்ந்த கடும் மோதலில் 10 பேர் இறந்துள்ளனர் என பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆப்கானிஸ்தான் எல்லையை ஒட்டிய பாகிஸ்தான் பகுதிகளில் பழங்குடியின மக்கள் வாழும் தலிபான்களின் நடமாட்டம் அதிகமாக உள்ளது. அரசுக்கு ஆதரவாக செயல்படும் பழங்குடியின மக்களின் தலைவர்கள் சிலர், தலிபான்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், பஜௌர் மாவட்டத்தில் பழங்குடியின மக்கள் சென்ற வாகனத்தை வழிமறித்தபோதே தலிபான்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதையடுத்து நிகழ்ந்த மோதல்களில் பழங்குடியின மக்களில் 7 பேர் உயிரிழந்தனர்.

முன்னதாக பழங்குடியின மக்களில் 8 பேரை தலிபான்கள் கடத்திச் சென்று சிறை வைத்துள்ளனர். அதிலிருந்து 3 பேர் தப்பி வந்தனர் எனவும் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# பங்களாதேஷ் தேர்தலில் போட்டியிட காலிதா ஜியா காலக்கெடு விதிப்பு

நெருக்கடி நிலையை கருத்தில்கொண்டு பங்களாதேஷ் இடைக்கால அரசு பொதுத் தேர்தல் நடத்தும் திகதியை தள்ளி வைக்கவேண்டும்.

- இவ்வாறு அந்த நாட்டின் முன்னாள் பிரதமர் காலிதா ஜியா காலக்கெடு விதித்துள்ளார். 48 மணி நேரத்துக்குள் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றினால் மட்டுமே தமது கட்சி, தேர்தலில் பங்குகொள்ளும் எனவும் அவர் நிபந்தனை விதித்தார்.

இந்தக் கோரிக்கை குறித்து இடைக்கால அரசு ஆலோசகர்கள் உடனடியாகக் கூடி ஆலோசனை நடத்தினர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால், முடிவுகள் எதுவும் அறிவிக்கப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகோ தலைமையில் நேற்று சென்னையில் உண்ணாவிரதம்

சென்னை, நவ. 20

இலங்கையில் போரை நிறுத்தக் கோரி ம.தி.மு.க. சார்பில் சென்னை சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை எதிரே நேற்றும் உண்ணாவிரதம் நடந்தது. இதற்கு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தலைமை வகித்தார். முன்னதாக உண்ணா விரதத்தை இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் தா.பாண்டியன் தொடக்கிவைத்தார்.

ம.தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் மல்லை சத்தியா, மாவட்ட செயலாளர்கள் ஜீவன், மணிமாறன், சோமு, ராஜா, உதயகுமார், பத்மநாபன் மற்றும் கவிஞர் முத்துலிங்கம், மகளிர் அணி குமாரி விஜயகுமார், செங்குட்டுவன், தேவதாஸ், ராதாகிருஷ்ணன், நன்மாறன் உட்பட ஏராளமானோர் உண்ணாவிரதத்தில் பங்கேற்றனர்.

நேற்றுமாலை 4.30 மணிக்கு இந்தப் உண்ணாவிரதப் போராட்டம் முடிவுக்கு வந்தது. (அ-சி)

# ரெலிகொம் வடமாகாண உதவிப் பொதுமுகாமையாளரின் தற்காலிக வேலை நீக்கத்துக்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவு

அச்சுவேலி, நவ. 20

ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவன வடக்கு மாகாண பிரதி பொதுமுகாமை யாளர் விசுவநாதபிள்ளை யோகேந்திரனுக்கு கொழும்பு வழங்கிய இடமாற்ற உத்தரவுக்கும் கடமைப் பொறுப்புகளை இடைநிறுத்தும் உத்தரவுக்கும் எதிராக வடக்கு மாகாண மேல் நீதிமன்றத்தின் யாழ்ப்பாண அமர்வில் நீதிபதி இ.த.விக்னராஜா இடைக் காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ளார்.

வடக்கு மாகாண பிரதிப் பொதுமுகாமையாளர் விசுவநாதபிள்ளை யோகேந்திரனுக்கு கொழும்பு ரெலிகொம் பயிற்சி நிலையத்துக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது; அதையடுத்து கடமைப் பொறுப்புக்களை இடைநிறுத்தி தற்காலிக வேலை நீக்க உத்தரவும் வழங்கப்பட்டிருந்தது.

இதனை ஆட்சேபித்து ஸ்ரீ லங்கா ரெலிகொம் பொதுமுகாமையாளர் ஸ்ரீ லங்கா ரெலிகொம் தலைவி திருமதி வீசா டீ சில்வா சந்திரசேன, வடக்கு, கிழக்கு பிராந்திய பொதுமுகாமையாளர் ஏ.கிருபாகரன், ஆகியோரை எதிரிகளாகக் குறிப்பிட்டு அரசமைப்பு உறுப்புரிமை 151(P) க்கு இணங்கிய உறுதிகேள் எழுத்தணை யைக் கோரும் விண்ணப்பம் மனுதாரின் சட்டத்தரணி அ.இராசரத்தினத்தால் யாழ். மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப் பட்டது.

மனுதாரருக்கு ஏற்படக் கூடிய பாதிப்புக்களை கருத்தில் கொண்டு விசமத்தனமாக பதவி நிலையையும் பொறுப்புக்களையும் குறிப்பிடாத இடமாற்றம் மற்றும் விசமத்தனமான தற்காலிக வேலை நீக்கம் ஆகியவற்றை நிறுத்துமாறு மேல் நீதிமன்றம் ஒரு பொருத்தமான இடைக் கால கட்டளையை வழங்கவேண்டும் எனக் கோரப்பட்டது.

மனுவை விசாரணை செய்த யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா இடைக்கால தடை உத்தரவு விதித்திருப்பதோடு எதிர் மனுதாரர்களை நீதி மன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டுள்ளார். (அ-11)

# மாவட்ட கூடைப்பந்தாட்ட அணிக்கு வீரர், வீராங்கனைகள் தெரிவாகினர்

வலி.வடக்கு, நவ. 20

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட அணிகளுக்கான வீரர்,வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.இந்துக்கல்லூரி கூடைப்பந்தாட்டத்திடலில் இடம் பெற்ற பயிற்சியில் அணி தெரிவுசெய்யப்பட்டது.

ஆண்களுக்கான அணியில் தெரிவு செய்யப்பட்டோர் விவரம் வருமாறு:-

ச.தயாளன், ச.செந்தூரன், த.இன்பராஜ், தி.கோசிகன், பா.ஜோன் கில்லர், ச.வாககீசன், ச.பவன், சி.அருணன்(அணியின் உப தலைவர்), க.மிரோஜன், முகுந்தராஜ், செ.சயந்தன், இ.கண்ணா, சு.பிரசன்னா (அணித் தலைவர்), சி.ஜனகன், ர.ஸ்ரீரமணன், சி.வல்லவக்குமரன், த.சிவதாஸ்.

அணியின் முகாமையாளராக ஆ.தேவராசாவும் அணியின் பயிற்றுவிப்பாளராக செ.ரமணனும் இடம்பெறுவர்.

பெண்கள் அணிக்குத் தெரிவுசெய்யப் பட்டவர்களின் விவரம் வருமாறு:-

கோபிகா பத்மாநாதன், வினோஜா எழில்மோகன்(அணித்தலைவி), சம்சுகா இரத்தினசிங்கம், தர்சிகா கேதீஸ்வரன், ஜீதா சிவகுமாரன், கயிலாஜினி தங்கராசா, சானுகா ரவி, சிந்துபாமினி தில்லைநாயகம் (அணியின் உபதலைவி), யசோதா இராஜதுரை, மொரின்ரூபினா அன்ரன் மகேந்திரன், சுகன்யா செல்வநாதன், சிரோமி அன்ரனிராஜ், பிரதீபா செல்லத்துரை, சிந்துஜா நவரத்தினம், பிறைற்றா கருணைநாதன். (1-86)

# கடலக தொழில் நுட்ப பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

வண்ணை, நவ. 20

2009 ஆம் ஆண்டுக்கான கடலக தொழில் நுட்ப பயிற்சி நெறிகளை மேற் கொள்ளவுள்ள மாணவ, மாணவிகளை பதிவுசெய்து கொள்ளும்படி உதவிப் பணிப்பாளர் இ.செபஸ்தியாம்பிள்ளை கேட்டுக்கொண்டுள்ளார்.

ஆழ்கடல் எஞ்சின் தொழில்நுட்ப பாட நெறி, மீனவ தொழில்நுட்ப நெறி, மீனவ தொழில்நுட்ப உதவியாளர் (பெண்கள்) பயிற்சி நெறி மற்றும் கடல் வரைப்படம் வாசித்தல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் சற்லைட் இயக்குதல், கடலில் பாதுகாப்பு முகாமைத்துவப் பயிற்சி நெறிகள் ஆகிய பாட நெறிகளில் தோற்ற விரும்புபவர்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம்.

யாழ்.பாங்ஷால் வீதி, 372ஆம் இலக்க வளாகத்தில் அமைந்துள்ள யாழ்.கடலோட்டு மற்றும் இயந்திரவியல் கல்லூரியில் பதிவுகள் ஏற்றுக் கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (1-160)

# கிளாலியில் காணாமற் போன அதிகாரி எலும்புக் கூடாக மீட்கப்பட்டார்

யாழ்ப்பாணம், நவ. 20

கிளாலிப் பகுதியிருந்து காணாமல் போனதாகக் கருதப்பட்ட படை அதிகாரியின் சடலம் கடந்த 17ஆம் திகதி எலும்புக் கூடாக அப்பகுதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

மத்துகம, நவத்துடுவளவைச் சேர்ந்த கப்டன் தர அதிகாரியான கே.எம்.கே.பி. கருணாரத்னவின் சடலம் எனத் தெரிவிக்கப்பட்டது.

பரிசோதனைகளை மேற்கொள்ளவதற்காக மரணமானவரின் எலும்புக் கூடு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். (1-207)

# யோகாசன, தியான வகுப்புகள்

யாழ்ப்பாணம், நவ. 20

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியினர் நடத்தும் யோகாசன, தியான வகுப்புகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு சமிதி மண்டபத்தில் ஆரம்ப மாகவுள்ளன. (202)

# நம்பியார் காலமானார்



சென்னை, நவ.20

பழம் பெரும் வில்லன் நடிகர் எம்.என். நம்பியார் நேற்று மதியம் 1.25 மணியளவில் இயற்கை மரணமானார்.

அவருக்கு வயது 89. உடல்நலக் குறைவு காரணமாக நேற்று முன்தினமிரவு தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர் நேற்று மதியம் மரணமடைந்தார்.

இவர் சுமார் 65 ஆண்டு காலம் தமிழ்த் திரையுலகில் வில்லனாகக் கொடி கட்டிப் பறந்தவர்.

13 வயதில் நாடகத்தில் நடிக்க தொடங்கிய இவர், 1935இல் பக்த ராமதாஸ் எனும் படத்தில் முதன் முதலில் அறிமுகமானார். அந்தப் படத்தில் வில்லனாக நடித்து தொடர்ந்து வில்லன் கதாபாத்திரங்களில் நடித்து வந்தார்.

குறிப்பாக எம்.ஜி.ஆர்., சிவாஜி படங்களில் அதிகளவில் நடித்து புகழ் பெற்றவர். சுமார் ஆயிரம் படங்களில் நம்பியார் நடித்திருக்கிறார்.

இவருடைய மகன் சுகுமாறன் நம்பியார் பா.ஜ.கவில் முக்கிய பிரமுகர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கைப் பிரச்சினையில் தலையிட மத்திய அரசுக்கு உரிமை உண்டு

## பாரதீய ஜனதாக் கட்சியின் இல.கணேசன் சொல்கிறார்



சென்னை, நவ.20

இலங்கைப் பிரச்சினையில் மத்திய அரசு தலையிடுவதற்கு எல்லா வகையி லும் உரிமை உள்ளது. மத்தியில் பாஜக ஆட்சிக்கு வந்தால் ஆறு மாதங்களில் இலங்கைப் பிரச்சினைக் குத் தீர்வு காணப்படும். அதுபோல ஆறு நாள்களில் ராமர் பாலத்தை வரலாற்று சின்னமாக அறிவிப்போம் - என்று தமிழக பா.ஜ.க. தலைவர் இல.கணேசன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்த போதே அவர் இதனைக் கூறினார்.

அப்போது அவர்மேலும்கூறியவைவருமாறு:-

ஈழத்தமிழர்கள் பாதுகாக்கப்பட வேண்டும், இலங்கைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்பதே எங்களது நிலைப்பாடு. தமிழ்நாட்டில் அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை அரசு புறக்கணித்துள்ளது. இது ஒட்டுமொத்த இந்தியாவிற்கே இழுக்காகும். இலங்கைப் பிரச்சினையில் மத்திய அரசு தலையிடுவதற்கு எல்லா வகையிலும் உரிமை உள்ளது.

இலங்கைக்கு நிவாரணப் பொருள்கள் அனுப்புவது யானைப்பசிக்கு சோளப் பொரி போடுவது போலாகும். நிவாரணப் பொருள்களை நாம்தொடர்ந்துஅனுப்பிக்கொண்டிருக்கமுடியாது.

இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு வர விரும்பும் மக்களை அந்த நாட்டு அரசு அனுப்பி வைக்க வேண்டும். மத்திய அரசும், தமிழக அரசும் அவர்களை இன்முகத் துடன் வரவேற்க வேண்டும். போர் முடிந்து சுமூகமான சூழ்நிலை ஏற்பட்ட பிறகு அவர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்பவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

தடைசெய்யப்பட்ட இயக்கம் பற்றி பேசியதற்காக வைகோவைக் கைது செய்தார்கள். அப்படிப் பார்த்தால் 'சிமி' இயக்கம் பற்றி பேசியதற்காக லாலு பிரசாத் யாதவ், முலாயம்சிங், அமர்சிங் ஆகியோரைக் கைதுசெய்ய வேண்டும். மத்தியில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் 6 மாதங்களில் இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்- என்றார்.

# இந்தியாவின் மௌனத்தால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்களையோ மனித உரிமை ஆர்வலர்களையோ வன்னிக்குள் அனுமதிப்பதில்லை.

இதன் காரணமாக தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுகின்றமை குறித்த செய்தி வெளியுலகுக்கு எட்டுவதில்லை.

### உரிமைக்காக போராடும் மக்களை அரசு கொடூரமாக ஒடுக்குகின்றது

தமிழ் மக்கள் மீதான விமானத் தாக்குதலும், ஷெல் வீச்சும் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றன. பல வருடங்களாக தமிழர் தாயகப் பகுதிகள் மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

தற்போதைய இராணுவ நடவடிக்கையால் பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்து காடுகளில் வாழ்ந்து வருகின்றனர்.

தங்களது உரிமைக்காகப் போராடும் மக்களை வேண்டுமென்றே அரசு கொடூரமாக ஒடுக்குகின்றது.

இலங்கை இராணுவம் முன்னரங்குகளில் கடும் இழப்புகளை சந்திக்கின்றது. இந்த இழப்புகளை ஈடு செய்வதற்கு வேறு மாவட்டங்களிலிருந்து இராணுவத்தினர் கிளிநொச்சியை சுற்றியுள்ள பகுதிகளுக்கு கொண்டு வரப்படுகின்றனர்.

இராணுவத்தினர் பலர் தப்பியோடியுள்ளனர். இவ்வாறு தப்பியோடிய பின்னர் பிடிபட்டவர்களை வைத்தே 61 ஆவது படைப்பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

அப்பாவித் தமிழர்களைக் கொலை செய்யவில்லை என இந்தியப் பிரதமருக்கு இலங்கை அரசு தெரிவித்துள்ளமை உண்மையல்ல.

பொதுமக்கள் மீதான தாக்குதல் குறித்த செய்திகளை போதிய ஆதாரங்களுடன் நாங்கள் அனுப்பியுள்ளோம். எமது பகுதியில் செயற்பட்ட சர்வதேசப் பிரதிநிதிகளுக்கு இது நன்கு தெரியும்.

### இலங்கை அரசு இந்தியப் பிரதமரிடம் கூறியது பொய்

அப்பாவி மக்கள் தாக்கப்படும் செய்திகள் வெளியுலகிற்குச் செல்வதை தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளதை இது புலப்படுத்துகின்றது.

கண்மூடித்தனமான தாக்குதல் மற்றும் பொதுமக்கள் தமது சொந்த இடங்களிலிருந்து வெளியேற்றப் படுதல் போன்ற இனப் படுகொலைகளே, தமிழ் நாட்டில் ஈழத் தமிழர் ஆதரவு அதிகரிக்கக் காரணம்.

### ஏனைய நாடுகளின் உதவியுடன் அபிலாஷைகளை வென்றெடுக்க நேரிடும்

இலங்கைத் தமிழ் மக்கள் இலங்கை இராணுவத்தினரால் கடும் துயரங்களை சந்தித்த போதெல்லாம் தமிழ்நாட்டு மக்கள் தமது அரசியல் வேறுபாடுகளை மறந்து தமது ஆதரவை வெளிபடுத்தியுள்ளனர்.

அரசின் ஒடுக்குமுறைகள் தமிழ்நாட்டு மக்களை மாத்திரமல்ல புலம்பெயர்ந்த மக்களையும் கடும் சீற்றத்திற்குள்ளாக்கியுள்ளன.

சிங்கள அரசியல் தலைவர்கள், இராணுவத் தளபதிகள், பௌத்த மதகுருமார்கள் அனைவரும் இராணுவத் தீர்வையே வலியுறுத்துகின்றனர்.

இலங்கை அரசு இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு மாத்திரம் சாத்தியம் எனத் தொடர்ந்தும் நம்பிக் கொண்டிருந்தால், அது ஒடுக்குமுறைக்குள்ளான மக்கள் ஏனைய நாடுகளின் உதவியுடன் தமது அபிலாஷைகளை வென்றெடுக்கும் நிலையை உருவாக்கும் என்றார். (அ-சி)

# மரண அறிவித்தல்

## செல்லையா கனகலிங்கம் (உரிமையாளர், சிங்கப்பூர் போசனசாலை)



புங்குடுதீவு, மூன்றாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி, அரசடி அம்மன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கனகலிங்கம் 17.11.2008 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா மற்றும் செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தங்கராசா- மகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும், கமலாம்பிகை யின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஜெயலட்சுமி மற்றும் இந்திராணி(ஜேர்மனி), குணரட்ணம்(ஜேர்மனி), சறோஜினிதேவி (ஜேர்மனி), சாந்தகுமாரி(ஜேர்மனி), கோணேஸ்வரி (ஜேர்மனி), பிறேமகுமாரி(ஜேர்மனி) ஆகியோரின் அன்புமிகு அண்ணனும், கிருபானந்தர்(ஜேர்மனி), விஜயராஜா (ஜேர்மனி), தன லட்சுமி(ஜேர்மனி), புலேந்திரன்(ஜேர்மனி), வெற்றிவேல் (ஜேர்மனி), யோகசுந்தரம்(ஜேர்மனி) சிவாகரன்(ஜேர்மனி), சரவணபவன், மாலினிதேவி(கனடா), விமலாதேவி, மித்திராதேவி, ஸ்ரீகோணேஸ், பத்மினி, ஜெயந்திமலர்(கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.11.2008) வியாழக்கிழமை பி.ப. 3மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

அரசடி அம்மன் வீதி,
திருநெல்வேலி.

(7993)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கொலைக் குண்டுதாரியுடன் லோஷனுக்குத் தொடர்பாம்

## ஊடக அமைச்சர் செய்தியாளர் மாநாட்டில் தகவல்

கொழும்பு, நவ.20

தற்கொலை குண்டுதாரி ஒருவருடன் தொடர்பு வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரிலேயே ஊடகவியலாளர் லோஷன் கைது செய்யப்பட்டார் - என்று ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்தன நேற்றுக் கூறினார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

ஊடகவியலாளர் லோஷன் தற்கொலை குண்டுதாரி ஒருவருடன் தொடர்பு வைத்திருந்தார் என்ற சந்தேகத்தின் பேரிலேயே சி.ஐ.டியினரால் கைது செய்யப்பட்டார்.

அந்த தற்கொலை குண்டுதாரி சைனைட் உட்கொண்டு தற்கொலை செய்துவிட்டார். அது தொடர்பாக சி.ஐ.டியினர் விசாரணைகளை மேற்கொண்டபோதே லோஷன் அந்த தற்கொலைக் குண்டுதாரியுடன் தொடர்பு வைத்திருந்தமை தெரியவந்தது.

தற்போது லோஷன் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். அவர் நிரபராதி என நிரூபிக்கப்படும் பட்சத்தில் விடுவிக்கப்படுவார் - என்றார். (அ-சி)

# நல்லூர்க்கந்தன் ஆலய தெற்கு வாசலில் புதிய இராஜகோபுரம் அமைக்கும் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ.20

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் தெற்கு வாசலில் புதிய இராஜகோபுரம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த மாத முற்பகுதியில் கந்தசஷ்டி உற்சவத்தின் போது திருக்கல்யாணத் திருவிழாவன்று அதிகாலையில் கோபுரம் அமைப்பதற்கான அடிக்கல் நடப்பட்டது.

மூன்று கோபுரவாசல்களையும் ஆறு அடுக்கு கோபுர அமைப்பையும் கொண்ட உயர்ந்த கோபுரம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருவதாக அறியப்படுகிறது.

தீர்த்தத் தடாகம், பழனிஆண்டவர் இருப்பிடம் என்பனவற்றுக்கு அண்மையாக அடித்தளக் கட்டுமானங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பல லட்சம் ரூபா செலவில் நிறைவேற்றப்பட உள்ள இந்த புனித கோபுர அமைப்புக்குத் தேவையான கட்டடப் பொருள்களை (கல், மண், சீமெந்து, இரும்புக் கம்பி போன்றன) ஆலய நிர்வாகத்தினரால் கொள்வனவு செய்யப்பட்டுவருகின்றன.

இதேவேளை இந்தப் பணிக்கு பொது மக்களில் வசதிபடைத்தவர்களும் கட்டுமான பொருள்களை உபயமாக வழங்க முன் வந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (அ-302)

# ஆசிரியர் தரம் III - நியமனக் கடிதங்கள் யாழ்ப்பாணத்துக்கு தபால் மூலம் அனுப்பப்படும்

அச்சுவேலி, நவ.20

இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை தரம் III நியமனங்களை பெற்றுக் கொள்வதற்கு யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு கல்வி அமைச்சுக்கு சமுகந்தரத் தேவையில்லை. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களது நியமனக் கடிதங்கள் தபால் மூலம் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உறுதிசெய்யப்டும் என கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் கே.முகமதுத்தம்பி உதயனுக்குத் தெரிவித்தார்.

இலங்கைக் கல்வியாளர் சேவை தரம் III நியமனப் பெறுபவர்களின் முதலாம் கட்ட நியமனப்பட்டியல் கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. அவர்களுக்கான நியமனக்கடிதங்கள் 19ஆம் திகதி புதன்கிழமை கொழும்பில் வைத்து கையளிக்கப்பட்டன -

முதலாவது பட்டியலில் விசேட கல்வி முதல் மொழி, இரண்டாம் மொழி, விவசாயம், கணிதம், கிறிஸ்தவம், இந்துசமயம் உள்ளிட்ட துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன -

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களது நியமனக்கடிதங்கள் தயால் மூலம் சம்பந்தப்பட்டவர்களுக்கு கிடைப்பது உறுதி செய்யப்டும். இந்தப் பட்டியலில் இடம் பெறாத பாடத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்குரிய நியமனப் பட்டியல் குறுகிய காலத்தில் கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டு சம்பந்தப்பட்டவர்களுக்கு நியமனம் வழங்கப்படவுள்ளது -

நியமனக்கடிதங்கள் 31.12.2008 ஆம் திகதியிலிருந்து செல்லுபடியாகும் விதத்தில் வழங்கப்பட்டிருக்கின்றன. சம்பந்தப்பட்டவர்கள் புதுவருடத்தில் தமது கடமைகளைப் பொறுப்புக்களை ஏற்பதற்கு வகைசெய்யப்பட்டிருக்கிறது- என்றும் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் மேலும் தெரிவித்தார்.

இலங்கைக் கல்வியாளர் சேவையில் 350க்கும் மேற்பட்டவர்களுக்கு நியமனம் வழங்குவதற்கு திறை சேரி அனுமதி வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. (அ-11)

# மரண அறிவித்தல்



## திருமதி தங்கநாச்சியார் இராமசாமி

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்து வந்தவருமான திருமதி தங்கநாச்சியார் இராமசாமி 18-11-2008 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திய கலாநிதி இராமசாமி அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராசையா - கனகம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கதிரவேலு - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், கனகசபாபதி (செங்குந்தா வீதி), காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரியும், சிவசுப்பிரமணியம் இலங்கம்மா, கனகசபாபதி செல்லம்மா ஆகியோரின் மைத்துனியும், Dr. மங்கையர்க்கரசி, மகேஸ்வரி, கார்த்திகேசன் (உதயன் காரியாலயம்), இராஜராஜேஸ்வரி (ஆசிரியை, Lyceum International School), இராஜயோகேஸ்வரி, இராஜஇராஜேஸ்வரன் (ஆசிரியர், St. Thomas Prep. School), இராஜயோகேஸ்வரன், மகேஸ்வரன், இந்திராணி, சிறீகுமார், அஷ்டலக்சுமி (ஆசிரியை, Wesley College), ஆத்மானந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், Dr.முத்தையா, ஜமீலா, தவலோகநாதன், இந்திரகுமார், அற்புதராணி, வீரலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியாரும், கௌரீஸ்வரி, குருபரன், ரகுபரன், கார்த்திகா, ஹர்சனன், அருஷனன், கௌிகா, ஹரிணி ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரத்ன மலர்ச்சாலையில் வெள்ளிக்கிழமை (21-11-08) அஞ்சலிக்காக வைக்கப்பட்டு சனிக்கிழமை (22-11-08) காலை 10 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று அதனைத் தொடர்ந்து கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*73, 37ஆவது ஒழுங்கை,*
*கொழும்பு - 06.*
T.P: 2362811

தகவல்:
குடும்பத்தினர்.

## மன்னாரில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த நவதீஸ் (வயது 21) என்பவரே இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டவராவார். அன்றைய தினம் அவர் தமது வீட்டில் இருந்த வேளை வெள்ளை வானில் வந்த ஆயுததாரிகளால் கடத்திச் செல்லப்பட்டார் என்று அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். (அ-சி)

## வன்னி அகதிகளுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை அரசின் ஊடாக செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் மேற்பார்வையின்கீழ் இந்த நிவாரணப் பொருள்கள் பகிர்ந்தளிக்கப்படும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

அதேவேளை, நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களுக்கான நிவாரணப் பொருள்கள் லொறிகளில் அனுப்பப்பட்ட போதிலும் ஓமந்தை சோதனை நிலையம் ஊடாக போக்குவரத்து தடைப்பட்டதனால் அந்த லொறிகள் மீண்டும் வவுனியா அரச களஞ்சியசாலைக்கு திரும்பி வந்தன என்றும் கூறப்பட்டது.

## முகமாலை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் அதிகளவான படையினர் சேர்க்கப்பட்டனர் என ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

இதனிடையே, பாதுகாப்பு கண்காணிப்பகம் வெளியிட்ட தகவல்களில், கடந்த மூன்று நாள்கள் இடம்பெற்ற மோதல்களில் 200 படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் 300க்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர் எனவும் -

நூற்றுக்கணக்கான படையினர் கொழும்புக்கு அருகாமையில் உள்ள வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாங்குளம் பகுதியை 63 ஆவது படையணியினர் கைப்பற்றியுள்ளனர் என கடந்த திங்கட்கிழமை தகவல் வெளியிட்ட பாதுகாப்பு அமைச்சு நேற்றுமுன் தினம் அங்கு இடம்பெற்ற மோதல்கள் தொடர்பாக எதுவும் தெரிவிக்கவில்லை - என்றுள்ளது.

## ஐந்து மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்த்தன தொடர்ந்து கூறியவை வருமாறு:-

அடுத்த வருடம் ஜனவரி மாதம் மேல் மாகாணம், வடமேல்மாகாணம், மத்திய மாகாணம், ஊவா மற்றும் தென்மாகாணங்களுக்கான தேர்தலை நடத்த அரசு தீர்மானித்திருக்கிறது.

மேற்படி மாகாணங்களுக்கான தேர்தலை நடத்தக்கூடிய உகந்த தருணம் இது என்பதால் அரசு இத்தீர்மானத்தை எடுத்தது.

ஆனால், எல்லோரும் எதிர்பார்த்தமை போல் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தும் திட்டம் எதுவும் அரசிடமில்லை.

நாடாளுமன்றில் எமக்குப் பெரும்பான்மை இருப்பதால் நாடாளுமன்றத் தேர்தலுக்குச் செல்வதில்லை என்று அரசு முடிவெடுத்தது.

மேற்படி மாகாணங்களுக்கான தேர்தல் நடவடிக்கைகள் தற்போதைய வரவு - செலவுத் திட்டம் அடுத்த மாதம் எட்டாம் திகதி நிறைவேற்றப்பட்டவுடன் ஆரம்பிக்கப்படும்.

மேற்படி மாகாண சபைகள் அனைத்தையும் மீண்டும் நாமே கைப்பற்றுவோம். இதற்கான ஆணையை மக்கள் நிச்சயம் எமக்குத் தருவார்கள்.

பயங்கரவாதத்தை ஒழிக்கும் எமது யுத்தம் வெற்றியடைந்து வருகிறது. இதை மேலும் மேலும் வெற்றிப்பாதையில் இட்டுச்செல்ல இந்தத் தேர்தலில் மக்கள் எமக்கு வழங்கும் ஆணை நிச்சயம் உதவும்.

கிழக்கு சப்ரகமுவ மற்றும் வடமத்திய மாகாணசபைகளுக்கான தேர்தலை மிக நீதியானதாக நடத்தியமைபோல் இந்தத் தேர்தலையும் நீதியானதாக நடத்த நாம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்போம். - என்றார். (அ-சி)

**தேர்தல் திணைக்கள முகாமைத்துவ உதவியாளர் போட்டிப் பரீட்சை வழிகாட்டல் வகுப்பு**

*இன்று(வியாழன்) 11-3 மணி வரை*
*நாளை (வெள்ளி) 9-3 மணிவரை*

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக)

## பூநகரியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு வட்டாரச் செய்திகள் தெரிவிக்கின்றன.

விடுவிக்கப்பட்ட பிரதேசங்களை நோக்கி வருகின்ற மக்கள் தற்காலிகமாக இடைத்தங்கல் முகாம்களில் பராமரிக்கப்பட்டு வருகின்றனர். வெகுவிரைவில் அங்கு சிவில் நிர்வாக மொன்றை நிறுவி, மக்கள் தமது இயல்புவாழ்வை மேற்கொள்ளக்கூடிய நிலை ஒன்றை உருவாக்குவதன் பொருட்டு அரச அதிகாரிகளுடன் கலந்தாலோசிக்கப்படுகின்றது எனவும் பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (அ-சி)

## வன்னி மக்களுக்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்ந்துவருகின்றனர். விடுதலைப்புலிகள் இம்மக்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறுவதைத் தடுக்கும் வண்ணம் ஒரு கடுமையான அனுமதி முறையை அமுல்படுத்தியிருக்கின்றனர்.

இந்திய அரசு அனுப்பும் உணவுப் பொருள்கள் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியின்றி, உதவி மிக அதிகமாகத் தேவைப்படும் மக்களைச் சென்றடைகிறது என்று உறுதிப்படுத்த முடியாது. வன்னியில் சிக்குண்டுள்ள மக்களின் தேவைகளைப் பற்றி கணிப்பீடு செய்து, அங்கு உணவு மற்றும் பிற பொருள்கள் முறையாக விநியோகிக்கப்படுகின்றன என்பதை உறுதி செய்ய, இலங்கை அரசும், விடுதலைப்புலிகள் இயக்கமும் சர்வதேச கண்காணிப்பாளர்களை அங்கு அனுமதிக்கவேண்டும் - என்று தெரிவித்திருக்கிறது. (அ-சி)

## குற்றப்புலனாய்வுத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைக்கு வருமாறு கோரினர் எனவும் இவ்விசாரணையில் தாம் கலந்து கொண்டார் எனவும் அவர் கூறினார்.

தம்மிடம் நடத்தப்பட்ட விசாரணை தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஜேர்மனியில் கடந்த ஜூன் மாதம் இடம்பெற்ற பொங்கு தமிழ் நிகழ்வில் நிகழ்த்திய உரையை மையமாக வைத்து அவர்கள் என்னிடம் கேள்விகள்கேட்டனர். குறிப்பாக இந்த உரையில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசிய விடயங்களில், தமிழ் மக்களின் தலைவர் பிரபாகரன் என்று அந்த உரையில் நான் குறிப்பிட்டமை குறித்து அவர்கள் என்னிடம் விசாரணை நடத்தினர்.

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் வெளிநாடுகளில் நாங்கள் அரசிற்கு எதிராகப் பேசியிருந்தோம் என்றும், இது அரசிற்கு அவதூறை ஏற்படுத்தும் செயற்பாடு எனவும் குற்றம் சுமத்தினர்.

அத்துடன், 'தீபம்' தொலைக்காட்சியில், கடந்த ஜூன் மாதம் உணவுப் பொருள்கள் வன்னிக்கு அரசால் அனுப்பப்பட்டன என்பதை மறுத்து, அந்தப் பொருள்கள் அங்கு அனுப்பப்படவில்லை எனவும், அது உண்மைக்குப் புறம்பானது என்று நான் வழங்கிய செவ்வி குறித்தும் என்னிடம் வினவினர்.

இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களை மூடிமறைப்பதற்காகவே இவ்வாறான அச்சுறுத்தும் வரையிலான விசாரணைகள் நடத்தப்படுகின்றன.

அத்துடன், இலங்கை அரசே மறைமுகமாக - இவ்வாறான மிரட்டல்களை செய்துவருகின்றது என்றே நாம் கருதுகின்றோம்'' - என்றார் கஜேந்திரன்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ். ஜெயானந்தமூர்த்தியும், பி.அரியநேத்திரனும் ஏற்கனவே குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் விசாரிக்கப்பட்டது தெரிந்ததே. (அ-சி)

**கற்சுமி வெளியீடு**

*தரம் 1-5 வரையான மாணவர்களுக்குரிய நவம்பர் மாத இதழ்கள்*




**வெளிவந்து விட்டன**

- 3ஆம் தவணைப் பரீட்சைக்கு ஏற்றவகையில் வெளிவருகிறது.
- இன்றுமுதல் எமது நிறுவனத்திலும் சனி முதல் வழமையான முகவரிடமும் பெறலாம்.

T.P.7442

இப்பத்திரிகை ... உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.11.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org